www.padippakam.com

சாதனைகளின் சரித்திரம்




அன்னை வீரம்மாள்

www.dalithmurasu.com

# தலித் முரசு

சமூக நீதித் திங்களிதழ்
ஜூன் 2006 Vol : 3 - iss : 8
ரூ. 6



## மண்டல் II

தலித் - பிற்படுத்தப்பட்டோர் இணையும் புள்ளி

படிப்பகம்

www.padippakam.com



# தேர்தல் அறிக்கைகள் வெறும் உறுதி மொழியாக மட்டுமே இருக்கக் கூடாது - III

சில நாட்களுக்கு முன்பு பண்டித நேரு இங்கு வந்திருந்தார். அவர் பேசுவதைக் கேட்க, ஏறக்குறைய மூன்று லட்சம் மக்கள் கூடியதாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. நான் நேற்று ஜலந்தர் சென்றிருந்தபோது, இரண்டு லட்சம் மக்கள் கூடியிருப்பார்கள். ஆனால், முப்பதாயிரம் மக்கள் மட்டுமே கூடியதாகப் பத்திரிகைகள் எழுதுகின்றன. காங்கிரஸ் மாநாட்டுக்கு குறைந்தளவே மக்கள் திரண்டிருந்தாலும், மாநாட்டுக்கு ஏராளமானோர் கலந்து கொண்டதாக பத்திரிகைகளில் செய்தி வெளியாகும். அய்ந்து பேர் கூடினால் அய்ம்பது பேர் என்றும், அய்ம்பது பேர் கூடினால் அய்நூறு பேர் என்றும், அய்நூறு பேர் கூடினால் அய்ந்தாயிரம் பேர் என்றும், அய்ந்தாயிரம் பேர் கூடினால் அய்ந்து லட்சம் பேர் என்றும் செய்தி வெளியிடுவார்கள். பத்திரிகையாளர்களின் இத்தகைய விமர்சனங்களை நான் பொருட்படுத்துவதில்லை. மக்கள் அதிகளவில் கூட வேண்டும் என்று நான் எண்ணியதில்லை. நான் விரும்புவதெல்லாம் சாதி இந்துக்களின் வன்கொடுமைகளுக்கு எதிராக, நம்முடைய மக்கள் ஒருங்கிணைந்து போராட வேண்டும் என்றுதான் விரும்புகிறேன். நீங்கள் எவ்வளவு பேர் கூடுகிறீர்கள் என்பது முக்கியமல்ல; நான் சொல்வதை எத்தனை பேர் கேட்கின்றீர்கள் என்பதுதான் முக்கியம்.



ஒவ்வொரு அரசியல் கட்சியும் தங்களின் தேர்தல் அறிக்கையை வெளியிடுகிறது. தாங்கள் ஆட்சிக்கு வந்தால் அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என்று அவை உறுதிமொழி அளித்து வருகின்றன. 'பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு'ம் ஒரு தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளது. காங்கிரஸ் கட்சியும் மிகப் பெரியதொரு அறிக்கையை வெளியிட்டுள்ளது. ஆனால், இதை மக்கள் புரிந்து கொள்வது கடினம் என்று தெரிந்தவுடன், அதை மாற்றி சிறிய அளவில் வெளியிட்டுள்ளனர். அவர்களுடைய தேர்தல் அறிக்கை கொஞ்சம் கொஞ்சமாக சுருங்கி, ஒருநாள் காங்கிரசுக்கென்று தேர்தல் அறிக்கையே இல்லாமல் போய்விடும். நான் அனைத்துக் கட்சிகளுக்கும் சவால்விட்டுச் சொல்கிறேன். நீங்கள் ஒரு குழுவை அமைத்து, எந்தத் தேர்தல் அறிக்கை மிகச் சிறப்பாக இருக்கிறது என்று ஆய்வு செய்யுங்கள். எங்கள் தேர்தல் அறிக்கையே மிகச் சிறந்த ஒன்றாக இருக்கும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. அனைத்துக் கட்சிகளும் தங்கள் தேர்தல் அறிக்கையில் மக்களுக்குப் பலவற்றைச் செய்வதாக உறுதி அளித்துள்ளன. உறுதிமொழி அளிப்பது எளிது. ஆனால், செய்வது கடினம். தேர்தல் அறிக்கைகள் வெறும் உறுதிமொழிகளாக மட்டுமே இருந்துவிடக் கூடாது. அது பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதாக இருக்க வேண்டும். காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை இத்தகைய தன்மையோடு இருக்கின்றதா?...

> **“ வரவிருக்கின்ற தேர்தலில், 'பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு' மூலம் நாம் வேட்பாளர்களை நிறுத்த இருக்கிறோம். பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு, அனைத்து பிற்படுத்தப்பட்ட மக்களுக்கானதொரு அமைப்பாகும். ஒவ்வொரு பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படும். இது குறித்து யாரும் அச்சப்படத் தேவையில்லை. 'சமார்'களும் 'பாங்கி'களும் சமமானவர்களே. நாம் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும்; நமக்கிடையே வேறுபாடுகள் பார்க்கக்கூடாது. ”**

வரவிருக்கின்ற தேர்தலில், 'பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு' மூலம் நாம் வேட்பாளர்களை நிறுத்த இருக்கிறோம். பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு, அனைத்து பிற்படுத்தப்பட்ட மக்களுக்கானதொரு அமைப்பாகும். ஒவ்வொரு பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படும். யாரும் இது குறித்து அச்சப்படத் தேவையில்லை. 'சமார்'களும் 'பாங்கி'களும் சமமானவர்களே. நாம் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும்; நமக்கிடையே வேறுபாடுகள் பார்க்கக்கூடாது. அனைத்து ஆண்களும் பெண்களும் எல்லாவற்றையும் ஒருபுறம் வைத்துவிட்டு, தேர்தல் அன்று வாக்களிக்கச் செல்ல வேண்டும். ஏற்கனவே நம்முடைய வாக்குகள் போதிய அளவுக்கு இல்லை; நாம் போதிய அளவில் வாக்களிக்கவில்லை எனில், அது நமக்கு நல்லதல்ல. நம்மைப் பிரதிநிதித்துவப்படுத்த யாரும் இல்லாமல் போய் விடுவர். தேர்தல் நாள் பட்டியல் சாதியினருக்கு வாழ்வா, சாவா என்பதைத் தீர்மானிக்கும் நாளாகும்.

வரவிருக்கும் தேர்தலில், நமது கூட்டமைப்பின் சின்னம் யானை. நம் மக்களுக்கு எந்தக் குழப்பமும் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் நான் இதைத் தேர்தெடுத்தேன்... பல்வேறு கட்சிகளும் கூட்டணிக்காக நம்மை அணுகியுள்ளன. ஆனால், இதுவரை எதுவும் முடிவாகவில்லை. பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றன. நாம் எந்தக் கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொள்ள வேண்டும் என்பது குறித்து ஒரு முறைக்குப் பலமுறை சிந்திக்க வேண்டியிருக்கிறது. ஆனால், கூட்டணி அமைத்தாக வேண்டிய சூழல் நிலவுகிறது.

இறுதியாக நான் உங்களுக்குச் சொல்ல விரும்புவது என்னவென்றால், ஆயிரக்கணக்கான மக்கள் டில்லி, பஞ்சாப், உத்திரப் பிரதேசம் மற்றும் பல்வேறு இடங்களில் இருந்து என்னிடம் தங்களின் குறைகளை முறையிடுகிறார்கள். சிலர் தாங்கள் பண்ணையார்களால் தாக்கப்படுவதாகவும், இது குறித்து அரசிடம் முறையிட்டால் அதிகாரத்தில் உள்ள சாதி இந்துக்கள், பாதிக்கப்பட்டவர்கள் மீதே நடவடிக்கை எடுப்பதாகவும் சொல்கிறார்கள். இதைப்போன்ற எண்ணற்ற குற்றப்பத்திரிகைகளைத் தனியொருவனாகத் தீர்க்க முடியாது. இதனால், மக்கள் அனைவரும் ஏமாற்றத்துடனேயே திரும்புகின்றனர்.

இத்தகைய பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் ஓர் அலுவலகத்தை டில்லியில் நிறுவ இருக்கிறேன். உங்களின் குறைகளைத் தீர்க்கவும், ஆலோசனை சொல்லவும் ஒருவரை அங்கு நியமிக்க இருக்கிறேன். இதற்கென புது டில்லியில் ஏற்கனவே ஓர் இடத்தை வாங்கிவிட்டேன். இந்த இடம் கூட்டமைப்பின் தலைமை அலுவலகமாகவும் செயல்படும். இவ்விடத்தில் கட்டடத்தை எழுப்ப போதிய பணவசதி இல்லை. எனவே, இந்த உயரிய நோக்கத்தை நிறைவேற்ற, நீங்கள் உங்களால் இயன்ற பணத்தை இம்மய்யத்திற்கு அளித்து உதவுங்கள். இதன் மூலம் நம்முடைய நோக்கம் நிறைவேறும்.

- *முற்றும்*

B R Ambedkar

*28.10.1951 அன்று, லூதியானாவில் ஆற்றிய உரை*




படிப்பகம்

www.padippakam.com



யாழன் ஆதி

புகைப்படம் : 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'



இடஒதுக்கீட்டுக்கு எதிராக போபாலில் தெருவில் செல்வோரின் காலணிகளைத் துடைக்கும் மருத்துவர்கள்

உங்களுக்கான உணவு உருவாக்கப்படுகிறது
எங்கள் கைகளின் தசைநார்களால்

நீங்கள் செல்வதெல்லாம் எங்கள் எலும்புகளை
அடுக்கி சமனாக்கப்பட்ட சாலைகள்

உங்கள் சுவர்களில் கசியும்
ஈரத்தில் தெரியும் எங்கள் வியர்வைத் துளிகள்

அழுக்கு நீக்கிய உங்கள் உடைகளில் படிந்திருக்கும்
எங்கள் கைரேகைகளை பார்க்க முடியாது உங்களால்

உங்களின் கடவுளர்க்கே மழையடிக்காமல்
தடுப்பது எங்கள் கைவேய்ந்த கூரைகள்தான்

உங்கள் சுத்தங்களால் அசுத்தங்களானோம்

இழிவு சுமத்தப்பட்ட எங்கள் தொழில்களால்
மிளிர்கின்றது உங்கள் வாழ்க்கை

இன்றளவும் கனறும்
ஜாதி மதம் வறுமை வன்முறை முதலாளித்துவம்
உங்கள் திறமைகளின் மநுதர்மம்

எங்களுக்கெதிரான உங்கள் போராட்டத்தில்
வெளிப்படுவது
அசிங்கப்படுத்தப்பட்ட எங்கள் தொழில்கள் மட்டுமல்ல
அறிவின் மூலக்கூறுகள் ஏதுமற்ற உங்கள் மூளையும்கூட



படிப்பகம்

**ஜூன் 14**
**சே குவேரா**
**பிறந்த நாள்**



■ அட்டைப்பட வடிவமைப்பு : யாக்கன்
■ இதழ் வடிவமைப்பு :
பிரேமா, ஜெமிமா ஆலிஸ்
■ அலுவலக ஒருங்கிணைப்பு :
ஆர். ஜோன்ஸ், மு. ரமேஷ் குமார்,
சி. ராமன்

www.padippakam.com

# கருவறைத் தீட்டு ஒழிந்தது !

*''இந்துக்களிடையே அர்ச்சகர்கள் ஒழிக்கப்படுவது நல்லது. ஆனால், அது சாத்தியமில்லை எனில், அர்ச்சகர் தொழில் பரம்பரைத் தொழிலாக இருப்பதையாவது ஒழிக்க வேண்டும். இந்து மதத்தவன் என்று தன்னைச் சொல்கிற எந்த சாதியைச் சேர்ந்தவராயினும் - அவருக்கு அர்ச்சகர் ஆகும் உரிமை இருக்க வேண்டும். அர்ச்சகர் தொழிலுக்கான அரசுத் தேர்வு எழுதி, சான்றிதழ் பெறாத எவரும் அர்ச்சகர் தொழில் செய்யக் கூடாது என்று சட்டமியற்ற வேண்டும். சான்றிதழ் பெறாத அர்ச்சகர் நடத்தும் சடங்குகள் செல்லாது என்று அறிவித்துவிட வேண்டும். அர்ச்சகர் அரசு ஊழியராக ஆக்கப்பட வேண்டும். திறமை எள்ளளவும் தேவை இல்லாத ஒரே தொழில் அர்ச்சகர் தொழில் ஒன்றுதான். இந்து அர்ச்சகர் தொழில் மட்டுமே சட்டத்துக்கு உட்படாத ஒரே தொழிலாக இருந்து வருகிறது. இந்துக்களில் அர்ச்சகராக இருக்க, அர்ச்சகர் சாதியில் பிறந்திருப்பதே போதுமானது என்ற நிலை இருப்பதால்தான் இது சாத்தியமாகிறது.*

*இவையெல்லாமே கேவலமாக இருக்கிறது. மக்களின் அறிவையும், ஒழுக்கத்தையும் சீரழிக்க, கடவுள் கட்டவிழ்த்து விட்டுள்ள பெரும் பீடையே அர்ச்சகர் வகுப்பு. நான் மேலே சுருக்கமாகக் கூறியது போன்ற சில சட்ட திட்டங்களால் அர்ச்சகர் வகுப்பைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும். இந்த நடவடிக்கை, பார்ப்பனியத்தை ஒழிக்கவும், பார்ப்பனியத்தின் மறுவடிவமான சாதியை ஒழிக்கவும் துணைபுரியும்.''*

*- டாக்டர் அம்பேத்கர்*

'சூத்திரன் என்றால் ஆத்திரம் கொண்டு அடி' என்றார் பெரியார். தமிழர்கள் மீது சுமத்தப்பட்டிருந்த 'சூத்திர' இழிவை ஒழிக்க – தாம் பதவியேற்ற சில நாட்களிலேயே – ஆத்திரத்தோடு கையெழுத்திட்டிருக்கிறார், தமிழக முதல்வர் மு. கருணாநிதி அவர்கள். ஆம்! 'அனைத்து சாதியினரும் அர்ச்சகராக வேண்டும்' என்ற அரசாணையை தி.மு.க. அரசு நிறைவேற்றி இருப்பதன் மூலம் - பல நூற்றாண்டுகளாக நீடித்திருந்த கருவறைத் தீண்டாமை வேரறுக்கப்பட்டுள்ளது. எந்தக் கட்சியின் தேர்தல் அறிக்கையும் கவனத்தில் கொள்ளாத, பெரியாரின் இம்முக்கிய செயல்திட்டத்தை தேர்தலில் முன்வைத்து, இத்திட்டம் நிறைவேற திராவிடர் கழகம் காரணமாக இருந்ததையும் குறிப்பிட்டாக வேண்டும்.

மே 16, 2006 அன்று இந்த அரசாணை நிறைவேற்றப்படுவதற்கு முன்புவரை, இந்நாட்டின் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் அனைவருமே – சட்டப்படி (விதி 372) 'சூத்திரர்'களாக - 'விபச்சாரி மக்களாகவே' கருதப்பட்டு வந்தனர். இந்த அரசாணை மூலம் தமிழர்கள் மீதான இழிவு சட்டப்படி துடைத்தெறியப்பட்டுள்ளது. சாதி ஒழிப்புப் போராட்டத்தில், குறிப்பிடத்தகுந்த மைல்கல்லாகத் திகழும் இப்புரட்சிகர செயல்பாட்டை நிகழ்த்திக் காட்டிய தமிழக முதல்வருக்கும், திராவிடர் கழகத் தலைவருக்கும் நம் நெஞ்சார்ந்த நன்றி! இது, தமிழர்கள் மட்டும் அல்ல; இந்தியா முழுவதும் உள்ள பார்ப்பனர் அல்லாதோர் அனைவரும் பாராட்டி, வரவேற்றுப் பின்பற்ற வேண்டிய ஒரு முன்மாதிரி செயல் திட்டமாகும்.

கோயில் கருவறையில், பார்ப்பனர் – பார்ப்பனர் அல்லாதார் என்ற முதன்மை முரண்பாடு தீர்க்கப்பட்டு விட்டது. அதற்கடுத்த நிலையில் உள்ள பார்ப்பனர் அல்லாதார் மற்றும் தலித் மக்களுக்கிடையிலான முரண்பாடுகளும் முடிவுக்கு வந்தாக வேண்டும். இல்லை எனில், கோயில்களில் நுழைய ஏற்கனவே உரிமை பெற்றவர்கள் – அதன் நுழைவு வாயிலிலேயே தலித் மக்களுக்கு அவ்வுரிமையை மறுத்து விடுவர். சட்டம் இருந்தாலும், தலித்துகள் கருவறையைத் தீண்ட முடியாத ஆபத்தான நிலை ஏற்பட்டுவிடும். ஒவ்வொரு ஆண்டும் கண்டதேவி தேரோட்டத்தில், சட்டத்திற்குப் புறம்பான தீண்டாமை, திட்டமிட்டு அரங்கேற்றப்படுவதை மறந்துவிட முடியாது. இதை நேர்செய்ய தி.மு.க. அரசு என்ன செய்யப் போகிறது என்பதையும் ஒடுக்கப்பட்ட மக்கள் ஆவலுடன் எதிர்நோக்குகின்றனர்.

நாடு சுதந்திரம் பெற்று 59 ஆண்டுகள் கழித்தும் உயர் கல்வி நிறுவனங்களும், நாட்டின் முக்கிய கேந்திரங்களும் – கோயில் கருவறைகளாகவே காட்சியளிக்கின்றன. அர்ச்சகர் தொழில் போய்விட்டாலும், அய்.ஏ.எஸ். தொழில் போய்விடக்கூடாது என்பதில் குறியாக இருப்பதால்தான், கடந்த 20 நாட்களுக்கும் மேலாக இடஒதுக்கீட்டுக்கு எதிரான போராட்டங்கள் தீவிரப்படுத்தப்படுகின்றன. இந்நிலை மாற, சட்டரீதியாகவே ஜாதி ஒழிக்கப்பட வேண்டும். மேலும் மிக முக்கியமாக, சாதி மறுப்புத் திருமணங்கள் பெருமளவில் ஊக்குவிக்கப்பட்டு, அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளை – சாதியற்றோர் என்று வகைப்படுத்தி, சிறப்பு இடஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும்.

வன்கொடுமைத் தடுப்புச் சட்டங்கள் இருப்பினும், தீண்டாமைக் குற்றங்கள் வெவ்வேறு வடிவங்களில் நிலைப்பெற்றிருப்பதற்கு, அதன் (இந்து) பண்பாட்டு வேர்கள் அழிக்கப்படாததுதான் காரணமாகும். இந்து மதத்தைப் புனரமைத்து, புனிதப்படுத்தும் செயல்கள் தடுத்து நிறுத்தப் படாதவரை, சாதியையும் அதன் வெளிப்பாடான தீண்டாமையையும் முற்றாக ஒழிக்க முடியாது.


தலித் முரசு

Volume : 3 Issue : 8

ஜூன், 2006

10 - 5

•

ஆசிரியர்

புனித பாண்டியன்

ஆசிரியர் குழு

இளங்கோவன்
அழகிய பெரியவன்
யாக்கன்
காவ்யா
விழி.பா. இதயவேந்தன்

•

ஆண்டுக் கட்டணம் : ரூ.100/-
நூலகக் கட்டணம் : ரூ. 200/-
வாழ் நாள் கட்டணம் : ரூ.1000/-

•



தொடர்பு முகவரி

203, ஜெயம் பிரிவு - சித்ரா அடுக்ககம்
9, சூளைமேடு நெடுஞ்சாலை
சென்னை - 600 094

பேசி : 2374 54 73

E-mail : ambedkar@md4.vsnl.net.in
www.dalithmurasu.com



•

Edited and Published by M. Punitha Pandiyan on behalf of Dr. Ambedkar Centre, 203, Jayam Block - Chitra Avenue, 9, Choolaimedu High Road, Chennai - 94, Printed by Y.S. Raj at Harijana Muzhakkam Printers, No. 46, Vizhagathottam, Saidapet, Chennai - 15




படிப்பகம்

www.padippakam.com

# வாக்குமூலம்

"பெட்ரோலியப் பொருட்களின் விலையை மீண்டும் உயர்த்துவதற்கான ஆயத்தப் பணிகளில், அய்க்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தீவிரமாக உள்ளது. இது, பணவீக்கத்திற்கு இட்டுச் செல்லும். 2005 - 2006 ஆம் ஆண்டில் எண்ணெய் நிறுவனத்திடமிருந்து மத்திய அரசுக்கு வரி வருவாயாக ரூ. 48,800 கோடி கிடைத்துள்ளது. மக்களின் தேவையை நிறைவு செய்ய இறக்குமதி செய்யப்படும் எண்ணெய்க்கு, இவ்வாறு மிகக் கடுமையான வரி விதிப்பு செய்யப்படுவதை யாரும் நியாயப்படுத்த முடியாது. எண்ணெய் துறையை பால் சுரக்கும் பசுவாக அரசு கருதக்கூடாது. மேலும், அரசு விதித்த வரிகளின் மூலம் சர்வதேச சந்தையில் வாங்கப்பட்ட விலையைவிட கூடுதலாக அரசு சம்பாதித்துள்ளது. எனவே, விலை உயர்வுக்கு முன்னால் வரி சீரமைப்பு செய்யப்படுவது அவசியமாகிறது. மேலும், பெட்ரோலியப் பொருட்களின் விலை நிர்ணயிப்பை முறைப்படுத்த, பல்வேறு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியுள்ளது. எடுத்துக்காட்டாக, ஒரு பேரல் கச்சா எண்ணெய் 70 அமெரிக்க டாலருக்கு இறக்குமதி செய்யப்படுகிறதென்றால், ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ. 45க்கும், டீசல் ரூ. 32க்கும் நுகர்வோரிடம் விற்கப்பட வேண்டிய அவசியம் என்ன? மக்கள் தலையில் கடும் சுமையை ஏற்ற முனைவது, எந்த வகையிலும் ஏற்கத்தக்கதல்ல.

'பீப்பிள்ஸ் டெமாக்கரசி', இதழ் தலையங்கத்திலிருந்து



'டெக்கான் ஹெரால்டு'

அய்க்கிய முற்போக்குக் கூட்டணியின் ஆட்சியின் கீழ் உருவாக்கப்பட்ட 'தேசிய அறிவு ஆணைய'த்தின் உறுப்பினர்களில் ஒரு சிலரைத் தவிர, மற்றவர்கள் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சம வாய்ப்புகளை உருவாக்கும் முயற்சிகளைத் தடுத்து நிறுத்துவதாகத் தோன்றுகிறது. 'தேசிய அறிவு ஆணையத்தின்' இந்த உறுப்பினர்கள் சில குறிப்புகளைத் தயாரித்து தனிச்சுற்றுக்கு விட்டுள்ளனர். அவை இடஒதுக்கீட்டு எதிர்ப்பு வெளியீடுகளைக் காட்டிலும் வஞ்சகத்தன்மை வாய்ந்ததாக உள்ளன. இந்த உறுப்பினர்கள், ஒரு வேளை 'மநுஸ்மிருதி'யை ஆங்கிலத்தில் கூறுகிறார்கள் போலும். ஓர் அரசால் அமைக்கப்படும் ஆணையத்தின் உறுப்பினர்கள், அரசின் கொள்கையை எதிர்க்கிறார்கள் என்றால், அரசியல் சட்டத்திற்கு மாறாக அறிக்கைகள் வெளியிடுகிறார்கள் என்றால், அது கேவலமானது. இந்த உறுப்பினர்கள் உடனே பதவி விலகியாக வேண்டும்."

து. ராஜா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர், 'நியூ ஏஜ்' இதழில்

'தி இந்து'




## 1003 இவர்களில் யார் திறமையானவர்கள்? 1180



1003 மதிப்பெண்கள் பெற்ற மாணவர் குமார் கோவையில் உள்ள உணவகத்தில் மேசை துடைக்கிறார். தந்தை: இல்லை; தாய் : கூலித் தொழிலாளி; ஊர் : நெல்லை அம்பா சமுத்திரம் - ஊர்க்காடு; பள்ளி : அரசு மேல்நிலைப் பள்ளி, (ஊரில் இருந்து 3 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று படிக்க வேண்டும்)

'மதிப்பெண் அடிப்படையில் உயர் கல்வியில் இடம் கொடுத்தால், குமாருக்கு இடம் கிடைக்குமா? எவ்வித வசதியும் இல்லாமல் படித்து 1003 மதிப்பெண்கள் பெற்ற குமார் திறமையற்றவரா? இடஒதுக்கீடு இல்லாவிட்டால் குமாருக்கு இடம் கிடைக்குமா?

பெரியார் திராவிடர் கழகம் - கோவை, வெளியிட்டுள்ள துண்டறிக்கையிலிருந்து'



1180 மதிப்பெண்கள் பெற்ற மாணவர் பரத்ராம். தந்தை: பட்டதாரி, சென்னை பெர்ட்டிலைசர் நிறுவனத்தில் கூடுதல் மேலாளர் (ஓய்வு). தாய் : பட்டதாரி, இந்தியன் வங்கி ஊழியர் ஊர் : சென்னை; பள்ளி : சகல வசதிகளுடன் கூடிய பிரின்ஸ் மெட்ரிகுலேஷன் முதல்தரப் பள்ளி



படிப்பகம்

www.padippakam.com



# முதல்வர் முன்னுரிமை அளிக்க வேண்டும்


மனிதர் மலத்தை மனிதர் அகற்றும் இழிதொழில் தடை செய்யப்படும் என்றும், அப்பணி செய்பவர்களுக்குத் தகுதியான மாற்றுப்பணி வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் அறிவித்திருப்பது, சமூக நீதியில் அக்கறையுள்ளோர் வரவேற்கப்பட வேண்டிய, மிகச் சிறந்த - இழிவு ஒழிப்புத் திட்டமாகும். தி.மு.க. அரசு பதவியேற்றவுடனேயே பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை ஒன்றன் பின் ஒன்றாக அறிவித்து, அனைத்துத் தரப்பினரின் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளது. இந்நிலையில், முதலமைச்சரின் பார்வைக்கு நாம் சில முக்கிய தலித் பிரச்சினைகளை முன்வைத்து, அவை மீது உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விழைகிறோம்.

1. கடந்த முறை தி.மு.க. அரசு ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, *''பிறப்பால் கிறித்துவராக இருப்பவர் இந்துவாக மாறினால், அவர் ஆதிதிராவிடர் சாதிச் சான்றிதழ் பெறவோ - இடஒதுக்கீட்டுக்குரிய சலுகைகளை அனுபவிக்கவோ தகுதி இல்லை''* (கடிதம் நகல் எண் : 81 / நாள் 19.9.2000) என்றொரு ஆணையை - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் கோலப்பன், இ.ஆ.ப. அவர்கள் மூலம் வெளியிட்டிருந்தது.

கிறித்துவராக இருக்கும் ஒரு தலித், இடஒதுக்கீடு என்ற உரிமையைப் பெற இனி 'இந்து'வாகவும் மாறிவிடக்கூடாது என்று இந்த ஆணை கூறுகிறது. அதே நேரத்தில் 'இந்து'வாக இருக்கும் தலித் அவன் விரும்பும்போது வேறு மதத்திற்கும் செல்ல முடியாது. ஏனெனில், இடஒதுக்கீடு கிடைக்காமல் போய்விடும். இதனால், மதம் மாறும் உரிமை தலித் மக்களுக்கு முற்றிலுமாக மறுக்கப்படுகிறது.

அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரான இந்த ஆணையை ரத்து செய்யக்கோரி, ஏப்ரல் 2002 இல் வேலூர் ஊரிசு கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் அய். இளங்கோவன் உயர் நீதிமன்றத்தில் பொது நல வழக்கைத் தொடுத்தார். சென்னை உயர் நீதிமன்றத்தின் முதல் 'டிவிஷன் பெஞ்ச்' 4.10.2002 அன்று இந்த ஆணைக்கான இடைக்காலத் தடையை வழங்கியது.

மதமாற்றத் தடைச் சட்டத்தை 31.5.2006 அன்று சட்டப்பேரவையில் தி.மு.க. அரசு முழுவதுமாக நீக்கியுள்ளது. மேற்கூறிய ஆணையையும் உடனடியாக ரத்து செய்தாக வேண்டும். இல்லையெனில், மதமாற்றத் தடைச் சட்டம் ரத்து செய்யப்பட்டது முழுமையானதாகாது. தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில், தலித் கிறித்துவர்களுக்கு இடஒதுக்கீடு அளிக்கப்படும் என்ற உறுதிமொழி இடம் பெற்றுள்ளது. இந்த ஆணை ரத்து செய்யப்படாவிட்டால் - இது தேர்தல் வாக்குறுதிகளை மீறுவதாகவும், மதமாற்றத் தடைச்சட்டத்தை திரும்பப் பெற்றது, நகைப்புக்குரியதாகவும் ஆகிவிடும்.



மதமாற்றத்திற்கு எதிரான ஆணை

2. சிறப்பு உட்கூறுத் திட்டமும் (Special Component Plan), பழங்குடியினர் துணைத் திட்டமும் (Tribal Sub Plan) தலித் மக்களின் வாழ்க்கை ஆதாரமாக, உயிர் நாடியாகக் கருதப்படுகிறது. ஆனால், முக்கியத்துவம் வாய்ந்த இத்திட்டத்தை தமிழக அரசும், மத்திய அரசும் கால்பங்கு கூட நிறைவேற்றுவதில்லை. தமிழ் நாட்டில் சிறப்பு உட்கூறுத் திட்டத்தில் வர வேண்டிய ரூ. 2,000 கோடிக்குப் பதிலாக ரூ. 400 கோடிக்குக் கீழாகவே ஆண்டுத்திட்ட நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது. ஆதிதிராவிடர் நலத்துறை உட்பட அனைத்துத் துறை அதிகாரிகளும், திட்டக்குழுவும் - சிறப்பு உட்கூறுத்திட்டம் என்பதைப் பற்றி எதுவும் அறியாமலும், அறிந்திருந்தும் அறியாததுபோலவும் இருந்து வருகின்றன. நிதித் துறையும் திட்ட வளர்ச்சித் துறையும் எதிர்மறையாகவே செயல்பட்டு வருகின்றன.

எனவே, முதல்வர் இதில் தலையிட்டு இப்பிரச்சினையை நேர் செய்வதுடன், தலித் மக்களுக்கு போய்ச் சேர வேண்டிய நிதி முறையாக செலவழிக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க - இதற்கென ஒரு தனித்துறையை ஏற்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்துகிறோம்.

3. தலித் மக்களுக்காக மத்திய அரசு ஒதுக்கிய தொகையை கடந்த கால அ.தி.மு.க. ஆட்சி செலவழிக்காமல் விட்டு விட்டது. கடந்த அய்ந்தாண்டுகளில் இவ்வாறு செலவிடாத தொகை மட்டும் ரூ. 4,869 கோடியாகும். மத்திய அரசு தலித்துகளுக்காகப் பல்வேறு துறைகளுக்கு மொத்தமாக ஒதுக்கிய அளவும், மாநிலங்கள் என்ற பட்டியலில் தமிழகத்திற்கு வழங்கிய தொகையில் முறையாகத் திட்டமிட்டு, தலித் மக்களுக்காக அவைகளைப் பெற்று பயன்படுத்தாமல் - 2001 முதல் 2006 வரை, இத்தொகையை ஜெயலலிதா அரசு செலவிடவில்லை. இதை மத்திய சமூக நீதித்துறை அமைச்சர் மீராகுமாரி அவர்களும் சுட்டிக்காட்டியுள்ளார். தற்பொழுது பொறுப்பேற்றுள்ள தி.மு.க. அரசு தலித் மக்களுக்கு சேரவேண்டிய பங்கை விரைந்து வழங்க நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று கோருகிறோம்.

இலவசத்திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து செயல்படும் அரசு, தலித் மக்களுக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள மத்திய, மாநில அரசுகளின் நிதியை முறையாகவும் விரைவாகவும் அம்மக்களுக்கு வழங்குவதன் மூலம் - அவர்களை அதிகாரப்படுத்துவதற்கும், சுயமரியாதையுடன் வாழவைப்பதற்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும். தமிழக முதலமைச்சர், இதில் தனிக்கவனம் செலுத்துவதன் மூலமே, கடந்த ஆட்சியில் தலித் மக்களுக்கு எதிராக நடைபெற்ற முறைகேடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும். •



படிப்பகம்

www.padippakam.com

இடஒதுக்கீடு பிரச்சனை :

# தலித் - பிற்படுத்தப்பட்டோர் ஒன்றிணைவதற்கான ஓர் அரிய வாய்ப்பு

■ வி.பி. ரவாத்

"நாங்கள் கேட்பது சமத்துவம் அல்ல; எங்களுக்குத் தேவை நேர்மையான பங்கு. சமத்துவம் என்பது சமபங்கு ஆகாது. சமூகத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் உரிய நேர்மையான பங்கு கிடைக்க வேண்டுமெனில், மக்களை சமமாக நடத்த முடியாது. வருமான வரியை எடுத்துக் கொள்ளுங்கள். நாம் ஏன் அனைத்து மக்களுக்கும் ஒரே மாதிரியான வரி விதிப்பதில்லை. பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் ஒரே மாதிரி வரி விதிக்காததற்கு - வரி கட்டும் இரு பிரிவினரின் திறன் வெவ்வேறாக இருப்பதுதான் காரணம். இச்சூழலில், சமத்துவம் என்பது, மிகுந்த மோசடியான பங்களித்தலையே தரும். நேர்மையான பங்கை அளிக்க வேண்டுமெனில் - பலம் பொருந்தியவர்களையும் பலமற்றவர்களையும்; பணக்காரர்களையும் ஏழைகளையும்; அறிவாளியையும் அறியாமையில் வைக்கப்பட்டிருப்பவரையும் ஒருபோதும் சமமாக நடத்த இயலாது."

- டாக்டர் அம்பேத்கர்



உச்ச நீதிமன்றத்தில் 1981இல் ஏ.பி.எஸ்.கே. சங் வழங்கில், நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர், ''திறமை குறித்த பொதுவான வாதங்கள் சற்றுப் பொய்யானவை... ஒன்றிரண்டு 'அரிஜன'ங்களும், 'கிரிஜனங்'களும் (பழங்குடியினர்) அரசுப் பணியில் நுழைந்து விட்டதாலேயே, அரசுப் பணியாளர்கள் அனைவரின் மீதும் முட்டாள்கள் அதிகாரம் செலுத்தும் கேடான நிலை ஏற்பட்டு விட்டது என்பதை எங்களால் ஏற்க முடியாது. நவீன இந்தியாவின் சிக்கல் வேறு இடத்தில் உள்ளது. பழங்குடியினரை விடவும், அவர்களை விட சற்றே மேம்பட்ட நிலையில் இருக்கும் தாழ்த்தப்பட்டவர்களை விடவும், இந்த தர விற்பனையாளர்கள் பல வகையிலும் மிகவும் ஆபத்தானவர்கள். தரம் என்பதற்கும் தகுதி என்பதற்கும் பொருள் என்ன என்ற அடிப்படையான கேள்வி எழுகிறது. சமூகத்தின் உயர் நிலையில் இருப்பவர்கள், பொது மக்கள் மீதான அக்கறையை இழந்துவிட்டனர். அவர்கள் அரசை நடத்தும் தகுதியற்றவர்கள். அரசுப் பணிகளை செய்யும் திறமையற்றவர்கள். உணர்வுள்ள இதயமும், துடிக்கும் அறிவும், மக்களின் கண்ணீரின்பால் அக்கறையும் கொண்ட ஒருவரால்தான், நாட்டின் வளர்ச்சித் தேவைகளை விரைவுபடுத்த இயலும். நேர்மையான அர்ப்பணிப்பு மற்றும் அறிவுசார் நம்பகத்தன்மை போன்றவையே தரம், திறன், தகுதி ஆகியவற்றிற்கான சில அடிப்படைகள்;



படிப்பகம்

www.padippakam.com

'ஆக்ஸ்போர்டு' அல்லது 'கேம்ப்ரிட்ஜ்', 'ஹார்வர்டு' அல்லது 'சிமியானி'ல் பெற்ற பட்டங்கள் அல்ல. வேதனையூட்டும் வகையில், நமது தேர்ந்தெடுக்கும் முறையின் நோக்கம் தெளிவின்றி இருக்கிறது. வசதியான வாழ்நிலையினைப் பெற்று, பெரும்பான்மை மக்களின் துன்பங்கள் குறித்த அக்கறையற்றவர்களைவிட, பிறப்பில் இருந்தே இந்தியாவின் சூழலை, பட்டவர்த்தனமாகப் புரிந்து கொள்ளும் வாழ்நிலையில் இருக்கும் பட்டியல் சாதியினர், கண்டிப்பாகத் தகுதியானவர்கள்.''

இடஒதுக்கீட்டிற்கு எதிராகப் பிரச்சாரம் செய்பவர்களுக்கு, இந்தியாவின் புகழ் பெற்ற நீதித்துறை சீர்திருத்தவாதியான உச்ச நீதிமன்ற நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர் - தகுதி, திறமை பற்றி குறிப்பிட்டுள்ள தீர்ப்புகளைப் பற்றி தெரிந்திருக்காது. உண்மையில், சாதி இந்துக்களும், ஊடகம் மற்றும் வணிகத் துறையில் இருப்பவர்களும் மிகக் குறைந்த அளவிலேயே நூல்களைப் படிக்கிறார்கள். அவர்களுக்கு மனித உரிமைகளைப் பற்றி எந்த அக்கறையும் இல்லை. தங்களுடைய முன்னோர்கள் தலித் மக்களுக்கு இழைத்த கொடுமைகளுக்காகவும் அவர்கள் வருந்துவதில்லை. தலித் மக்கள், பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கெதிரான வன்கொடுமைகள், இன்றளவும் தொடர்கின்றன. ஆனால், யாரும் இது குறித்து விவாதித்து அதற்கெதிராகப் பிரச்சாரங்களை செய்வதில்லை.

குஜராத் பற்றி எரியும்போது, சாதி இந்துக்கள் தெருவிற்கு வந்து போராடவில்லை. 'முஸ்லிம்களுக்கு மருத்துவம் பார்க்காதீர்கள்' என்று அத்துறையைச் சார்ந்த பிரவீன் தொகாடியா எச்சரித்தபோது, மருத்துவத் துறையைச் சார்ந்த எவரும் வெட்கப்பட்டு, அந்த நபரைப் புறக்கணிக்கவில்லை. 1992இல் பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது, இவர்கள் யாரும் தெருவுக்கு வரவில்லை. காஷ்மீரில் இந்துக்கள் படுகொலை செய்யப்பட்டபோதும் இவர்கள் யாரும் தலைகாட்டவில்லை. கடந்த பத்தாண்டுகளாக 'ஷர்மா'க்கள் பெருமளவு கிரிமினல் குற்றங்களை செய்தபோதும் யாரும் கூக்குரலிடவில்லை. சுசில் ஷர்மா முதல் ஷிவானி கொலை வழக்கு வரை, நூற்றுக்கணக்கான 'ஷர்மா'க்கள் குற்றங்களைப் புரிந்து சிறையில் தள்ளப்பட்டுள்ளனர். ஆனால், எந்த சாதி இந்துவும் குற்றங்கள் புரியும் 'ஷர்மா'க்களைக் கண்டிக்கத் தயாராக இல்லை. இத்துணை நாட்களும் இந்த அநீதிகளைக் கண்டு அமைதியாக இருந்துவிட்டு, இன்று இடஒதுக்கீடு என்றதும் மீண்டும் தெருவில் இறங்கிப் போராட வந்துள்ளனர்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இதே சாதி இந்துக்கள், ஆங்கிலேய உயர் அதிகாரிகளின் உதவியுடன் சில தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூகங்களை குற்றப்பரம்பரையினராக்கினர். ஒரு இஸ்லாமியர் உணவுப் பொட்டலத்தைத் திருடி விட்டார் என்பதற்காக, ஒட்டுமொத்த இஸ்லாமிய சமூகமே திருடர்களாகக் கருதப்பட்டது. அதேபோல 'குஜார்' சமூகமும் குற்றப்பரம்பரையினராகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இதைப் பற்றியெல்லாம் சிந்திப்பதற்கு சாதி இந்துக்களுக்கு நேரம் இல்லை; அது அவர்களின் பிரச்சனையும் அல்ல. அவர்கள் தங்களை மட்டுமே ஆளப்பிறந்தவர்களாகக் கருதுகின்றனர். எனவே, மண்டல் குழு பரிந்துரைகள் நடைமுறைப் படுத்தப்பட்டதும், ஊடகங்கள் ஆட்சி நிர்வாகத்துறை இவற்றைப் பயன்படுத்தி, தங்களால் தொடர்ந்து நாட்டை ஆள முடியும் என்று நம்புகின்றனர். மன்னிக்கவும், அதற்கான காலம் கடந்து விட்டது.



இடஒதுக்கீட்டுக்கு அவசரச் சட்டம் கொண்டுவர வலியுறுத்தி, சென்னையில் 23.5.2006 அன்று நடைபெற்ற மனிதச் சங்கிலியில் பங்கேற்ற தலைவர்கள்

திறமை - இன்றைக்கு முக்கிய விவாதப் பொருளாக மாறியுள்ளது. 'திரிவேதி'கள், 'சதுர்வேதி'கள், 'மல்கோத்ரா'க்கள், 'குப்தா'க்கள், 'சங்வி'கள், 'சாவ்லா'க்கள் இவர்கள்தான் - திறமை வாய்ந்த சமூகம் பற்றிப் பேசுகிறார்கள். இவர்கள் சொல்லும் திறமை வாய்ந்த சமூகம் பற்றி யாருக்கும் புரியவில்லை. எனவே, திறமை குறித்த சில உண்மைகளைக் கண்டறிவோம். 'தங்களுடைய மாபெரும் இதிகாசங்களான மகாபாரதத்தையும், ராமாயணத்தையும் எழுதுவதில்கூட இந்துக்கள் தோல்வியடைந்து விட்டனர்' என்று அம்பேத்கர் ஒரு முறை வேடிக்கையாகச் சொன்னார். இவ்விரு இதிகாசங்களையும் வியாசரும், வால்மீகியும்தான் எழுதினர் என்று நமக்கெல்லாம் தெரியும். மூன்றாவது இதிகாசமான நவீன இந்தியாவின் அரசமைப்புச் சட்டம், அம்பேத்கரால் எழுதப்பட்டது. இம்மூவருமே தலித்துகள். சாதி இந்துக்களின் திறமை எங்கே போயிற்று?

உண்மையில், பத்ரிநாத் அல்லது சென்னை, வாரணாசி அல்லது திருப்பதியில் உள்ள மடங்களின் தலைமைப் பதவியை ஒரு பார்ப்பனர்தான் வகிக்கிறார். அப்பதவிகளுக்கெனதிறந்த போட்டிகள் எதுவும் அறிவிக்கப்படுவதில்லை. கிறித்துவர்கள், சீக்கியர்கள் மற்றும் முஸ்லிம்கள் என எல்லா சமூகங்களிலும் யார் வேண்டுமானாலும் - மத குருக்கள் என்று சொல்லப்படும் தலைமைப் பதவியை அடைய முடியும். அதற்கென உள்ள சில நடைமுறைகளில் தேர்ச்சியடைந்தாலே நீங்கள் தலைமைப் பதவியைக் கைப்பற்றி விடலாம். ஆனால், வர்ணாசிரம தர்மம் என்று சொல்லப்படும் இனவெறி தத்துவத்தில் மதகுருவாக ஆவதற்கு, திறமை அடிப்படையிலான இடஒதுக்கீடு இல்லை. ஒரு மதத்தலைவர் என்பவர் அறிவாளியாக மட்டுமல்ல; சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தை மதிக்கத் தெரிந்தவராகவும் இருக்க வேண்டும். ஆனால் இதற்கு மாறாக, இந்து குருமார்கள் இழிவான வார்த்தைகளைப் பயன்படுத்தி வன்மத்தை மூட்டுகிறார்கள். இதுதான் இந்துக்களின் வாழ்வியல் முறை. எப்பொழுதுமே மனதளவில் நேர்மையற்றும் வஞ்சகத் தன்மையோடும் இருந்து கொண்டு, வெளியே தங்களை முற்போக்குவாதிகளாக இந்துக்கள் காட்டிக் கொள்வார்கள். இடஒதுக்கீட்டைப் பற்றி விவாதிக்கும் முற்போக்கு இந்துக்கள் எங்கே போனார்கள்?

தமிழ் நாடு உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்களில், 69 சதவிகிதத்திற்கும் மேலாகவே இடஒதுக்கீடு கடைப்பிடிக்கப்படுகிறது.

சாதி இந்துக்கள் தங்களை மட்டுமே ஆளப்பிறந்தவர்களாகக் கருதுகின்றனர். எனவே, மண்டல் குழு பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டதும், ஊடகங்கள் - ஆட்சி நிர்வாகத்துறை இவற்றைப் பயன்படுத்தி, தங்களால் தொடர்ந்து நாட்டை ஆள முடியும் என்று நம்புகின்றனர். மன்னிக்கவும், அதற்கான காலம் கடந்து விட்டது.



படிப்பகம்

www.padippakam.com

அண்மையில் 'பிரன்ட்லைன்' ஏட்டில் வெளிவந்த அறிக்கையின்படி, இங்கு ஒரே ஒரு நிறுவனம்கூட திறமையின்மையால் பாதிக்கப்பட்டிருப்பதாகச் சொல்ல முடியாது என்று கூறியிருக்கிறது. கேரளா, ஆந்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில்கூட எந்த சமூக எதிர்ப்பும் இன்றி இடஒதுக்கீடு தொடர்கிறது. 'தென்னிந்திய மாநிலங்களில் அதிகளவு இடஒதுக்கீடு இருந்தும், அவை வட மாநிலங்களை விட சிறப்பாக நிர்வகிக்கப்படுகின்றன' என்று புகழ்பெற்ற எழுத்தாளர் காஞ்சா அய்லையா குறிப்பிட்டுள்ளார். இங்கு இடஒதுக்கீட்டுக்கு எதிரான போராட்டங்கள் நடைபெறுவதில்லை. ஆனால், பெங்களூரை வடஇந்தியாவின் நடவடிக்கைகளுக்கான தளமாக மாற்றியதிலிருந்து, அங்கும் இடஒதுக்கீட்டுக்கு எதிரான மோசமான போராட்டங்கள் தொடங்கியிருக்கின்றன.

திறமையற்றவர்களால்தான் திறமை குறித்த விவாதம் நடத்தப்படுகிறது. பத்திரிகை ஆசிரியர்கள் ஒரு காலத்தில் சமூக அக்கறையுடையவர்களாக இருந்தார்கள். ஆனால், இன்று அவர்கள் தங்கள் முதலாளிகளுக்கு கட்டுப்பட்டு கிடக்கிறார்கள். பெரும்பான்மையான பத்திரிகை ஆசிரியர்கள் அரசியல் கட்சிகளுடன் தொடர்பு கொண்டு, தங்களுக்கான காரியங்களை சாதித்துக் கொள்பவர்களாகவே இருக்கிறார்கள். இத்தகைய பத்திரிகை ஆசிரியர்களும், தொலைக்காட்சியில் இடஒதுக்கீட்டுக்கு எதிராக விவாதங்கள் நடத்துவோரும்தான் - இந்த நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக நினைக்கின்றார்களா? நம்முடைய ஆசிரியர்களின் திறமைகளைப் பற்றி நாம் விவாதிப்போம்.



பி.பி. மண்டல்

❝ இடஒதுக்கீடும் நிலச் சீர்திருத்தமும் ஒன்றோடு ஒன்று இணைந்து செல்ல வேண்டும். நிலமற்ற பெரும்பான்மை மக்களின் பிரச்சினையை, நிலச் சீர்திருத்தத்தின் மூலமே மைய நீரோட்டத்திற்குக் கொண்டுவர முடியும். ❞

அரசியல் தொடர்புகளின் மூலமே சிலர் தங்கள் வேலை வாய்ப்புகளைப் பெற்றனர். ஒரு புகழ் பெற்ற வார ஏட்டின் ஆசிரியருக்கு இந்துத்துவா பரிவாரங்களின் பின்னணி இருக்கிறது. அவருக்கு ஆங்கிலத்தில் இரண்டு பக்கங்கள்கூட செய்திக் கட்டுரை எழுதத் தெரியாது. இன்று அவருக்கு கீழ் பணியாற்றும் அப்பெரிய நிறுவனத்தில், எண்ணற்ற திறமை வாய்ந்த துணை ஆசிரியர்களும் செய்தியாளர்களும் புழுங்குவதாக செய்திகள் வந்து கொண்டு இருக்கின்றன. இதே போல, பல்வேறு ஊடக நிறுவனங்களில் திறமை வாய்ந்த செய்தியாளர்களும் ஆசிரியர்களும், அரசியல்வாதிகளின் சூழ்ச்சிக்கு இரையாகி வருகின்றனர்.

ஆனால், நமக்கு திறமையைப் பற்றி அறிவுறுத்துகின்றவர்கள் தங்களுடைய கல்விப் பின்னணியையும் தாங்கள் வகுப்பில் எவ்வளவு மதிப்பெண்கள் பெற்றார்கள் என்பதையும் வெளிப்படுத்தியாக வேண்டும். சமூகத்தின் உணர்வுகளிலிருந்து எழுதுவதாக அவர்கள் சொல்கிறார்கள். ஆங்கிலேயர்களும் அய்ரோப்பிய கல்விமான்களும் இந்தியாவிற்கு வருகை புரிந்து, கிராமங்களுக்குச் சென்று தங்கி, அம்மக்களை மதித்து அவர்களின் பன்முகத் தன்மைகளை வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால், சாதி இந்து அறிவுஜீவிகளின் நேர்மையற்ற தன்மையால் - இங்கே சமூக விஞ்ஞானிகளே உருவாகவில்லை. இந்தியாவின் பத்திரிகை ஆசிரியர்களும், எழுத்தாளர்களும் ஏன் இனவெறியோடு நடந்து கொள்கிறார்கள்? தலித்துகள் தங்கள் வரலாற்றைத் தாங்களே எழுதுவதற்கு ஏன் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்? ஏனெனில், நம்முடைய வரலாறு பார்ப்பனியத்தின் சூழ்ச்சிக்கு ஆட்பட்டுவிட்டது. இந்துக்களின் வாழ்வியல் முறை, சமூக நீதியின் அனைத்துக் கதவுகளையும் மூடிவிட்டது.

சாதி இந்து செய்தியாளர்கள் இந்தியாவை புரிந்து கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. கார்கில் போரின் போது, இந்திய



❝ பாதை தவறிய தலித் - பிற்படுத்தப்பட்டோர் ஒற்றுமை வளர்த்தெடுக்கப்பட வேண்டும். தலித் தலைமையில், ஒடுக்கப்பட்ட அனைத்து சமூகங்களும் - தங்களின் நீண்ட நாள் கனவான ஒற்றுமை குறித்து உணர, சாதி இந்துக்களின் போராட்டம் உதவட்டும். ❞

ராணுவத்தின் அருகில் அமர்ந்து கொண்டு செய்தி வெளியிடுபவர்களால் இந்தியாவை புரிந்து கொள்ள முடியாது. எல்லா மக்கள் மீதும் சாதி இந்து எண்ணங்களைத் திணிப்பதன் மூலமும் நீங்கள் அதைச் செய்ய முடியாது. எந்தவொரு செய்தியாளரும் இந்தியாவின் பன்முகத் தன்மையையும், சமூகப் பிரச்னைகளையும் புரிந்து கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. ஆனால், தொலைக்காட்சிகளுக்கு இதைப் பற்றியெல்லாம் எந்த அக்கறையும் இல்லை.

கடந்த 15 நாட்களாக தொலைக்காட்சியைப் பார்ப்பவர்களுக்கு, அந்தச் செய்தி ஆசிரியர்களின் திறமையைப் பற்றிய கேள்வி எழுந்திருக்கும். நம்முடைய அறைகளில் உட்கார்ந்து கொண்டு 24 மணி நேரமும் பிரமோத் மகாஜன் கதைகளை, எத்தனை வாரத்திற்குதான் பார்த்துக் கொண்டு இருக்க முடியும்? ஓர் இளம் தலைவர் எதிர்பாராத மரணத்தால் இறந்துவிட்டார் என்பது உண்மைதான். ஆனால், அவரை ஒரு மக்கள் தலைவராக எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? இதே அளவுகோலுடன் அவர்கள் கன்னட நடிகரான ராஜ்குமாரைப் பற்றியோ, தமிழ் நாட்டின் எம்.ஜி. ஆரைப் பற்றியோ செய்திகளை வெளியிடவில்லையே! இதே தொலைக்காட்சிகளும் திறமை வாய்ந்த பத்திரிகை ஆசிரியர்களும், இந்தியாவின் புகழ்பெற்ற முன்னாள் குடியரசுத் தலைவர்களான டாக்டர் கே.ஆர். நாராயணன் அவர்களுக்கோ, ஜெயில்சிங்கிற்கோ தங்கள் நாளேடுகளில் ஒரு பக்கத்திலோ அல்லது தொலைக்காட்சியில் அய்ந்து நிமிடங்களோ ஒதுக்கியதில்லை. அவர்கள் எதை நம்புகிறார்களோ அதையே நம்மையும் நம்பச் சொல்வார்கள். நல்ல வேளையாக, அறிவு விபச்சாரம் செய்யும் இந்தப் பத்திரிகையாளர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றவாறு, நாம் இன்னும் வாக்களிக்கத் தொடங்கவில்லை.

பல்வேறு பிற்படுத்தப்பட்ட மக்களையும், தலித் அறிவுஜீவிகளையும் இணைத்து இடஒதுக்கீட்டை திறமைக்கு எதிரானதாகச் சித்தரிக்கிறார்கள். 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏடு அண்மையில்



படிப்பகம்

www.padippakam.com

ஆங்கிலேயர்களும் அய்ரோப்பிய கல்விமான்களும் இந்தியாவிற்கு வருகை புரிந்து, கிராமங்களுக்குச் சென்று தங்கி, அம்மக்களை மதித்து அவர்களின் பன்முகத் தன்மைகளை வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால், சாதி இந்து அறிவுஜீவிகளின் நேர்மையற்ற தன்மையால், இங்கே சமூக விஞ்ஞானிகளே உருவாகவில்லை.

தென்னாப்பிரிக்காவில் நடைபெற்று வரும் சமூக சமத்துவத்திற்கான சட்டப்பூர்வ நடவடிக்கை தொடர்பான ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தது. அந்தச் செய்தியின் சாரம் இதுதான்: நெல்சன் மண்டேலா கறுப்பர்களுக்கு குறிப்பாக எதையும் பெற்றுத்தரவில்லை! இதில் நாம் கவனிக்க வேண்டிய செய்தி என்னவெனில், தன்னுடைய சொந்த மக்களிடம் புகழ் பெற்றிருப்பதைக் காட்டிலும் வெளிநாட்டில் வசிப்பவர்களிடம்தான் மண்டேலா புகழ்பெற்று விளங்குகிறார். அதிகாரத்தில் பங்கேற்பது என்பது, இடஒதுக்கீட்டின் மூலம்தான் சாத்தியமாகும். ஆப்பிரிக்காவை பல ஆண்டுகளாக ஆட்சி செய்து சுரண்டிய வெள்ளையர்கள், எந்தவித எதிர்ப்புமின்றி கறுப்பர் ஒருவரையே தலைவராக நியமித்துக் கொண்டு, தங்களுடைய அதிகாரத்தை நிலைநாட்டி வருகிறார்கள் என்றால், அங்கு மாற்றம் என்பதே நிகழவில்லை என்றுதானே பொருள்.

நெல்சன் மண்டேலா தான் விடுதலை செய்யப்பட்ட பிறகு இந்தியாவிற்கு 1991 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வந்தார். அப்பொழுது இடஒதுக்கீட்டிற்கு எதிராக சாதி இந்துக்கள் மோசமான போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தனர். ஆனால், இப்பிரச்சினை குறித்து நெல்சன் மண்டேலா பேச மறுத்துவிட்டார். மிகத் தெளிவாக, தென்னாப்பிரிக்க கறுப்பர்களின் பிரச்சனையைவிட, மண்டேலாவின் பிரச்சனைதான் பெரிய பிரச்சனையாகப் பேசப்பட்டது. இதன் விளைவு, தென்னாப்பிரிக்க கிரிக்கெட் குழுவில் இன்றளவும் வெள்ளை ஆதிக்கம்தான் நீடிக்கிறது. அதிகார வர்க்கத்திலும் வெள்ளையர்களே ஆதிக்கம் செலுத்துகின்றனர். அதிகார மாற்றம் என்பது, ஒரு பிரதமரிடமிருந்து இன்னொரு பிரதமருக்குச் செல்வதல்ல. மக்களுக்குப் போய்ச் சேரும் அதிகாரம்தான் உண்மையான அதிகார மாற்றம். தென்னாப்பிரிக்க தலைமை இந்தக் கோணத்தில் செல்லத் தவறி விட்டது. தற்பொழுதுள்ள அதிபர் மொபிக்கி, மண்டேலாவைவிட இதைச் சரியாகப் புரிந்து கொண்டுள்ளார் என்று நம்பலாம்.

தென்னாப்பிரிக்காவிற்கு அருகே உள்ள ஜிம்பாப்வே நாட்டில் நிலச்சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டபோது, வெள்ளையர்களின் மனித உரிமை அமைப்புகள் ராபர்ட் முகாபேவுக்கு எதிராகத் திரும்பின. ராபர்ட் முகாபே இனவெறியராகவும் சர்வாதிகாரியாகவும் தூற்றப்பட்டார். ஒவ்வொரு முறையும் அவர் கறுப்பின ஏழைகளுக்கு நிலம் வழங்க முயற்சி செய்தபோதும், பண்ணாட்டு அமைப்புகளால் அவர் கடும் விமர்சனத்திற்கு ஆளாக்கப்பட்டார். பெரும்பாலான ஆதரவுடன் அவர் தேர்தலில் வெற்றி பெற்றபோதும், அவர் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. ஜனநாயகத்தைக்குறைத்து மதிப்பிட்டு, அதைத் தங்களுக்கானதாகப் பயன்படுத்திக் கொள்ளும் மேற்கத்தியவர்களின் வழக்கம் இது.

இடஒதுக்கீடும் நிலச் சீர்திருத்தமும் ஒன்றோடு ஒன்று இணைந்து செல்ல வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நிலமற்ற பெரும்பான்மை மக்களின் பிரச்சினையை, நிலச்சீர்திருத்தத்தின் மூலமே மய்ய நீரோட்டத்திற்குக் கொண்டுவர முடியும். வரலாற்று ரீதியாக இழைக்கப்பட்ட பல்வேறு தவறுகளை சரி செய்வதற்கு, அரசுப் பணிகளிலும் - அதிகார மய்யங்களிலும் போதிய பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும். இத்தகைய பிரதிநிதித்துவம் மக்கள் தொகைக்கேற்ப அமைந்திட வேண்டும். தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள், சாதி இந்து மாணவர்களுடன் போட்டியிட முடியாது என்பது போன்ற பொய் வாதங்கள் ஊடகங்கள் மூலம் திட்டமிட்டுப் பரப்பப்படுகின்றன. ஆனால், பெருமளவிலான தலித்துகள், ஆட்சி நிர்வாகத்தில் சாதி இந்துக்களைவிட சிறப்பாகப் பணியாற்றுகின்றனர் என்பதே உண்மை.

இங்கு நீதிபதி கே.ஜி. பாலகிருஷ்ணன் அவர்களை நினைவு கூறலாம். நீதிபதி பாலகிருஷ்ணனுடைய பெயரை குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் பரிந்துரை செய்தபோது, ஊடகங்கள் இதைக் கண்டித்து கூக்குரலிட்டன. 'தலித்துகள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரில் சிறப்பு வாய்ந்த பல நீதிபதிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நீதித்துறையில் உரிய பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும்' என்று டாக்டர் நாராயணன் எழுதினார். 'பாலகிருஷ்ணன் சிறந்த நீதிபதிதான். இருப்பினும் அவருக்குப் போதிய வயதில்லை என்று பதில் கிடைத்தது.' ஆனால், நீதிபதி பாலகிருஷ்ணன் அவர்களுக்கு உரிய வாய்ப்புகள் அளிக்கப்பட்டிருந்தால், அவர் இந்திய உச்ச நீதிமன்றத்தில் நீண்டநாள் பணிபுரிந்த நீதிபதிகளுள் ஒருவராக இருந்திருப்பார். இதுதான் சூழ்ச்சியாளர்களை அச்சுறுத்துகிறது.

நீதித்துறை தங்களின் கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும் என்று சாதி இந்துக்கள் விரும்புகிறார்கள். பொதுநல வழக்கு என்ற பெயரில், அனைத்து செயல் முறை ஆணைகளையும் நீதிமன்றத் தீர்ப்புகள் மூலம் ஒழித்துவிடலாம் என்று கருதுகின்றனர். பொதுநல வழக்குகளை உருவாக்குவது, சாதி இந்துக்களுக்கு கை வந்த கலை. இத்தகைய பொதுநல வழக்குகள் மூலம் அவர்கள் தலைவர்களாகவும் மாறிவிடுகிறார்கள்.

அண்மையில் 'அவுட்லுக்' ஏடு வெளியிட்டிருந்த ஒரு செய்திக் கட்டுரையில், ஒரு மூத்த தலித் அலுவலர் எப்படிப் பதவி இறக்கம் செய்யப்பட்டார் என்பதை விளக்கியிருந்தது. தலித் மக்களுக்கு எதிரான அநீதிகள் பெருமளவில் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இடஒதுக்கீடு இல்லை என்றால், சாதி இந்துக்கள் திறமையைப் பற்றிப் பேசப்போவதில்லை. அவர்களைப் பொறுத்தவரை, வடஇந்தியப் பார்ப்பனர்களும் அவர்களின் ஒட்டுண்ணிகளான பனியாக்களுமே இந்தியாவை ஆள வேண்டுமென்று விரும்புகின்றனர். அரசியல் சூழல்கள் மாறிவிட்டதால், அவர்கள் கல்வி நிலையங்களைக் குறிவைக்



புதுடில்லியில் உள்ள அகில இந்திய மருத்துவக் கழகத்தின் முன்பு, காவலர்களின் பாதுகாப்பையும் மீறும் - இடஒதுக்கீட்டுக்கு ஆதரவான மூத்த குடிமகன்



படிப்பகம்

www.padippakam.com

**தென்னாப்பிரிக்க கிரிக்கெட் குழுவில், இன்றளவும் வெள்ளையர் ஆதிக்கம்தான் நீடிக்கிறது. அதிகார வர்க்கத்திலும் வெள்ளையர்களே ஆதிக்கம் செலுத்துகின்றனர். அதிகார மாற்றம் என்பது, ஒரு பிரதமரிடமிருந்து இன்னொரு பிரதமருக்குச் செல்வதல்ல; மக்களுக்குப் போய்ச் சேரும் அதிகாரம்தான் உண்மையான அதிகார மாற்றம்.**

கின்றனர். நம்முடைய தொழில் நிறுவனங்களை எல்லாம் மார்வாரிகள்தான் குடும்ப நிறுவனங்களாக நடத்திக் கொண்டிருக்கின்றனர். ராகுல் பஜாஜ் தன்னுடைய குடும்பத்தைச் சார்ந்த ஒருவரைத் தவிர, வேறு எவரையும் திறமையான நபராக அங்கீகரித்து நியமிக்கப் போவதில்லை.

தலித்துகள் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களைப் பொறுத்த அளவில், அவர்களுடைய திறமையை யாரும் சந்தேகிக்க முடியாது. அவர்கள் பல்வேறு வணிக நிறுவனங்களையும் வங்கிகளையும்கூட நடத்தி வருகிறார்கள். மகாராட்டிராவில் உள்ள சித்தார்த்தா வங்கி, கொங்கணியில் உள்ள குன்பி கூட்டுறவு வங்கி, மத்தியப்பிரதேசத்தில் அம்பேத்கர் பெயரில் உள்ள வங்கிகளை எல்லாம் மிக வெற்றிகரமாக நடத்தி வருகின்றனர். ஆனால், வெறும் இரண்டு சதவிகிதமே உள்ள அரசு வேலைவாய்ப்புகளில் மட்டும் திறமை போய்விடும் என்று காலம் முழுக்க இந்துக்கள் கூறி வருகின்றனர். ராஜஸ்தான், குஜராத் மற்றும் மகாராட்டிராவில் பழங்குடியினப் பெண்கள் செய்யும் அற்புதமான பொருட்களை விற்று சாதி இந்துக்கள் பணம் சம்பாதிக்கின்றனர். ஆனால், இந்தத் திறமைக்கு சாதி இந்துக்கள் ஏதும் விருது அளித்துப் பாராட்டுகின்றார்களா?

இடஒதுக்கீட்டை எதிர்த்து திறமை பற்றி பேசும் சாதி இந்துக்களை வன்மையாகக் கண்டிக்க வேண்டும். ஒரு நாட்டை நிர்வாகம் செய்வதற்கு நமக்கு பலவகைப்பட்ட, பன்முகத் திறமைவாய்ந்த மக்கள் தேவை. ஒரு சில பார்ப்பனர்களும், மார்வாரிகளும் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்த முடியாது. நீங்கள் மொழி, மதச் சிறுபான்மையினருக்கு முறையான பிரதிநிதித்துவத்தை வழங்கியாக வேண்டும். தலித் மக்கள், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் பல ஆண்டுகளாக பாகுபாட்டால் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். எனவே, அரசு அவர்கள் மீது சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும்.

இங்கு பிற்படுத்தப்பட்ட மக்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் ஒன்றுள்ளது. தலித் மக்கள் பிற்படுத்தப்பட்ட மக்களை ஆதரிப்பதால், சாதி இந்துக்களின் வெறுப்பை சந்திக்க வேண்டியுள்ளது. மண்டல் குழு பரிந்துரை நடைமுறைக்கு வந்தபோது, தலித் மக்கள் இயல்பாகவே இப்பரிந்துரைகளை ஆதரிப்பதில் முன்னணியில் இருந்தனர்.

அந்த நேரத்தில்தான் தலித் - பிற்படுத்தப்பட்ட - சிறுபான்மை மக்களின் ஒற்றுமை உருவாகத் தொடங்கியது. ஆனால், எதிர்பாராத விதமாக சில அரசியல் தலைவர்கள் குறுகிய எண்ணத்தாலும், சுய நலத்தினாலும் - இந்துத்துவ சதித்திட்டத்திற்கு ஆட்பட்டு விட்டனர். இந்துத்துவ முகாம்களில் பிற்படுத்தப்பட்ட மக்கள் நுழைந்து கொண்டு தலித் மக்களை அச்சுறுத்தத் தொடங்கினர்.

உத்திரப் பிரதேசத்திலும் பீகாரிலும் 'யாதவ'ர்களும், ஆந்திராவில் 'திவாரா'க்களும், உத்திரப்பிரதேசத்திலும் அரியானாவிலும் 'குஜ்ஜார்'களுமாகிய பிற்படுத்தப்பட்ட மக்கள், தங்கள் பார்ப்பன மதத்தலைவர்களின் அடியாட்களாகச் செயல்பட்டனர். ஆனால், தங்களுடைய இழந்த உரிமைகளை மீட்டெடுக்கும் முக்கியப் போராட்டத்திற்கு, ஓர் ஆற்றல் வாய்ந்த தலைமை இல்லாததை உணர்ந்தனர். இடஒதுக்கீட்டுப் போராட்டத்தில், பிற்படுத்தப்பட்ட மக்கள், எந்தத் தயக்கமுமின்றி தலித் மக்களைப் பின் தொடர்ந்து செல்ல வேண்டும். தலித் மக்களுக்கு அம்பேத்கர் இருக்கிறார். புலே அவர்களின் அடையாளச் சின்னமாக விளங்குகிறார். பாபாசாகேப் அம்பேத்கரின் எழுத்துகளால் பிற்படுத்தப்பட்ட மக்கள் மிகுந்த பயனடைவார்கள்.




நிலச்சீர்திருத்தமும் இடஒதுக்கீடும் ஒன்றிணைய வேண்டும்

எனவே, அனைத்து தலித் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களும் ஒன்றிணைந்து, சாதி இந்துக்களை எதிர்த்தாக வேண்டும். பார்ப்பனிய சக்திகள் தங்களின் ஆதிக்கம் தகர்ந்துவிடும் என்று அஞ்சுகிறார்கள். அவர்கள் ஏற்கனவே அரசியல் தளத்தை இழந்துவிட்டார்கள். ஆகவே, சூழ்ச்சி நிறைந்த அரசியலை நடத்துகிறார்கள். எனவே, நாம் விவாதங்களை எழுப்பி சாதி இந்துக்களின் தகுதி - திறமை விவாதத்தை முறியடித்தாக வேண்டும். தலித் மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் மற்றும் பழங்குடியினர் ஒன்றிணைந்து உரிய பதிலைத் தந்தாக வேண்டிய தருணம் இது. திறமை என்பது வேறு ஒன்றுமில்லை; துரோணச்சாரிகளின் பரம்பரை அது. அதற்கான காலம் கடந்துவிட்டது. இன்றைய 21 ஆம் நூற்றாண்டில் துரோணாச்சாரிகளுக்கு சரியான பாடம் புகட்ட வேண்டிய நேரமிது.

இந்நாட்டின் பெரும்பான்மையான மக்கள் அதிகார அமைப்பில் பங்கேற்காத வரை, இந்தியா முன்னேறாது. இடஒதுக்கீட்டை முழுமையாக நடைமுறைப்படுத்தக்கோரி நாம் அரசை நிர்ப்பந்திப்போம். அரசுப் பணிகளில் தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் எத்தனை சதவிகிதம் இருக்கிறார்கள் என்ற விவரத்தை, வெள்ளை அறிக்கையாக அரசு வெளியிட வேண்டும்; ஒவ்வொரு பிரிவின் கீழும் முழு அறிக்கை வேண்டும் என்று வலியுறுத்த வேண்டும். அரசு வகுத்துள்ள இடஒதுக்கீட்டின்படி, 27 சதவிகித பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த அய்.ஏ.எஸ். களும் 17.5 சதவிகித தலித் அய்.ஏ.எஸ்.களும் வேண்டும் என்று கோரிக்கை வைப்போம். இதற்கிடையில் மருத்துவக் கல்லூரி மாணவர்கள், நன்றாகப் படித்து தங்கள் எதிர்காலம் பற்றி சிந்திக்கட்டும்.

மருத்துவ மாணவர்கள் 'பிளாக் மெயில்' செய்தால், அது இந்தியாவின் நலனைப் பாதிக்கும்; அவர்களுக்கு எதிராகவே அது திரும்பும். தமிழ் நாட்டிலுள்ள இடஒதுக்கீட்டில் நீதிமன்றம் தலையிடாத வகையில் அரசமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்த்ததைப் போல, பிற்படுத்தப்பட்ட, தலித், பழங்குடியினர் இடஒதுக்கீட்டையும் முழுவதுமாக இவ்வட்டவணையில் சேர்த்துவிட வேண்டும். கடந்த காலங்களில் பாதை தவறிய தலித் - பிற்படுத்தப்பட்டோர் ஒற்றுமை, இத்தகைய விவாதங்கள் மூலம் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். தலித் மக்கள் தலைமையில் ஒடுக்கப்பட்ட அனைத்து சமூகங்களும் - தங்களின் நீண்ட நாள் கனவான ஒற்றுமை குறித்து உணர, சாதி இந்துக்களின் போராட்டம் உதவட்டும். நாடாளுமன்றத்தில் உள்ள தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட உறுப்பினர்கள், ஆர்த்தெழுந்து போராட வேண்டிய தருணமிது. •

தமிழில் : புலேந்திரன்

நன்றி : countercurrents.org



படிப்பகம்

www.padippakam.com



## மண்ணும் சொல்லும் - மூன்றாம் உலகக் கவிதைகள்

விலை ரூ.115 .

''ஒடுக்குமுறைக்கு எதிரானதோர் அறைகூவல் மட்டுமல்ல சொல்; அது செயலைத் தூண்ட வல்லது. வரலாற்றுடன் தன்னை இணைத்துப் புது யுகத்தை, புதிய வரலாற்றைப் படைக்க வல்லது.

சில்லென்று நெருஞ்சிக் காடே / சிரிக்காதே: / உன் மீது / கால்கள் அல்ல / களைக் கொத்திகளே இனி நடக்கும்.

எங்களைப் / பிராண்டிச் சிவந்த உன் நகங்களை நீட்டாதே / ஏனெனில் / வெட்டப்படுவது இனிமேல் / நகங்களல்ல - / விரல்கள்



■ தமிழாக்கம் : வ. கீதா, எஸ்.வி. ராஜதுரை, ■ பக்கங்கள் : 220 ■ வெளியீடு : அடையாளம், 1205/1, கருப்பூர் சாலை, புத்தாநத்தம் - 621 310 ■ பேசி : 04332 - 273444

●●

## ஈரான் - ஒரு குழந்தைப் பருவத்தின் கதை

விலை ரூ.100

''வரலாற்றையும் அரசியலையும் அனுபவங்களை யும் வரைபடத்தின் நுட்பத்துடனும், எழுத்தின் தீவி ரத்துடனும் சேர்த்து முன்வைக்கும் வரைபட இலக்கியத்தின் மிகச் சிறந்த படைப்புகளில் ஒன்றாக விளங்குகின்ற மர்ஜானே சத்ரபியின் இந்நூல், மொழிபெயர்ப்பின் மூலமாகத் தமிழில் மேற்கொள்ளப்படும் முதல் முயற்சி. ஈரானில் ஒரு சோஷலிச சமூக அமைப்பை நிறுவுவதற்கானப் போராட்டத்தில் உயிர் நீத்தவர்களின் மரபில் வந்த முற்போக்கான குடும் பத்தில் பிறந்து, இசுலாமியப் புரட்சி நடைபெற்ற காலத்தில் அங்கு தனது குழந்தைப் பருவத்தைக் கழித்த ஒரு பெண் என்ற முறையில் சத்ரபியின் அனுபவங்களைச் சித்தரிக்கின்ற இந்நூல், மத அடிப் படைவாதம், மதவெறி, பயங்கரவாதம் ஆகியவற்றுடன் இணைந்தே முன்வைக்கப்படும் ஈரான் பற்றிய பிம்பங்களை உடைத்தெறிகிறது.''




■ ஆசிரியர் : மர்ஜானே சத்ரபி ■ பக்கங்கள் :154 ■ வெளியீடு : விடியல் பதிப்பகம், 11, பெரியார் நகர், மசக்காளிபாளையம் (வடக்கு), கோயம் புத்தூர் - 641 015 ■ பேசி : 0422 - 2576772

●●

## 'தமிழர் முழக்கம்' - சிறப்பு மலர்

ஆண்டுக் கட்டணம் : ரூ. 75

''தீண்டாமை ஒழிய வேண்டுமானால் அதன் பிறப் பிடமான இந்து மதம் அழித்தொழிக்கப்பட வேண்டும். இந்து மதம் சமூக நீதியை நிலைநாட்டும் என்று எதிர்பார்ப்பது வீணானது. ஏனெனில், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் அநீதி, கொடுமை, நேர்மையின்மை ஆகியவற்றின் உருவ மாகவே இந்துமதம் காட்சியளிக்கிறது என்று மாமேதை அம்பேத்கர் குறிப்பிட்டதை நினைவில் கொள்வோம்.''



■ ஆசிரியர் : வேதகுமார் ■ பக்கங்கள் : 60 ■ வெளியீடு : 487, 15 ஆவது குறுக்கு, ஸ்டேஜ் - II, இந்திரா நகர், பெங்களூர் - 560 038 ■ பேசி : 080-25250252

## அம்பேத்கரின் பன்முகம்



விலை ரூ.50

''அம்பேத்கரைப் பற்றிப் பேசுவதும் பட்டியலின மக் களைப் பற்றிப் பேசுவது என்பதும் சாதியம் பேசுவது அல்ல. சாதிய மறுப்புக்குள் போவது என்ற பொருளை உணர்த்த வேண்டும். ஆகவே, அம்பேத்கரைப் பற்றி தெளிவாக அறிய வேண்டுமென்றால் - மீண்டும் மீண்டும் அம்பேத்கர் தீண்டாமை பற்றியோ, சாதியம் பற்றியோ, மனுவைப் பற்றியோ என்னவெல்லாம் எழுதினார் என்று மட்டும் பார்ப்பதை விட்டுவிட்டு, இதற்கு அப் பாற்பட்டு அவர் என்னவெல்லாம் செய்திருக்கிறார் என்று பார்த்தால்தான் பூரண வெளிச்சம் கிடைக்கும்.''

■ தொகுப்பாசிரியர் : டி. தருமராஜன் ■ பக்கங்கள் : 144 ■ வெளியீடு : அம்பேத்கர் ஆய்வு மய்யம், தூய சவேரியர் தன்னாட்சிக் கல்லூரி, பாளையங்கோட்டை - 627 002

●●

## தோழர் மாவோ




விலை ரூ.40

''மார்க்சியத் தத்துவத்தின் பேராசான்களில் ஒரு வரும், மக்கள் சீனப்புரட்சியின் தந்தையுமாகிய மாசேதுங் மறைந்த 1976 ஆம் ஆண்டில் அவரது நினைவைப் போற்றும் வகையில் பல்வேறு நூல்கள் பல மொழிகளில் வெளிவந்தன. புரட்சி யாளர் மாவோ உட்பட, மார்க்சிய ஆசான்களின் வழிகாட்டுதல்கள் வரலாற்றில் இன்றும் உயிர்ப் பானவையே. மேலும், வரலாற்றிற்கு உயிர்ப்பைத் தரவல்லவையும் அவையே.''

■ பக்கங்கள் : 104 ■ வெளியீடு : சூலூர் வெளியீட்டகம், 8, பாலா இல்லம், நஞ்சப்பா குடியமைப்பு, சூலூர், கோயம்புத்தூர் - 641 402

●●




## விடுதலையின் வேர்காணல்

விலை ரூ.75

''தலித் இயக்கங்கள், தலித் தலைமை, தலித் கருத்தி யல், தலித் அரசியல் ஆகியவற்றின் மீது தொடர் விவாதமும், ஆய்வுகளும் தேவை என்பதற்குத் தூண்டு தலாக இந்நூல் வெளியிடப்படுகின்றது. இத்துடன் தலித் இயக்கங்களும், அதன் தலைமைகளும் தாங் கள் கடந்து வந்த பாதையையும், அடியெடுத்து வைக் கின்ற பாதையையும் அலசிப்பார்த்து - ஒரு புதிய பயணத்தைத் தொடரவும் அழைப்பு விடுக்கின்றது. மேலும், பல்வேறு தளங்களில் இயங்குகின்ற தலித் தலைவர்கள் ஒருவருக்கொருவர் தோழமை கொள்ளவும், அக்கறையை வளர்த்துக் கொள்ளவும், குறைந்த பட்ச செயல்திட்டங்களுடன் சேர்ந்து இயங்க வேண்டும் என்ற மனநிலையை உருவாக்கவும் தூண்டுகின்றது.''

■ தொகுப்பு : அன்பு செல்வம் ■ பக்கங்கள் : 256 ■ வெளியீடு : தலித் ஆதார மய்யம், 32, பாரதிதாசன் சாலை, அரசரடி, மதுரை - 625 016 ■ பேசி : 95452 - 2302199



படிப்பகம்

www.padippakam.com

# இடஒதுக்கீடு : வேலைவாய்ப்பு அல்ல

# அதிகாரப்பகிர்வு

■ வி.பி. சிங்



சாதி அமைப்புதான் நாம் வைத்திருக்கும் மிகப் பெரிய இடஒதுக்கீடு. எல்லாமே முறையாக வரையறுக்கப்பட்டிருந்தது. ஒரு பிரிவினர்தான் ஆள வேண்டும்; ஒரு பிரிவினர்தான் அர்ச்சகராக வேண்டும்; ஒரு பிரிவினர் வியாபாரம் செய்ய வேண்டும்; மற்ற பிரிவினர் அடிமை வேலைகளைச் செய்ய வேண்டும். இதுதான் ஒட்டுமொத்த சமூக அமைப்பாக இருந்தது. ஒரு பார்ப்பனர், கடினமான உடலுழைப்புப் பணிகளில் ஈடுபட்டுத் தன்னுடைய வாழ்க்கையை நடத்த வேண்டியதில்லை. தற்பொழுது இந்த நிலைமைகளில் மாற்றங்கள் வரத் தொடங்கி இருந்தாலும், இதற்கு முன்பு அவ்வாறு இருந்ததில்லை. சாதி அமைப்பு முறை உச்சகட்டத்தில் நடைமுறையில் இருந்தபோது, யாருமே மற்றவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட பணிகளைச் செய்ய முடியாது.

அதற்குப் பிறகு சாதிகளுக்கிடையே மேலும் உட்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. நீங்கள் ஒரு நாவிதராக இருந்தால், நீங்கள் ஒரு நாவிதருக்குரிய வேலையைத்தான் செய்ய வேண்டும்; நீங்கள் பொற்கொல்லராக இருந்தால், பொற்கொல்லருக்குரிய வேலையைத்தான் செய்தாக வேண்டும். நீங்கள் ஒரு கிராமத்திற்குச் சென்று அங்குள்ளவர்களிடம் ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்யச்சொன்னால், 'அது என்னுடைய வேலை அல்ல; அவரைச் செய்யச் சொல்லுங்கள்' என்று சொல்வார்கள். சாதி அடிப்படையில் அனைத்து வேலைகளும் பல்வேறு பிரிவினருக்கும் பிரித்தளிக்கப்பட்டன. இது, சமூகத்தில் சீர்கேடுகளை உருவாக்கியது. இந்து சமூகம் விலக்கி வைக்கப்பட்ட ஒரு சமூகமாக ஆகிவிட்டது. ஒன்றிணைந்த சமூகமே நாட்டைப் பலப்படுத்தும். ஆனால், நம் நாட்டின் நிலை வேறாக இருந்தது.

பல்வேறு நிலைப்பட்ட வெறுப்புகளின் அடிப்படையில் இந்தச் சமூகம் அமைந்திருந்தது. தலித் மக்கள் மிக அதிகளவுக்கு வெறுக்கப்பட்டார்கள்; மற்றவர்கள் சகித்துக் கொள்ளப்பட்டவர்களாக இருந்தார்கள். 'தாகூர்'கள் மரியாதைக்குரியவர்களாகவும், பார்ப்பனர்கள் வணங்குதற்குரியவர்களாகவும் கருதப்பட்டனர். இதன் அடிப்படையில் மாபெரும் அநீதிகள் நடந்ததற்குப் பல்வேறு எடுத்துக்காட்டுகளைச் சொல்ல முடியும். நம்மிடையே ஏராளமான 'ஏகலைவன்'கள் உண்டு. இந்நிலையில்தான் தற்பொழுது திறமை என்றொரு கேள்வி எழுந்துள்ளது. ஆனால், நான் கேட்க விரும்பும் கேள்வி இதுதான்: 80 சதவிகித மக்களை சாதியின் பெயரால் சமூகத்தின் மய்யநீரோட்டத்திலிருந்து ஒதுக்கி வைத்திருப்பதைவிட, மிகப் பெரிய திறமைக்கெதிரான ஒரு செயல் இருக்க முடியுமா?

**எண்பது சதவிகித மக்களை சாதியின் பெயரால், சமூகத்தின் மய்யநீரோட்டத்திலிருந்து ஒதுக்கி வைத்திருப்பதைவிட, மிகப் பெரிய திறமைக்கு எதிரான ஒரு செயல் இருக்க முடியுமா?**

இந்தியாவில் ஜவகர்லால் நேரு, இடஒதுக்கீட்டுக்கான அடிப்படையை நிறுவினார். அதன் பிறகு மொரார்ஜி தேசாய் வந்தார்; 'ஜன்சங்' அவருடன் இருந்தது; வாஜ்பாயும், அத்வானியும் அவருடன் இருந்தனர். அவர்கள்தான் மண்டல் குழுவை நியமித்தனர். இறுதியில் ஒரு சுவர் உருவாக்கப்பட்டது. நான் மண்டல் குழு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்



படிப்பகம்

www.padippakam.com

தியதன் மூலம் அந்தச் சுவர்களின்மீது கூரையை அமைத்தேன். அதன்பிறகு, 'நீ என்ன செய்திருக்கிறாய் தெரியுமா?' என்று எல்லோரும் என்னைப் பார்த்துக் கேட்டார்கள். ஆனால், அதற்குப் பிறகு வாஜ்பாய் இன்னொரு படி மேலே சென்று, மேலும் சில அறைகளைக் கட்டினார். தற்பொழுது அர்ஜுன்சிங் அதில் பொருட்களை இட்டு நிறைவு செய்து வருகிறார். இது நீண்ட கால நடைமுறையின் ஒரு பகுதியாகும்.

இத்தகைய நடைமுறையில் ஒவ்வொரு நிலையிலும் கடும் எதிர்ப்புகள் காணப்பட்டன. ஆனால், பணக்காரர்களுக்கு மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தரமான கல்வி குறித்து யாரும் தங்கள் எதிர்ப்புகளைத் தெரிவிப்பது இல்லை. பணக்காரர்களுக்கு மட்டுமே தரமான கல்வியை ஒதுக்கீடு செய்வதன் மூலம் - அவர்கள் நிரந்தரமாக அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான உறுதியை நாம் அளிக்கிறோம். இத்தகையோர் அதிகாரத்திற்கு வந்தால், என்ன மாதிரியான திட்டங்களை உருவாக்குவார்கள் என்பதை எவரும் புரிந்து கொள்ள முடியும்.

அய்.அய்.டி.யையும், அய்.அய்.எம். களையுமே எடுத்துக் கொள்ளுங்களேன். இந்நிறுவனங்களில் எல்லாம் யார் படிக்கிறார்கள்? மிக அதிகளவு கட்டணம் செலுத்தக்கூடிய பணக்கார வீட்டுக் குழந்தைகள்தான் இந்நிறுவனங்களில் படிக்கிறார்கள். இத்தகைய நடைமுறையில், திறமைக்குக் குந்தகம் ஏற்படுவதை எதை வைத்து ஈடுகட்ட முடியும்? திறமை பாழாகும் இத்தகைய இடஒதுக்கீடு குறித்து யாரும் பேசுவதில்லையே! இத்தகைய போக்கு, உயர் கல்வி நிறுவனங்களில் மட்டுமல்ல, ஆரம்பக் கல்வி நிலையிலிருந்தே தொடங்கி விடுகிறது. தரமான கல்வி அளிக்கும் பணக்காரப் பள்ளிகளில் குழந்தைகளை சேர்க்கும்போது, பெற்றோர்களிடம் நேர்காணல் நடத்தப்படுகிறது. அரசுப் பள்ளிகளின் நிலை ஒன்றும் ரகசியமானதல்ல. அரசின் கல்விக் கட்டுமானம் மிக மோசமான நிலையில் உள்ளது.

இங்கிலாந்தில் உள்ள இணக்கமான பள்ளிகளின் தத்துவம்தான் இதற்கான பதிலாக இருக்கும். சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் - பணக்கார, ஏழை, வட்டார அளவிலான குழந்தைகள் - ஒரே பள்ளியில் ஒரேவித கல்வி அளிக்கப்படுகிறது. இத்தகைய இணக்கமான பள்ளிகளைப் போன்று இந்தியாவிலும் நடைமுறைப்படுத்த வேண்டும். அரசு மற்றும் தனியார் பள்ளிகள் ஒரேவித தரத்தையும், பாடத்திட்டத்தையும் பின்பற்ற வேண்டும். தேவை ஏற்பட்டால், அரசு மானியங்கள் வழங்க வேண்டும். இதை அரசு உறுதி செய்யும் நிலையில், தொடக்கப்பள்ளியிலிருந்தே கல்வியில் சீர்மை கடைப்பிடிக்கப்பட்டால், இடஒதுக்கீட்டுக்கான தேவையே இருக்காது. ஆனால், இதற்கு மாறாக தொடக்க நிலையிலிருந்தே பணக்காரர்களுக்கான இடஒதுக்கீடுதான் நீடித்து வருகிறது. இதில் ஒரு ஏழையின் குழந்தை எப்படி போட்டிப்போட முடியும்?

நீங்கள் ஒரு குழந்தையின் தொடக்க நிலையிலிருந்தே அதை அநியாயமாகப் பின்தங்கி இருக்க வைத்து விட்டு, அதற்குப்பிறகு திறமை குறித்து அக்குழந்தைக்கு எதிரான வாதத்தையும் முன்வைக்கின்றீர்கள். நம்முடைய தென்னிந்திய மாநிலங்களில் இடஒதுக்கீடு உள்ளது. இங்கு எந்தவிதத் தகுதியும் குறைந்துவிடவில்லையே! வளர்ச்சிக்கான திறமையை அனுமதிப்பதுதான் திறமைக்கு ஆதரவான முயற்சி. கடந்த காலங்களில் வாய்ப்புகள் மறுக்கப்பட்டவர்களுக்கு, வாய்ப்புகளை வழங்குவதுதான் திறமைக்கு ஆதரவான செயல். இது திறமைக்கு எதிரானது அல்ல. தென் மாநிலங்களில், திறந்த போட்டியில் போட்டியிடும் ஒரு மாணவர் மருத்துவக் கல்லூரியில் 81 சதவிகிதம் பெற்றும், மிகவும் பிற்படுத்தப்பட்ட ஒரு மாணவர்

**பணக்காரர்களுக்காக மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தரமான கல்வி குறித்து, யாரும் தங்கள் எதிர்ப்புகளைத் தெரிவிப்பது இல்லை. இதன் மூலம் அவர்கள் நிரந்தரமாக அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான உறுதியை நாம் அளிக்கிறோம். இத்தகையோர் அதிகாரத்திற்கு வந்தால், என்ன மாதிரியான திட்டங்களை உருவாக்குவார்கள்?**

79 சதவிகிதமும் பெற்றால், திறமை போய்விடும் என்ற கேள்வி எங்கே எழுகிறது? பிற்படுத்தப்பட்ட சாதியினரிடையே - இடஒதுக்கீட்டுப் பிரிவினரிடையே தானே போட்டி ஏற்படும்.

குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் சொல்வதை நான் ஒப்புக் கொள்கிறேன். உற்பத்தியை அதிகரிப்போம். இரட்டிப்பு வேலை பணி செய்வோம். உண்மையில், சிறுபான்மை நிறுவனங்களைப் போல, பிற்படுத்தப்பட்ட மக்களும் தங்களுடைய நிறுவனங்களைத் தொடங்க வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். அதிகளவில் நிறுவனங்கள் இருந்தால், இடஒதுக்கீட்டுப் பிரிவினரில் வரும் மாணவர்களிடம் தேர்ந்த மனித ஆற்றல் குறைவதற்கு வாய்ப்பு இருக்காது.

இடஒதுக்கீட்டினால் சாதி அடையாளங்கள் நிரந்தரமாக நீடிக்கும் என்று சொல்லப்படுகிறது. மண்டல் குழு அறிக்கை தொடர்பாக உச்ச நீதிமன்றம் அளித்த ஒரு தீர்ப்பை நான் நினைவு கூர்கிறேன். இத்தகைய தீர்ப்புகளை யாருமே படிப்பதில்லை. ஒருவர் பிறப்பின் அடிப்படையில் பாதிக்கப்பட்டால், அவருக்கான



படிப்பகம்

www.padippakam.com

நிவாரணம் பிறப்பின் அடிப்படையில்தான் அமைய வேண்டும் என்று அத்தீர்ப்பு சொல்கிறது. இல்லை எனில், நீங்கள் பாதிக்கப்பட்டவர்களை எப்படி அடையாளம் காண்பீர்கள்? எனவே, இடஒதுக்கீடு என்பது உள்ளபடியே சாதியத்தை ஆதரிப்பதாக ஆகாது. ஏனெனில் நிவாரணம் அளிக்க, பாதிப்பு எந்த அடிப்படையில் நிகழ்ந்தது என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறுகிறது.

என்னைப் பொறுத்த அளவில், அரசமைப்புச் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ளவற்றை மட்டும்தான் நாம் நிறைவேற்ற வேண்டும். இதன்மூலம் சிலருக்கு எதிர்வினையான அரசியல் விளைவுகள் ஏற்படும் எனில், அது இயல்பானது. நான் எல்லா இடங்களிலும் சொல்வது இதுதான். நீதி வழங்கப்பட வேண்டும். ஆனால், மக்கள் வாக்களிக்கச் செல்லும்பொழுது அவர்கள் விவசாயிகளை, தொழிலாளர்களை, கைவினை ஞர்களை மறந்து விடுகிறார்கள். தங்கள் சாதிகளை மட்டுமே நினைவில் கொள்கிறார்கள். 'நான் என்னு



அய்.அய்.டி., அய்.ஏ.எம். போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் பிற்படுத் தப்பட்ட மக்களுக்கான 27 சதவிகித இடஒதுக்கீட்டை எதிர்க்கும் ஆதிக்க சாதி மாணவர்களைக் கண்டித்து, கோவையில் 4.5.2006 அன்று 'அனைத்துக் கல்லூரி மாணவர் கூட்டமைப்பு' சார்பாக தொடர் முழக்க ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஆதித் தமிழர் பேரவை சார்பில் வெண்மணி, பெரியார் தி.க. சார்பில் கு. ராமகிருட்டிணன், மார்க்சிய கட்சி சார்பில் சிவஞானம் மற்றும் பலர் பங்கேற்றனர்.

டைய ஜாதிக்கு மட்டும்தான் வாக்களிப்பேன் என்ற போக்கு, வளர்ச்சியின்மைக்கு வழிவகுத்துவிட்டது.

மண்டல் குழு பரிந்துரைகள் பொதுவாக சொல் லப்படுவது போல சாதியமயமானது அல்ல என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். எடுத்துக்காட் டாக, உத்திரப்பிரதேசத்திலும், பீகாரிலும் 'குர்மி' என்ற சாதி பிற்படுத்தப்பட்ட சாதியாகும்; ஆனால், மத்தி யப் பிரதேசத்தில் அல்ல. வடமாநிலங்களில் 'சத்ரி யன் முன்னேறிய பிரிவினர். ஆனால், குஜராத்தில் அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள். எனவே, மண்டல் குழு அறிக்கை, மேல் மற்றும் அடித்தட்டு சாதிகள் என்ற அடிப்படையில் மட்டுமே வகைப்படுத்தப்படவில்லை. பொருளாதார மற்றும் பிற அளவுகோல்களையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துபவர்கள், மண்டல் குழு அறிக்கையைப் படிக்கும்படி நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு குறிப்பிட்ட சமூகம் பிற்படுத்தப்பட்டுள்ளதா, இல்லையா என்று நிறுவுவதற்கு - மண்டல் 36 அளவு கோல்களை வைத்துள்ளார். அதில் பொருளாதார

**ஒருவர் பிறப்பின் அடிப்படையில் பாதிக்கப் பட்டால், அவருக்கான நிவாரணம் பிறப்பின் அடிப்படையில்தான் அமைய வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் சொல்கிறது. இல்லை எனில், நீங்கள் பாதிக்கப்பட்டவர்களை எப்படி அடையாளம் காண்பீர்கள்? எனவே, இடஒதுக்கீடு என்பது சாதியத்தை ஆதரிப்பதாக ஆகாது.**

அளவுகோலும் வைக்கப்பட்டுள்ளது. ஒரு குடும்பம் எத்தகைய வீட்டில் வசிக்கிறது - நல்ல வீடா, குடிசைவீடா; சுய வேலைவாய்ப்புகளை யார் உருவாக்குகிறார்கள் - சந் தைக்கான பொருட்களை யார் உற்பத்தி செய்கிறார்கள்; கல்வித் தகுதி ஆகியவை குறித்தும் இதில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் விளைவு, ஒரு குறிப்பிட்ட சாதி நாட்டின் ஒரு பகுதியில் இடஒதுக்கீடு கோருபவையாகவும், அதே சாதிக்குப் பிற பகுதியில் இடஒதுக்கீடு தேவையற்றதாகவும் இருக்கிறது. காழ்ப் புணர்வினால் யாருமே மண்டல் குழு அறிக்கையைப் படிக்கத் தயாராக இல்லை. அவர்கள் இடஒதுக்கீட்டை எதிர்க்க வேண்டும் என்பதற்காகவே எதிர்க்கிறார்கள்.

இடஒதுக்கீடு என்பது அதிகாரப்படுத்துவது. மண்டல் குழு அரசுப் பணிகளில் இடஒதுக்கீடு வழங்கு வதன் உண்மையான நோக்கம், வெறும் வேலைவாய்ப்பு களை அளிப்பது அல்ல. அதன் உண்மையான நோக் கம் ஆட்சி நிர்வாகத்தில் வாய்ப்புகள் மறுக்கப்பட்ட மக் களை பங்கேற்க வைப்பதும் அதிகாரம் அளிப்பதும்தான். அது மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். இதை நான் சமூகப் புரட்சி என்பேன். பஞ்சாயத்திலிருந்து நாடாளு மன்றம்வரை, வாய்ப்புகள் மறுக்கப்பட்ட பிரிவினர் களுக்கு - அதிகாரம் அளிக்கப்படுகிறது. ஆதிக்க சாதியி னரிடமிருந்து வாய்ப்புகள் மறுக்கப்பட்ட பிரிவு மக்க ளுக்கு, அமைதியான அதிகார மாற்றம் ஏற்பட்டுள்ளது. எனவேதான், நான் இதை சமூகப் புரட்சி என்கிறேன். ஆதிக்க சாதியினர் இத்துணை நூற்றாண்டுகளாகச் செய்தது என்ன? 80 சதவிகித இந்தியாவை பின்தங்கிய நிலையில் வைத்திருக்கிறார்கள். இதை ஏற்றுக் கொள்ளவே முடியாது.

தமிழில் : அமிழ்தினி

நன்றி : 'தெகல்கா'



படிப்பகம்

www.padippakam.com




## கல்வியை மறுக்கும் சான்றிதழ்

பழங்குடியினரின் சமூக, பொருளாதார, கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டிய அரசு, வீழ்ச்சிக்குதான் வழிகாட்டுகிறது. ஓர் இனம் சமூக ரீதியாக முன்னேறுவதற்கு, கல்வி முன்னேற்றமே அடிப்படை. ஆனால், தமிழகத்தின் இருளர்கள் கல்வியில் முன்னேற முடியாமல் தவிக்கின்றனர். பிற சாதியில் எழுத்தறிவு 72 சதவிகிதமாக உள்ளது. ஆனால், இருளர்களின் எழுத்தறிவு வெறும் 12 சதவிகிதம் மட்டுமே. இவர்களுக்கு சாதிச்சான்று மறுக்கப்படுவதுதான் - கல்வியில் முன்னேற பெரும்தடையாக இருக்கிறது. ஆகவே, இருளர் இன மாணவர்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்கக்கோரி - விழுப்புரம் கடலூர் ஆகிய மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் முன்பு 29.5.06 அன்று மாணவர்கள் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

## பிறப்பு உயர் தகுதியாகாது




தீண்டாமைக்கு எதிரான கூட்டு நடவடிக்கை குழு சார்பில், மருத்துவ கல்லூரிகளில் இடஒதுக்கீட்டை வலியுறுத்தி 23.5.2006 அன்று தல்லாகுளத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கழுதைமீது கொடும்பாவி பொம்மையை வைத்தும், 'மெரிட் டவுன்.. டவுன்... என எழுதப்பட்ட வாசகத்தை கழுதைக்கு தின்னக் கொடுத்து நூதன ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். 'பார்ப்பனர்களாகப் பிறப்பதே உயர் தகுதி யல்ல', மருத்துவ கல்வியில் இடஒதுக்கீடு கூடாது - மலம் அள்ள மட்டும் இடஒதுக்கீடா...? என முழங்கியது, பொது மக்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியது. இவ்வார்ப்பாட்டத்தில் ஆ. குருவிஜயன், ரஜினி, நன்மாறன், செண்பகவள்ளி, அருள்சாமி மற்றும் பலரும் பங்கேற்றனர். பூ. சந்திரபோஸ் இவ்வார்ப்பாட்டத்தில் நிறைவுரை நிகழ்த்தினார்.

## மாணவர்கள் ஜாதியை மறுக்க வேண்டும்

ஆதித்தமிழர் மாணவர் பேரவை தொடக்க விழா, கோவை அரசு சட்டக் கல்லூரியில் 17.4.2006 அன்று நடைபெற்றது. ஆதித்தமிழர் மாணவர் பேரவையின் பெயர்ப் பலகையை அவைத் தலைவர் சி. குப்புராசு திறந்து வைத்தார். வழக்கறிஞர் நீலவேந்தன் கொடியேற்றி வைத்தார். நிகழ்ச்சியில் பங்கேற்ற ரா. அதியமான் தனது உரையில், ''சமூக மாற்றத்தில் மாணவர்களுக்கு மிகப் பெரிய பங்கு இருக்கிறது. தமிழகத்தில் 1967 இல் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டம், 1984 இல் நடந்த ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம் போன்ற போராட்டங்களில் மாணவர்களுடைய பங்கு ஆளுகிற அரசையே மாற்றி



அமைத்துள்ளது. குறிப்பாக, சட்டக் கல்லூரி மாணவர்கள் இந்தப் போராட்டங்களில் பெருமளவு பங்களிப்பு செய்துள்ளனர். ஆனால், தற்பொழுது மாணவர்கள் மத்தியில் ஒருதேக்க நிலை மனப்போக்கு நிலவுகிறது. திருச்சி திண்ணியம், ரைட்டம் பட்டியில் மனித மலத்தை தின்ன வைத்த கொடுமையைக் கண்டிக்காத மாணவர்களும், கோவை காளப்பட்டியில் அருந்ததியர் மக்கள் மீது நடந்த ஆதிக்க சாதி வெறி தாக்குதல்களும், பாப்பாப்பட்டியிலும், கீரிப்பட்டியிலும் தேர்தல் நடத்த முடியாத அவலத்தைக் கண்டும் கொதித்தெழ வேண்டிய மாணவர்களும் இன்று அரசியல் கட்சிகள் பின்னாலும், சினிமா நடிகர்கள் பின்னாலும் சுற்றித் திரிவது மிக வேதனையான ஒன்று.

ஆண்டாண்டு காலமாக கல்வி மறுக்கப்பட்ட ஒரு சமூகம் தற்பொழுது கல்வியினுடைய தேவையைப் பற்றி அறிந்து அதை நோக்கிப் பயணித்துள்ளது. எந்த சமூகத்தவர் படிக்கவில்லை என்று சொன்னார்களோ, அந்த சமூகத்தவர் படிக்கிற பொழுது தகுதி திறமையை காரணம் காட்டி அவர்களுக்கு வாய்ப்பு மறுக்கப்படுகிறது. இந்த நிலை மாறவேண்டுமென்றால், சமூகத்தில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும். புரட்சியாளர் அம்பேத்கருடைய தத்துவங்களையும், தந்தை பெரியாருடைய தத்துவங்களையும் மாணவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

மாணவர்கள் அனைவரும் சாதி ஒழிப்புக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, சாதிமறுப்புத் திருமணம் செய்ய முன் வர வேண்டும். அப்பொழுதுதான் சாதியம் ஒழிந்து சமத்துவம் மலரும். ஒடுக்கப்பட்டோருக்கான உரிமைகளை மீட்டெடுக்கிற பணியில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் ஓரணியில் நின்று போராட வேண்டும்'' என்றார் •



படிப்பகம்

www.padippakam.com

# மீள்கோணம்



■ அழகிய பெரியவன்

தமிழகமெங்கும் ஆரவாரக் கூச்சல்கள், வாழ்க எனும் முழக்கங்கள், துதிபாடல்கள், தாக்குதல்கள், விமரிசனங்கள், வாக்குறுதிகள், சூளுரைகள், அறிவிப்புகள், பல்லிளிப்பு, குழைவு, பணிவு... தமிழகத்தின் தேர்தல் முடிந்துவிட்டது! புதிய அரசும் பதவியேற்று, அதிகாரத்தைக் கையில் எடுத்தாயிற்று. ஜனநாயகக் கடமையை ஆற்றும் முகமாகத் தேர்தலில் வாக்களித்த மக்கள் - மிகுந்த எதிர்பார்ப்புடன், கோட்டை இருக்கும் திசை நோக்கி வணங்கிக் காத்திருக்கிறார்கள். வானத்தின் பலகணிகளைத் திறந்து கொண்டு எல்லாம் கொட்டும் என்பது அவர்தம் நம்பிக்கை. இதற்குக் காரணம் உண்டு.

முன்பு நடந்த எல்லா தேர்தல்களை விடவும் இந்தத் தேர்தல் சிறப்பு வாய்ந்தது. போட்டிப் போட்டுக்கொண்டு அனைத்துக் கட்சிகளும் இலவசங்களின் அறிவிப்புகளை வெளியிட்டன. ஒரு மிகை எதார்த்த உலகிலே வாழ்வது போன்ற உணர்வு எல்லாருக்கும் வந்து போனது. அறிவிக்கப்பட்ட இலவசங்களையெல்லாம் தருவதாக இருந்தால், தமிழகத்திற்கு 20 ஆண்டுகளுக்குத் தேவையான நிதி எவ்வளவு ஆகுமோ அவ்வளவு செலவாகும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

அரசின் கருவூலத்திலிருந்தே இந்த இலவசங்களுக்கெல்லாம் நிதி எடுத்து செலவழிக்கப்படுகின்றது. அப்படி இருந்தும் இவைகளை இலவசங்கள் என்று எப்படி அழைக்கிறார்கள் என்று வியப்பாய் இருக்கிறது! என் ஆட்சியிலே நான் இதை வழங்கினேன், அதை வழங்கினேன் என்று சொல்லிக் கொள்ளும் இவர்கள், தமது சொந்தப் பணத்தில் எதையும் செய்வதில்லை. மக்களின் வரிப் பணத்தை மக்களுக்கு வழங்கி, தான் வழங்கியதாக உரிமை கொண்டாடுவது ஏமாற்று வேலையன்றி வேறல்ல. இந்த வகையான பரப்புரைகளையும் மக்கள் நம்புகிறார்கள்; அல்லது நம்ப வைக்கப்படுகிறார்கள். இலவச அறிவிப்புகள் ஒரு வகையில் 'போதை மாத்திரை'களைப் போன்றவை. இந்தத் தேர்தலில் வழக்கத்திற்கு மாறாக, மாத்திரைகளின் அளவு அதிகரித்து விட்டது. ஒருவர் மாற்றி ஒருவர் தந்த மாத்திரைகளால் மயக்கத்தின் உச்சத்தில் இருக்கிறான் சாமானியன்.

தேர்தல் அறிக்கைகளின் மிக முக்கிய அறிவிப்புகளும், வாக்குறுதிகளும் பாமர மக்களைக் குறிவைத்தே உருவாக்கப்படுகின்றன. நிறைவேறாத கனவுகள், ஏக்கங்கள், விருப்பங்கள் ஆகியவற்றின் அதிகாரப்பூர்வமான வடிவமாக தேர்தல் அறிக்கைகளைப் பார்க்கிறான் பாமரன். இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறவர், ஏமாற்றுகிறவர் ஆகியோருக்கு இடையிலேதான் ஓடி ஓடி வாக்களித்து களைத்துப்போய் கிடக்கிறான் அவன்.

ஆயுள் முழுக்கவும் உழைத்துப் பிழைக்கும்படி நிர்பந்திக்கப்பட்ட அவன், ஒரு சுயமரியாதையுடைய எளிய வாழ்வினை மேற்கொள்வதற்கான அடிப்படை எதிர்பார்ப்புகளையும் கொண்டிருக்கிறான். இவர்களில் ஒரு பாமர தலித்தின் எதிர்பார்ப்புகள், சற்றே மாறுதலுக்கு உரியதாக இருக்கின்றன. வாழ்வியல் தேவைகளுடன், சமூக மாற்றமும் அவன் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. வாழ்வியல் தேவைகளையும், சமூக மாற்றத்தின் வழியே கிடைக்கும் சாதிய ஒடுக்குமுறையற்ற சூழலையும் பெறக்கூடிய கருவியாகவே ஒரு தலித் தேர்தலைப் பார்க்கிறான்.

''இந்துக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இடையில் பிரிவினை இருக்கிறது; தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான கொடுமைகளை - இந்துக்கள் செய்து வருகின்றனர். எனவே, தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுக்கான அரசியல் ரீதியான அங்கீகாரம் பெற்று, அதன் மூலம் இந்துக்களின் அடக்குமுறையிலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகின்றது'' என்கிறார் அம்பேத்கர், தமது 'காந்தியும் காங்கிரசும் தீண்டத்தகாத மக்களுக்குச் செய்தது என்ன?' என்ற நூலில். நேரடியான சலுகைகளை, இலவசங்களை, திட்டங்களை எதிர்பார்ப்பவராக மட்டுமே தலித்துகளை கருத முடியாது. அவர்கள் அரசை

அட்டவணை - I

| | தி.மு.க. கூட்டணி | அ.தி.மு.க. கூட்டணி | தே.மு.தி.க. | பிறர் |
|---|---|---|---|---|
| பழங்குடியினர் | 50 | 32 | 13 | 6 |
| தலித் மக்கள் | 41 | 43 | 9 | 8 |
| வன்னியர் | 50 | 38 | 8 | 4 |
| தேவர் | 38 | 48 | 5 | 8 |



படிப்பகம்

www.padippakam.com

ஆதரிப்பது, எதிர்பார்ப்பது, அணி திரள்வது ஆகியவைகளுக்கு சமூகக் காரணியோடு இணைந்த இரட்டை நோக்கம் இருக்கிறது. தேர்தல் பரப்புரைக்காக மாயாவதி அவர்கள் தமிழகம் வந்தபோது, இந்த மாற்று அம்சத்தை மிகத் தெளிவாகப் பேசியிருக்கிறார்.

''ஒடுக்கப்பட்ட மக்கள் அரசியல் அதிகாரத்தைத் தங்கள் கையில் எடுத்தால் - அவர்களின் சிக்கல்களான வறுமை, வேலையில்லா திண்டாட்டம் ஆகியவை தீரும். இந்தப் போர் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கானப் போர் மட்டுமல்ல, சுய மரியாதையைக் கைப்பற்றுவதற்கானதும்கூட. மக்கள் தொகையில் அய்ம்பது விழுக்காடு கொண்ட ஒடுக்கப்பட்ட மக்கள், அய்ம்ப தாண்டுகள் கடந்த விடுதலைக்குப் பின்பும் - தமது வாழ்வில் எந்த முன்னேற்றத்தையும் காணவில்லை. மாறாக, துன்பங்களையே அனுபவித்து வருகின்றனர். எனவே, சிக்கல்களைத் தீர்ப்பதற்கான முதன்மைச் சாவியை (அரசியல் அதிகாரம்) கையிலெடுப்போம்'' ('இந்து', மே 3, 2006).

மாயாவதி குறிப்பிடுவது போல, தலித் மக்கள் தமது சிக்கல் களைத் தீர்ப்பதற்கான முதன்மைச் சாவியாக அரசியலைக் கருது கிறார்களா என்பது, இந்தத் தேர்தல் முடிவுகளைக் கொண்டு பார்த்தால், தெளிவாகத் தெரியவில்லை. ஏனெனில், இன்னமும் தங்களை ஒரு வாக்கு வங்கியாகத் திரட்டிக் கொள்ளும் அரசியல் விழிப்பற்றே அவர்கள் இருக்கிறார்கள். வேறெந்த மக்கள் திரளைக் காட்டிலும் தமிழகத்திலே தலித் மக்கள் பல்வேறு அரசியல் அமைப்புகளின் வாக்கு வங்கிகளாகவே இருந்து கொண்டிருக்கிறார்கள்.

நடந்து முடிந்த தேர்தலில் பிரச்சாரத்துக்கென ஜெயலலிதா, வேலூரிலிருந்து கிருஷ்ணகிரி வரை ஒருநாள் பயணம் மேற் கொண்டார். நண்பகலுக்குப் பிறகு வேலூரிலிருந்து கிருஷ்ணகிரி வரையிலான பேருந்துப் போக்குவரத்து முற்றிலுமாக நிறுத்தப் பட்டுவிட்டது. கிராமங்கள்தோறும் மக்கள் கூட்டம். சாலை களிலேயே அமர்ந்து கொண்டும், குழந்தைகளுக்குப் பாலூட்டிக் கொண்டும், பேசிக் கொண்டும் காத்திருக்கும் பெண்கள். தம் வாழ்வை மாற்றிட வருகை தரும் தங்கத் தலைவி என்ற மிதப்பில் ஆண்களும், இளைஞர்களும். இப்படியான காட்சிகளையும், மக்கள் கூட்டத்தையும் தலித் கிராமங்களிலேயே அதிகம் பார்க்க முடிந்தது. கருணாநிதி அவர்களும், வேறு சில தலைவர்களும் வந்தபோது கூட, சற்றேறக்குறைய இப்படியான கூட்டத்தைப் பார்க்க நேர்ந்தது.


ஜி. லதா

காலையில் கட்சியைத் தொடங்கி மாலையிலே ஆட்சியைப் பிடித்துவிட வேண்டும் என்ற எண்ணத்துடன் வலம் வந்த நடிகர் விஜயகாந்த் பிரச்சாரத்துக்கு வந்தபோது, சில தலித் கிராமங்களில் இளைஞர் கள் நடிகரின் காருக்கு முன் னால் படுத்து, உருண்டு தமது வெறித்தனமான பற்றை காட்டி யிருக்கிறார்கள். இந்த ரசிக மனோபாவம் தலித் இளைஞர்களுக்கு மட்டும் இல்லை; தலித் பெண்களுக்கும் இருக்கிறது என்பதை சில நாளேடுகள் வெளிச்சம் போட்டுக் காட்டியிருந்தன.

அட்டவணை - II

| 2001 | போட்டியிட்ட இடங்கள் | வென்ற இடங்கள் | வாக்குகள் | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| விடுதலைச் சிறுத்தைகள் | 8 | 1 | 3,54,012 | 1.28 |
| புதிய தமிழகம் | 10 | - | 3,55,171 | 1.30 |
| இந்தியக் குடியரசுக் கட்சி | 1 | 1 | - | - |
| **2006** | **போட்டியிட்ட இடங்கள்** | **வென்ற இடங்கள்** | **வாக்குகள்** | **சதவிகிதம்** |
| விடுதலைச் சிறுத்தைகள் | 9 | 2 | 4,26,321 | 1.29 |
| புதிய தமிழகம் | 168 | 0 | 2,61,000 | 0.79 |
| புரட்சி பாரதம் (தி.மு.க.) | 1 | 1 | 66,338 | - |
| இந்தியக் குடியரசுக் கட்சி | 25 | 0 | - | - |

''முரசு - எங்கள் சின்னம். மாலை நேரங்களில் எங்கள் ஊர் கோயிலருகில், இளைஞர்கள் மேளத்தை அடிப்பதை நீங்கள் பார்க் கலாம். நீண்ட காலமாக எம்.ஜி.ஆருக்கு வாக்களித்து வந்தோம். அண்ணா தி.மு.க.வோ., தி.மு.க.வோ எங்களுக்கு எதையும் வழங்கவில்லை. இந்த முறை விஜயகாந்துக்கு ஒரு வாய்ப்புத் தருகிறோம். எங்கள் வாழ்வில் என்ன மாற்றத்தை அவர் கொண்டு வருகிறார் என்று பார்ப்போம்.'' இப்படிச் சொன்னவர்கள் அவினாசி பக்கமிருக்கும் அருந்ததிய மக்கள்தான் ('இந்து', ஏப்ரல் 26, 2006). இவர்கள் சொன்னபடியே வாக்களிக்கவும் செய்திருப் பார்கள் என்று நம்பலாம்.

மிகவும் துணிச்சலாகவும், கோட்பாட்டின் உறுதியுடனும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, குடியாத்தம் பொதுத் தொகுதியில், ஒரு தலித் தோழரான ஜி. லதா அவர்களை இத்தேர்தலில் நிறுத்தி யிருந்தது. அவருடைய வெற்றி வாய்ப்பு குறித்த நிலைமைகளை ஆய்வு செய்ய ஒரு குழுவுடன் கிராமங்கள்தோறும் சென்றபோது, தலித் மக்களின் நிலைப் பாடுகள் குறித்த இயல்பு நிலையை அறிய முடிந்தது. பெரும்பாலும் அ.தி.மு.க., தி.மு.க. என்கிற ஆதரவு நிலைப்பாடும், புதிதாக விஜயகாந்துக்கு ஆதரவும் தலித் மக்களிடம் பெருகி யிருக்கிறது.

**“ மிகவும் துணிச்சலாகவும், கோட்பாட்டின் உறுதி யுடனும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, குடியாத்தம் பொதுத் தொகுதியில், ஒரு தலித் தோழரான ஜி. லதா அவர்களை இத்தேர்தலில் நிறுத்தியிருந்தது. ”**

''எனக்குபுத்தி தெரிஞ்ச காலத்திலிருந்தே எம்.ஜி. ஆருக்குதான் ஓட்டு! எம்



படிப்பகம்

www.padippakam.com

பேரப்புள்ளைங்களுக்குக்கூட அவரு சின்னத்துக்குத்தான் ஓட்டுப் போடணும்னு சொல்லி வச்சிருக்கிறேன்'' இப்படி ஒரு வயதான தலித் பெண்மணி சொன்னார். தலித் இளைஞர்களோ நடிகரின் புது அரசியல் மோகத்தில் இருந்தார்கள். விடுதலைச் சிறுத்தைகள், புதிய தமிழகம் ஆகியவை வலுவுடன் இருக்கும் பகுதிகள், ஊடுருவியிருக்கும் பகுதிகள் தவிர்த்து - பிற அனைத்துப் பகுதிகளிலும் தலித் மக்களிடையே நிலைமை இதுதான். தலித் மக்கள் இத்தேர்தலில் எப்படி வாக்களித்து இருக்கிறார்கள் என்கிற புள்ளிவிவரத்தை நாம் ஒப்பிடும்போது, இந்த நிலையுடன் பொருந்திப் போகிறது (பார்க்க : அட்டவணை - I).

இந்தப் புள்ளி விவரங்களின் அடிப்படையில் பார்த்தால் - பிற மக்களைக் காட்டிலும், தலித்துகள் தமது வாக்குகளைப் பரவலாக்கி அளிப்பவர்கள் என்பது தெரிகிறது. வேறுவகையில் சொல்வதென்றால், தலித்துகளைக் காட்டிலும் பிறர் தமது அடையாளத்துடனான (சாதிய) கட்சி அமைப்பில் தம்மை ஒருங்கிணைத்துக் கொண்டுள்ளார்கள். நிலவும் ஜனநாயகச் சூழலில், ஒரு மக்கள் திரள், தலித்துகளைப் போலத்தானே பிரிந்து பிரிந்து வாக்களிக்க முடியும் என்றால், தலித்துகளைப் பொறுத்தவரை இது அதிகபட்ச ஜனநாயகம்! அல்லது அவர்களுக்கு உதவாத ஜனநாயகம் என்றே சொல்ல முடியும்!

அன்றாடம் சாதிய கொலை வெறித் தாக்குதலுக்கும், ஒதுக்குமுறைக்கும் ஆட்படும் தலித் சமூகம் தன்னை ஒருங்கிணைத்துக்கொண்டு, ஒரு வாக்கு வங்கியாக தற்காத்துக் கொள்ள வேண்டுமல்லவா? ஏன் அப்படி நடக்கவில்லை?

இத்தேர்தலில் தலித் மக்களின் அரசியல் அமைப்புகளின் நிலை என்ன? பணியாற்றிக் கொண்டிருக்கும் பல்வேறு அமைப்புகள், பெரிய கட்சிகளோடு இணைந்தோ, தனித்தோ, இத்தேர்தலில் நின்றன. விடுதலைச் சிறுத்தைகள் அ.தி.மு.க.வுடனும், புதிய தமிழகம் பி.எஸ்.பி.யுடனும், புரட்சி பாரதம் தி.மு.க.வுடனும், இந்தியக் குடியரசுக் கட்சி சமாஜ்வாடி கட்சியுடனும், வை. பாலசுந்தரம் தலைமையிலான அகில இந்திய அம்பேத்கர் மக்கள் கட்சி பா.ஜ.க.வுடனும் கூட்டணிகளை ஏற்படுத்திக் கொண்டு தேர்தலை சந்தித்தன. தத்தமது நிலைப்பாடுகளுக்கு ஏற்ப வேறுசில தலித் அமைப்புகள், வேறு சில கட்சிகளை ஆதரிக்கவோ, தனித்தே நிற்கவோ செய்தன.

இவற்றில் விடுதலைச் சிறுத்தைகள் மட்டுமே இரண்டு சட்டமன்றத் தொகுதிகளில் வென்றிருக்கிறார்கள். அணிகள் மாறினாலும், தேர்தல்கள் மாறினாலும் தலித் அரசியலின் நிலைமைகள் மாறாமல் இருக்கின்றன. புள்ளிவிவரங்களும் ஒரே மாதிரியான கணக்குகளையே தருகின்றன (பார்க்க : அட்டவணை - II). கடந்த 2001 தேர்தலில் தலித் அரசியல் அமைப்புகளின் வாக்கு விகிதம், இந்த 2006 தேர்தல் வாக்கு விகிதங்களுடன் பெரிய அளவில் மாறிவிடவில்லை. ●

*- விவாதிப்போம்*

## 'தலித் முரசு' வாழ்நாள் கட்டணம் செலுத்திய சமூக நீதிப் போராளிகள்

| | |
|---|---|
| திரு. பல்லட மாணிக்கம்<br>விருத்தாச்சலம் | திரு. என். சிவகுமார்<br>சென்னை |
| திரு. எம்.கே. சுரேஷ்<br>சிதம்பரம் | திரு. எஸ். செல்வமணி<br>சென்னை |
| திரு. ஆர். வீரன்<br>தருமபுரி | திரு. பி. நாகராஜ்<br>சென்னை |
| திரு. டி. கந்தசாமி<br>தருமபுரி | திரு. ஏ. ஆறுமுகம்<br>சென்னை |
| திரு. கே. ராஜா<br>தருமபுரி | திரு. ஏ. பிரகாஷ்<br>சென்னை |
| மருத்துவர் அய்யனார்<br>மதுரை | டாக்டர். எஸ்.ஆர். கண்ணன்<br>விருதுநகர் |
| திரு. எம். சோலைமுத்து<br>சேலம் | திரு. எம். சங்கரன்<br>திண்டுக்கல் |
| திரு. கே.வி.கே. சாமி<br>தருமபுரி | திரு. ஆறுமுகம்<br>சென்னை |
| மருத்துவர் கே. நெடுமாறன்<br>தருமபுரி | திரு. ஆர். ராஜ்குமார்<br>சென்னை |
| திரு. ரா. கண்ணதாசன்<br>தஞ்சாவூர் | திரு. எம். முருகேசன்<br>சென்னை |
| திரு. பி. மகாலட்சுமி<br>சென்னை | டி. அந்தோணி ராஜ்<br>மதுரை |




# டாக்டர் அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு

தனஞ்செய்கீர் எழுதிய 'டாக்டர் அம்பேத்கர் வாழ்வும் பணியும்' என்ற நூல், 1954 மே மாதம் வெளியிடப்பட்டது. டாக்டர் அம்பேத்கரின் அதுநாள் வரையிலான வாழ்க்கை வரலாற்றை முழுமையாகவும், உறுதியான சான்றுகளின் அடிப்படையிலும் எழுதப்பட்டுள்ள முதலாவது நூல் இதுவேயாகும்.

ஆங்கில மூலம் : தனஞ்செய்கீர்
தமிழாக்கம் : க. முகிலன்
வெளியீடு : மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி
பக்கங்கள் : 900
விலை ரூ. 325/-
அம்பேத்கரின் 40 அரிய புகைப்படங்களை உள்ளடக்கியது.

'தலித் முரசு' அலுவலகத்தில் கிடைக்கும்




படிப்பகம்

www.padippakam.com





# முதல்வர் கலைஞருக்கு நன்றி!



ஆதித்தமிழர் பேரவையின் கோரிக்கையை ஏற்று, ''மனித மலத்தை மனிதன் அகற்றும் இழிதொழில் தடை செய்யப்படும். அப்பணி செய்பவர்களுக்குத் தகுதியான மாற்றுப்பணி வழங்கப்படும்'' என சட்டப் பேரவையின் ஆளுநர் உரையில் அறிவித்த முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழக அரசிற்கும்

**நன்றி நன்றி நன்றி**

# ஆதித்தமிழர் பேரவை

51, மருதமலைச் சாலை, கல்லூரிபுதூர், கோவை - 41
94430 - 84642, 94444 - 24113

(வி-ம்)

www.padippakam.com

# சாதனைகளின் சரித்திரம் அன்னை வீரம்மாள்

வெவ்வேறு வர்க்கங்களைச் சேர்ந்த தத்துவவாதிகள், இதுவரை உலகத்தை விளக்கும் பணியைத்தான் மேற்கொண்டு வந்தனர். நமக்குத் தேவை உலகத்தை மாற்றியமைப்ப தாகும்'' என்றார் காரல் மார்க்ஸ்.

உலக வரலாற்றில், சமூக மாற்றத்திற்காகவும், ஒடுக்கு முறைக்குள்ளான உழைக்கும் மக்களுக்காகவும் போராடிய - போராடுகின்ற அமைப்புகள், இயக்கங்கள், தலைவர்கள், களப் போராளிகள் எத்தனையோ பேர் இருந்தாலும் அவர்கள் எல்லோருமே சமூகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுவிடுவதில்லை.

குறிப்பாக, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உழைப்பதாகச் சொல்லும் சாதி இந்துக்கள் சமூக சேவைகளில் ஈடுபடுகின்றபோது மட்டும், அவர்களை இந்நாட்டு ஊடகங்கள் அனைத்தும் வரிந்து கட்டிக் கொண்டு, பக்கம் பக்கமாய் எழுதி, படம் பிடித்து அவர்களைப் புகழின் உச்சியில் நிறுத்துகின்றன.

ஆனால், ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக் காகத் தமது வியர்வையையும் ரத்தத்தையும் பணயம் வைத்துப் போராடும் தலித்துகளை, இச்சாதிய சமூகம் அடையாளம் காட்டுவதில்லை; அங்கீகரிப்பதில்லை. வீரஞ்செறிந்த, தன்னலமற்ற அவர்களுடைய தியாகத்தை ஊடகங்கள் இருட்டடிப்புச் செய்யலாம். ஆனால், உண்மையை முற்றாக மறைத்துவிட முடியாது; உயிர்ப்புடன் இயங்கும் அவர்களின் செயல்பாடுகளைத் தடுத்துவிட முடியாது என நிரூபித்துக் கொண்டிருப்பவர்தான் திருச்சியைச் சேர்ந்த அன்னை வீரம்மாள்.

'ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன் மறை வதில்லை' என்பதற்கிணங்க, அடித்தட்டு மக்களின் மேம் பாட்டுக்காகத் தொண்டு செய்து பழுத்த பழமாய் பணியாற்றும் - அன்னை வீரம்மாளின் அயராத உழைப்பையும் அர்ப் பணிப்பையும் ஊடகங் களால் மட்டுமல்ல; யாராலும் மறைத்துவிட முடியாது. இதை அவ ருடைய உக்கிரமான செயல்பாடுகள் மெய்ப்பித்து வருகின்றன.





படிப்பகம்

www.padippakam.com

■ **கே.எஸ். முத்து**

*16.5.1924* அன்று திருப்பராய்த்துறையில் (திருச்சி மாவட்டம்) வேம்பு - பெரியக்காள் தம்பதியினருக்கு ஒரு குடிசையில் மகளாகப் பிறந்தவர்தான் வீராயி என்கிற வீரம்மாள். அவருடைய தந்தை விவசாயத் தொழிலில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தபோதும், ரயில்வே கேங் மேஸ்திரியாகவும் பணியாற்றினார். அவருடைய தாயார், வயல் வெளிகளிலும் உற்பத்திக்கான களங்களிலும், கிராமிய பாட்டுக் கதைகள் பாடி விளைச்சலைப் பெருக்குவதில் வல்லவராக விளங்கினார். எளிமையான குடும்பத்தில் ஏழாவது மகளாகப் பிறந்த வீராயி, தினமும் ஏழு மைல் தூரம் நடந்து சென்று பத்தாம் வகுப்புவரை கசடறக் கற்றுத் தேர்ந்தார்.

தடைகளை மீறி, எப்பாடுபட்டாவது உயர்கல்வி படித்து முன்னேற வேண்டும் என்ற துடிப்போடு வீரம்மாள் படித்துக் கொண்டிருந்தபோது, 'யுத்தத்தில் பெண்களின் பங்கு' என்ற தலைப்பில் 10 நிமிடங்கள் உரையாற்ற திருச்சி வானொலி நிலையத்திலிருந்து ஓர் அழைப்பு வந்தது. தானாகத் தேடி வந்த வாய்ப்பைத் தவற விடாமல் சிறப்புரையாற்றினார். அவருடைய குரல் வளம், தமிழ் மொழி உச்சரிப்பைக் கேட்ட நேயர்கள் வாழ்த்துக் கடிதங்களை அனுப்பி அவரை மகிழ்ச்சியில் ஆழ்த்தினர். அதைத் தொடர்ந்து 'பெண் உலகம்' என்ற நிகழ்ச்சியில் பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்ததோடு, அவரை திருச்சி வானொலி நிலையக் கலைஞர் வேலைக்கு வரும் படி ஆணையும் வந்தது. எனவே, 1945ஆம் ஆண்டிலிருந்து நிலையக் கலைஞராகப் பணியில் சேர்ந்தார். 'ரேடியோ தாயார்' என எல்லோரும் பாராட்டும் வகையில் செயல்பட்டு புகழ் பெற்றார்.

பள்ளிப் பருவத்தில் இருந்தே வீரம்மாளுக்கு சமூக உணர்வையும், பகுத்தறிவையும் ஊட்டி வளர்த்த பெருமை, பெரியார் கொள்கையில் அதிக நாட்டமுள்ளவரும் 'தொண்டு' பத்திரிகையின் ஆசிரியருமான அண்ணன் வீராச்சாமி அவர்களையே சாரும். பகுத்தறிவுக் கொள்கையால் எழுச்சி பெற்ற வீரம்மாள், மக்களில் ஒரு பிரிவினரை மட்டும் கடவுள் ஏன் தீண்டத்தகாதவர்களாக வைத்திருக்கிறான் என்ற கேள்வியை எழுப்பி, கோயில் வழிபாடு முறைகளை ஒதுக்கித் தள்ளினார். இத்தகைய பகுத்தறிவு மனமாற்றத்திற்குத் தீனி போடும் வகையில் அப்போது பெரியார் நடத்திய 'விடுதலை', 'குடிஅரசு' போன்ற பத்திரிகைகளை 'தொண்டு' வீராச்சாமி வழியாக நாள்தோறும் படித்து பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தார். வானொலி நிலையத்தில் பணி செய்து கொண்டே தனக்கு கிடைக்கின்ற ஓய்வு நேரத்தில், தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக கிராமம் கிராமமாகச் சென்று சமூகத் தொண்டில் ஈடுபட்டார்.



*1948* மார்ச் 1 முதல் சுயமரியாதை இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, திராவிடர் கழகம் நடத்திய பொதுக் கூட்டங்களில் பங்கேற்றும் - கழகம் வெளியிட்ட புத்தகங்களைப் படிக்கவும் தொடங்கினார். இச்சூழலில் வீரம்மாளின் சமூகச் சிந்தனைக்கும், செயல்பாட்டிற்கும் முற்றிலும் எதிரான ஒருவர் (அவினாசி) வாழ்க்கைத் துணைவராக தன்னுடைய உறவினர்களால் கிடைக்கப் பெற்றார். திருச்சியிலுள்ள திரையரங்கு ஒன்றில் டிக்கெட் கிழிப்பதுதான் அவருடைய வேலையாக இருந்தபோதும், தினமும் குடித்துவிட்டு வீரம்மாளைத் திட்டுவதையும், அடிப்பதையுமே வழக்கமாகக் கொண்டிருந்தார்.

'தினமும் கணவனிடம் அடிவாங்கிக் கொண்டு வாழும் வாழ்க்கை ஒரு வாழ்க்கையா? என் எண்ணம் ஈடேறாத இந்த வாழ்க்கையைத் துறந்தால் என்ன?' என்று குடும்பத்தில் போராடிக் கொண்டிருந்த வீரம்மாள், கருவுற்று இரண்டாவது குழந்தை பிரசவத்திற்குச் சென்றிருந்தபோது, தன்னுடைய கணவர் இன்னொரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்தார் என்பதைக் கேள்வியுற்று நிலைகுலைந்து போனார். அதனால் வீரம்மாள் தன் கணவனை ஏற்றுக் கொள்ளவில்லை. 'ஒழுக்கம் தவறிய கணவனை இனிமேல் பார்க்கவே மாட்டேன்' என்று சபதமெடுத்து கணவன் சாகும் வரை அவரைப் பார்க்கச் செல்லாமல் உறுதியோடு இருந்தார். 'ஒழுக்கம்', 'கற்பு' என்பது பெண்களுக்கு மட்டும்தானா? ஆண்களுக்கு கிடையாதா? என்பதை மற்ற ஆண்கள் உணர்ந்து திருந்த வேண்டும் என்பதற்காக வீரம்மாள் இத்தகைய தீவிர நடவடிக்கையை மேற்கொண்டார்.

தனக்கு நேர்ந்த கொடுமை இனி வேறெந்த பெண்ணுக்கும் நடந்துவிடக் கூடாது என்றெண்ணிய வீரம்மாள், பெண்ணடிமைத்தனத்தை ஒழிக்க

## தொண்டுக்கு அங்கீகாரம்




தியாகம் நிறைந்த வீரம்மாளின் தொண்டை உணர்ந்த தமிழக அரசு, திருச்சி ஜுவனைல் நீதிமன்றத்தில் 1958 முதல் பத்தாண்டுகள் - முதல் வகுப்பு கவுரவ மாஜிஸ்ட்ரேட்டாகவும், சில ஆண்டுகள் நீதிமன்றத் தலைவராகவும் நியமித்தது. மேலும் மாவட்டத்திலுள்ள அரசு மருத்துவமனை, பாரத சேவக் சமாஜம், கில்டு ஆப் சர்வீஸ், செஞ்சிலுவைச் சங்கம், குழந்தைகள் நல கவுன்சில், சர்வோதய சங்கம், கள விளம்பரச் செய்தி தொடர்பு மன்றம், குடும்ப நலச் சங்கம், பிச்சைக்காரர்கள் மறு வாழ்வு மய்யம், பெண்கள் பாதுகாப்பு இல்லம், மாவட்ட சட்ட உதவி சங்கம், மாநில சமூக நல வாரியம், திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகம், அரசு சம ஊதியத் திட்டம், குழந்தை அடாப்ஷன் கமிட்டி, நுகர்வோர் கவுன்சில் பேரவை, நேரு வேலைவாய்ப்புக் கமிட்டி, விஜிலன்ஸ் கமிட்டி, திருச்சி நகர அபிவிருத்தி கமிட்டி, உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வுச் சங்கம் போன்ற அமைப்புகளில் ஆலோசனைக் குழு உறுப்பினர் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினராகவும் வீரம்மாளை அரசும், அரசு சாரா நிறுவனங்களும் நியமித்துள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

அயராது பாடுபட்டுக் கொண்டிருந்த தந்தை பெரியாருக்கு 5.3.1948 இல் கடிதம் ஒன்றை விரிவாக எழுதி அனுப்பினார்:

''ஆகவே அறிவிற்சிறந்த எம் அண்ணலே! தாங்கள் இல்வாழ்க்கையைக் குறித்து தீவிரமாக சிந்தனை செய்து, இல்வாழ்க்கையில் ஆண் பெண் இருபாலரும் எந்தெந்த முறையில் வாழ்க்கை நடத்த வேண்டும், எந்தெந்த முறையில் குழந்தைகளை வளர்க்க வேண்டும், எம்முறையில் உற்றார் உறவினர்களுடன் பழக வேண்டும்; உபசரிக்க வேண்டும், எந்த வகையில் குடும்ப கஷ்டங்களில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும், எந்தெந்த முறையில் கணவன் மனைவி நடந்து, தங்கள் தங்கள் கடமைகளை ஒழுங்காகச் செய்தால் இன்பமாய் வாழலாம் - ஆகியவைகளைப் பற்றியெல்லாம் தெளிவான கருத்துகளடங்கிய ஓர் அரிய பெரிய விரிவான நூலைத் தங்கள் வாழ்நாளிலேயே சிறப்பாக வெளியிட்டு, அந்தப் புத்தகம் எல்லோருக்கும் பயன்பட வேண்டுமென சிறுமியாகிய அடியாள் தாழ்மையுடன் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்'' ('இது என் வாழ்க்கை கதை' - அன்னை வீரம்மாள், பக்கம் : 95).

மேலும், 'சகோதரிகளே, சிந்தியுங்கள்!' 'அறியாமையும் மூடநம்பிக்கைகளும்' என்ற தலைப்புகளில் சீர்திருத்தக் கட்டுரைகள் எழுதி 'குடிஅரசு' ஏட்டுக்கு அனுப்பினார். பெரியார் தொண்டர் அண்ணன் வீராச்சாமி நடத்தி வந்த 'தொண்டு' பத்திரிகையிலும் பல்வேறு தலைப்புகளில்கட்டுரைகள் எழுதி மூட நம்பிக்கை,



**❝ பெரியாருக்கு நான் செல்லப்பிள்ளை. பெரியார் மாளிகைக்கு நான் எப்போது போனாலும் என்னிடம் பேசுவார். மணியம்மையும் என்னிடம் ரொம்பவும் பிரியமாக இருப்பார். பெரியார் தான் என்னை எழுதத் தூண்டினார். ❞**

பெண்ணடிமைத்தனம் போன்ற சமூக அவலங்களை ஒழிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டார்.

25.4.2006 அன்று திருச்சியில் உள்ள அவருடைய ஆசிரமத்தில் அன்னையை நேரில் சந்தித்து, பெரியாருக்கும் உங்களுக்கும் இடையே எப்படி தொடர்பு ஏற்பட்டது என்று கேட்டபோது, ''எங்க வீட்டுக்காரரு என்னை விட்டுட்டு வேறொரு பெண்ணைத் திருமணம் செய்தபோது, பெரியாருக்குதான் முதலில் கடிதம் எழுதினேன். அதில் ஆண்கள் பெண்களை விட்டுச் செல்வது சரியா? பெண்களும், ஆண்களை விட்டுச் சென்றால் தவறா? என்று கேள்வி கேட்டிருந்தேன்'' என்றார்.

உட்காரவும் முடியாமல் பேசவும் முடியாமல் படுத்த படுக்கையில் இருந்து கொண்டே ஒரு புதிய உத்வேகத்துடன் மீண்டும் பேசத் தொடங்கினார்! ''பெரியாருக்கு நான் செல்லப்பிள்ளை. பெரியார் மாளிகைக்கு நான் எப்போது போனாலும் என்னிடம் பேசுவார். மணியம்மையும் என்னிடம் ரொம்பவும் பிரியமாக இருப்பார். பெரியார்தான் என்னை எழுதத் தூண்டினார்'' என்றார்.

பெண் கல்வியின் அவசியத்தை உணர்ந்த வீரம்மாள், தனது கணவரின் ஊரான அல்லூரில் 1943 இல் ஆதிதிராவிடர் நலத் தொடக்கப்பள்ளியை நிறுவி சாதனை படைத்தார். இன்றும் அப்பள்ளியில் ஏராளமான மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். திக்கற்ற குழந்தைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், விதவைகள் மற்றும் ஏழை எளிய பெண்கள், குழந்தைகள் யாவரும் முன்னேற்றமடைந்து மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு, 1954 ஆம் ஆண்டு 'தமிழ் நாடு செட்யூல்டு வகுப்பு பெண்கள் நலச் சங்கம்' என்ற அமைப்பைத் தொடங்கினார். 1954 மே 9 அன்று திருச்சி உறையூர் வார்னர்ஸ் பங்களாவாகிய ருக்மணி கருணாகரன் என்பவருடைய இல்லத்தில் சங்க அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. இதில் இச்சங்கம் எந்த அரசியல் கட்சியையும் சாராமல், உறுப்பினர் ஒவ்வொருவரும் ஆண்டுக்கு 1 ரூபாய் சந்தாவாகக் கொடுக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

வீரம்மாளின் பெரு முயற்சியால் இச் சங்கத் தொடக்க விழா, அப்போதைய திருச்சி ஆட்சியர் ஆர்.எஸ். மலையப்பன் தலைமையிலும், தமிழக முன்னாள் முதல்வர் காமராசர் அவர்கள் முன்னிலையிலும் வெகு சிறப்பாக நடைபெற்றது.





படிப்பகம்

www.padippakam.com

அப்போதைய மத்திய அரசின் உதவி சுகாதார அமைச்சர் மரகதம் சந்திர சேகர் சங்கப் பெயர்ப் பலகையைத் திறந்து வைத்துள்ளார். அன்று 15 ரூபாய் வாடகை வீட்டில் தொடங்கப்பட்ட சங்கம், இன்று 5 ஏக்கர் நிலப்பரப்பில் 125 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள கட்டடங்கள் மற்றும் லட்சக்கணக்கான ரூபாய்க்கு அசையும், அசையா சொத்துகள் உடைய நிறுவனமாக வளர்ந்திருக்கிறது.

தமிழ் நாட்டில் ஆங்காங்கே உள்ள படித்த தலித் பெண்களை எல்லாம் ஓர் அமைப்பின்கீழ் திரட்டி அவர்களிடையே சமூக உணர்வை ஊட்டி, அவர்களை சமூகப் பணியாற்றும் செயல்வீரர்களாக உருவாக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் தொடங்கப்பட்ட 'தமிழ் நாடு செட்யூல்டு வகுப்புப் பெண்கள் நலச்சங்க'த்தை - சாதி, மத, இன வேறுபாடின்றி அனைத்துப் பெண்களையும், ஆதரவற்ற குழந்தைகளையும் அரவணைக்கும் எண்ணத்தில் 1970 ஆம் ஆண்டு 'தமிழ் நாடு பெண்கள் நலச் சங்கம்' எனப் பெயர் மாற்றினார். சங்கம் தொடங்கிய ஆண்டில், அதாவது 1954 ஆகஸ்ட் 2 ஆம் தேதியில் பெண்களுக்கு முதியோர் கல்விக்கான முதல் இரவுப் பள்ளியை பீம நகர் அந்தோணியார் கோயில் தெருவிலும், 20.2.1955 அன்று பீம நகர் கீழத் தெருவில் இரண்டாவது இரவுப் பள்ளியையும், 8.5.1971 அன்று மூன்றாவது இரவுப் பள்ளியை திருச்சி ஆணைக்கட்டி மைதானத்திலும் தொடங்கினார்.

வாய்மை, நேர்மை, அன்பு, அகிம்சை, ஈவிரக்கம், நல்லொழுக்கம், கடுமையான உழைப்பு, தொண்டு மனப்பான்மை போன்ற விலை மதிக்க முடியாத நற்குணங்களை சொத்துகளாகக் கொண்டுள்ள' அன்னை வீரம்மாள் - மத்திய, மாநில அரசு மற்றும் சமூக நல வாரியத்தின் மானிய நிதி உதவியைக் கொண்டும், பொது மக்களிடம் பெறுகின்ற நன்கொடையைக் கொண்டும் - இந்த அன்னை ஆசிரமத்தை 50 ஆண்டுகளுக்கும் மேலாக எவ்வித ஆடம்பரமும், விளம்பரமுமின்றி, சீரும் சிறப்புமாக நடத்தி வருகிறார்.

## ஒரு போராளியின் உயில்

“நான் கடந்த 34 ஆண்டுகளாக சமூக சேவையில் ஈடுபட்டு வந்திருக்கிறேன். நான் உயிருடன் இருக்கும் போதே என்னைப் பொறுத்தும், என் உடல் பற்றியும் என்ன செய்ய வேண்டும் என்பதை எழுதி வைத்து, அதன்படி நடக்க வேண்டும் என்று நான் விரும்பி இந்த உயிலை எழுதி வைத்திருக்கிறேன். நான் இறந்த பிறகு என் மகன், மகள் மற்றும் உறவினர்கள் யாரும் எந்தவிதத் தடங்கலும் மாற்றுக் கருத்தும் கூறாமல், என் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்று விரும்பி இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறேன்.

... நான் இறந்தவுடன் என் அருகில் இருக்கும் நண்பர்கள், உற்றார், உறவினர்கள் சிறிதும் தாமதம் செய்யாமல் உடனடியாக திருச்சி ஜோசப் கண் ஆஸ்பத்திரிக்கு தொலைபேசி மூலம் தகவல் கொடுத்து, அவர்கள் எனது இரண்டு கண்களையும் பாதுகாப்பாக எடுத்து, பார்வை இல்லாத இரண்டு பேர்களுக்குப் பொருத்த ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும், என் ஒவ்வொரு உறுப்புகளும் மக்களுக்குப் பயன்படும் வகையில், என் உயிர் என் உடலை விட்டுப் பிரிந்த பிறகும் மக்களுக்கு உதவும் வகையில் இருக்க வேண்டும் என்றும் நான் மனதார விரும்புகிறேன்.

இதனால் எனது உடலைப் பாதுகாப்பாக தஞ்சை மருத்துவக் கல்லூரியிலுள்ள உடற்கூறு பகுதிக்கு 'அனாட்டமி' பிரிவுக்கு அனுப்பி வைக்கவும். உடற்கூறு பற்றி பயிலும் மாணவர்கள் படிக்க எனது உடலின் உறுப்புகள் அனைத்தும் பயன்பட வேண்டும். பயன் அளிக்காத உறுப்புகள் யாவும் தமிழ் நாடு பெண்கள் நலச் சங்கம் அன்னை ஆசிரமத்தில் எனது உழைப்பால் வளர்க்கப்பட்டிருக்கும் கனி மரங்களுக்கு உரமாகும் வகையில் ஆழத்தில் வேர்களில் போட்டு மூடிவிட வேண்டும்.”

*- 1981 இல் வீரம்மாள் எழுதி வைத்துள்ள உயிலில் இருந்து*



திருச்சி வானொலி நிலையத்தில் வாங்கிய சம்பளத்தில் பாதிக்கு மேல் ஒவ்வொரு மாதமும் சங்கத்திற்கு நன்கொடையாக வழங்கியதோடு, 1984 இல் சுமார் 40 ஆண்டு காலம் பணி புரிந்து தனக்குக் கிடைத்த ஓய்வு ஊதியத் தொகை முழுவதையும் உயர்நிலைப் பள்ளியைத் தொடங்க அறக்கட்டளை நிதியாக வழங்கினார். 1968 இல் கீழ் வெண்மணியில் அரைப்படி நெல் கூலி உயர்வு கேட்டதற்காக 44 தலித்துகளை உயிரோடு எரித்துக் கொன்ற இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் வழங்கியுள்ளார். வேட்டி, புடவை, போர்வை, குழந்தைகளுக்கான உணவுப்பொருட்களை மூட்டை மூட்டையாய் எடுத்துச் சென்று வழங்கியதோடு, மருத்துவமனையில் இருந்த நோயாளிகளையும் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

சாதி ஒழிப்புக்கும் சமூக மாற்றத்திற்கும் சாதி மறுப்புத் திருமணமே சரியான தீர்வு என்பதை அம்பேத்கர், பெரியார் வழியாகப் புரிந்து கொண்ட அன்னை, அதே ஆண்டில் ஜெயப்பிரகாஷ் நாராயணன் முன்னிலையில் டாக்டர் ஆர்.எஸ். சேகர் என்ற பார்ப்பனருக்கும் காந்தமணி என்ற தலித் பெண்ணுக்கும் சாதி மறுப்புத்திருமணத்தை நடத்தி வைத்தார். 10,000 ஏக்கர் நிலங்களை மீட்டெடுத்த கிருஷ்ணம்மாள் ஜெகநாதன் தலைமை வகித்த இத்திருமணத்தில், காய்கறி மாலைகள் பயன்படுத்தப்பட்டன. இவ்விழாவில் காமராசர், கி.ஆ.பெ. விசுவநாதம், 'தொண்டு' வீராச்சாமி



படிப்பகம்

www.padippakam.com

மற்றும் பலர் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தனக்கு ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் தன்னுடைய தோழிகளை அழைத்துக் கொண்டு கிராமங்களுக்குச் சென்று பெண்கல்வி, பெண்ணுரிமை, பெண்களின் முன்னேற்றம், குழந்தைகள் நலம், தீண்டாமை ஒழிப்பு, தூய்மை, சுகாதாரம், தேசிய ஒருமைப்பாடு, அய்க்கிய நாடு அவையின் பணிகள், உலக அமைதி, அணுகுண்டு ஒழிப்பு, சிறுசேமிப்பு, வரதட்சணை ஒழிப்பு போன்ற பல்வேறு தலைப்புகளில் உரையாற்றி கிராமங்களில் எழுச்சியூட்டியுள்ளார்.

பகுத்தறிவுச் செயல்பாட்டாளராக விளங்கிய அன்னை வீரம்மாளுக்கு புரட்சியாளர் அம்பேத்கரை நேரில் சந்திக்கும் வாய்ப்பும் 'தொண்டு' வீராச்சாமி மூலம் கிட்டியது. 1946 இல் மதுரை எட்வர்டு மன்றத்தில் 'பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு' சார்பில் நடைபெற்ற மாநாட்டிற்கு அண்ணல் அம்பேத்கர் தொடர் வண்டியில் மதுரைக்குச் சென்ற போது, திருச்சி சந்திப்பில் அன்னை வீரம்மாள் அவரைச் சந்தித்து தன் குழந்தையை அவர்கையில் கொடுத்து வாழ்த்து பெற்றார்.



பெரியார், மணியம்மையை திருமணம் செய்து கொண்டபோது, 'திராவிட நாடு' பத்திரிகையில் அண்ணா அவர்கள் 'ரோமாபுரி சரிந்தது, ரோமாபுரி ராணிகளால்; பகுத்தறிவுபுரி சரிந்தது, மணியம்மையால்' என்று எழுதியதைக் கண்டித்து, அண்ணாவுக்கு 'பழங்குடி மகள்' என்ற புனைப்பெயரில் ஒரு நீண்ட கடிதம் எழுதி, தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்தார்.

குடும்பப் பிரச்சனைகள் தன்னை இறுக்கிப் பிடித்து குறுக்கீடு செய்த போதிலும், அன்னை வீரம்மாள் இரவில் நீண்ட நேரம் விழித்திருந்து எண்ணற்ற நூல்களைப் படித்து, அவற்றின் மூலம் சமூகப் பிரச்சனைகள் மற்றும் குடும்பப் பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கான துணிச்சலைப் பெற்றார். சமூக அறிவை வளர்க்கும் நூல்கள், தன்னலமற்ற சமுதாயத் தலைவர்களின் தொடர்பு இவையிரண்டும்தான் அன்னையை ஒரு சமூகப் போராளியாக உருமாற்றியது.

தனக்காக வாழாமல் சமூகத்திற்காகவே வாழ்ந்து கொண்டிருக்கும் அன்னை வீரம்மாளின் அளப்பரிய தொண்டைப் பாராட்டி, 1983 ஆம் ஆண்டு அகில இந்திய தொழில் வர்த்தக சம்மேளனம் - 'Outstanding Woman Social Worker' என்று பெருமைப்படுத்தி 11 ஆயிரம் ரூபாய் வழங்கியது. 1993 மார்ச் 3 அன்று குழந்தைகள் நல சேவைக்காக தேசிய விருதுடன் 30 ஆயிரம் ரூபாய் பணமுடிப்பாக மத்திய அரசு வழங்கியது. அதே ஆண்டில் டெல்லி 'வாஷேஷரன் தேவி பாட்டியா' நினைவு விருதுடன் 25,000 ரூபாய் பண முடிப்பும் வழங்கியது. மேற்படி பெற்ற தொகை முழுவதையும் சங்கப் பணிகளுக்காகவே அன்னை வீரம்மாள் நன்கொடையாக வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

வாழ்கின்ற ஒவ்வொரு மணித்துளியையும் சமூக மாற்றத்திற்காகவும் ஆதரவற்ற குழந்தைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் நல்வாழ்விற்காகவும் திறமை குன்றாமல் சமூகப் பணியாற்றிவரும் வீரம்மாள், தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு ஒரு பாடமாகவும், முன்னோடியாகவும் திகழ்ந்து வருகிறார் என்பதோடு, சமூக சேவை புரிபவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகவும் வாழ்ந்து வருகிறார். காரல் மார்க்ஸ் சொன்ன வார்த்தையை ('நமக்குத் தேவை உலகத்தை மாற்றியமைப்பதாகும்') இடதுசாரிகள் நிறைவேற்றுகிறார்களோ இல்லையோ, ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்த வீரம்மாள், ஒரு பெண்ணாக இருந்து துணிவுடன் செயல்படுத்திக் காட்டியுள்ளார் என்பதை தமிழக வரலாற்றில் எவராலும் மறைத்துவிட முடியாது. •

தமிழ் நாடு பெண்கள் நலச் சங்கம், அன்னை ஆசிரமம் வளாகம், விமான நிலைய அஞ்சல், திருச்சிராப்பள்ளி - 620 007
பேசி : 0431 - 2341186, 2341753

## தொண்டுக்கு ஏது எல்லை!

அநீதியான சமூகத்தில் அடைக்கலம் தேடி வந்த பெண்கள், குழந்தைகள் அனைவரும் சமூக அறிவும், பொது அறிவும் பெற்று சிறந்த மனிதர்களாக வாழ வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, 1956 சனவரி 26 குடியரசு நாளில் 'அவ்வை நூல் நிலையம்' என்ற பெயரில் ஒரு நூல் நிலையத்தைத் தொடங்கினார் வீரம்மாள். மேலும், வீரம்மாள் உருவாக்கிய களப்பட்டியல்:




1. ஆதரவற்ற அனாதை குழந்தைகளுக்கான அன்னை ஆசிரமம் 2. இலவச பாலர் பள்ளி 3. இலவச நூல் நிலையம் - வாசக சாலை 4. இலவச தையல் பூ வேலை கைத்தொழில் நிலையம் 5. இலவச குழந்தைகள் காப்பகம் 6. தட்டெழுத்துப் பயிற்சி நிலையம் 7. பிரிண்டிங் பிரஸ், புக் பைண்டிங், ஸ்கிரீன் பிரிண்டிங் 8. அன்னை மகளிர் மேல் நிலைப்பள்ளி 9. புலவர் து. தேவராசன் தொடக்கப்பள்ளி 10. பணி புரியும் பெண்கள் விடுதி 11. இலவச முதியோர் இல்லம் 12. அகர்பத்தி, சந்தனமாலை யூனிட் 13. குழந்தைத் தொழிலாளர் பள்ளி 14. பணிபுரியும் பெண்கள் விடுதி என பதினான்கு சேவை மய்யங்களும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இதுவே 'அன்னை ஆசிரமம்' என இயங்கி வருகிறது.



படிப்பகம்

www.padippakam.com



அண்ணல் அம்பேத்கர் வெளியிட்ட, பட்டியல் சாதியினர் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையின் தமிழாக்கத்தை வெளியிட்டதன் மூலம், 'தலித் முரசு' அவரது பரந்த, ஆழமான உலகக் கண்ணோட்டத்தையும் நாட்டு மக்கள் மீது அவருக்கு இருந்த அளவற்ற பற்றையும் அக்கறையையும் தெரிந்து கொள்ள உதவியுள்ளது.

இந்தியாவிலுள்ள தலித் இயக்கங்கள், கட்சிகள் பெரும்பாலானவை உட்சாதி நலன்களுக்கான அரசியல், பார்ப்பன மய்யம் நோக்கி நகர்தல் ஆகிய இரண்டையும் இணைத்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில், ''பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு, இந்தியாவில் உள்ள அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களின் நல்வாழ்விற்குமானதாகும். அதன் அடிப்படையில், கூட்டமைப்பை ஒரு சாதி அமைப்பெனக் குற்றம் சாட்ட முடியாது. கூட்டமைப்பு எல்லோரும் பங்கேற்பதாக இல்லாது இருக்கலாம். ஆனால், அனைவரும் பணியாற்ற, ஒருங்கிணைவதற்குத் தகுதியுடைய அனைவருடனும் ஒருங்கிணைந்து செயல்படக்கூடியதே'' என்னும் வாசகங்கள், அம்பேத்கரின் உருவங்கள் பதிக்கப்பட்ட பதாகைகளையும் விளம்பரப் பலகைகளையும் பயன்படுத்தி, அவரது லட்சிய நோக்கில் ஒரு விழுக்காட்டைக்கூடப் பகிர்ந்து கொள்ளாத இன்றைய தலித் கட்சிகள், இயக்கங்கள் பலவற்றின் அறவியல் சீரழிவைப் புரிந்து கொள்ள உதவுகின்றன.

1989 - 90 இல் நடந்தது போலவே இன்றும் ஆதிக்கசாதி மாணவர்கள் காலணிகளுக்கு மெருகூட்டும், விளக்குமாறுகளால் தெருக்களைத் துப்புரவு செய்யும் 'போராட்ட'ங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில், அவர்களுக்கு மறைமுகமான ஆதரவு கொடுக்கும் வகையில் சில 'தலித்' அறிவுஜீவிகள், தங்களது பார்ப்பன - தலித் கூட்டணிகளின் கொள்கைப் பிரகடனங்களை மின்னணு, அச்சு ஊடகங்கள் வழியாகத் தெரிவித்துக் கொண்டிருக்கும் வேளையில், ''பிற்படுத்தப்பட்ட, தீண்டத்தகாத, பழங்குடி மக்களை கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் உயர்த்த, பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு பாடுபடும்'' என்னும் உறுதிமொழி, இந்திய / தமிழக சமுதாயத்தின் சாதியமைப்பில் உள்ள முதன்மையான முரண்பாடு பற்றி அம்பேத்கர் கொண்டிருந்த தெளிவான பார்வையை நமக்கு மீண்டும் நினைவுபடுத்துகிறது.

அவரது ஆழ்ந்த மனிதநேயத்திற்கு மற்றொரு சான்றாக இருப்பது காந்தியார் கொல்லப்பட்டபோது, அதற்குப் பழி வாங்கும் நோக்கில், ஒடுக்கப்பட்ட மக்கள் ஆதிக்கசாதியினர் மீது நடத்திய வன்முறைத் தாக்குதல்களுக்கு அம்பேத்கர் ஒப்புதல் தர மறுத்ததாகும். மக்களிடையே உள்ள பகைமையுணர்வை வன்முறை கொண்டு போக்கிவிட முடியாது என்பதை ஆணித்தரமாக நிறுவும் இந்தத் தேர்தல் அறிக்கை, இந்தப் பகைமை உணர்வைப் போக்குவதற்கு ஆக்கப்பூர்வமான வழிமுறைகளைச் சொல்கிறது.

வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றைப் போக்குவதில் அண்ணல் காட்டிய அக்கறையும் அவர் முன்வைத்த ஆக்கப்பூர்வமான திட்டங்களும் நம் மனதை நெகிழவைக்கின்றன. இந்தத் தேர்தல் அறிக்கையின் ஒரு கணிசமான பகுதி விவசாயப் பிரச்சனைக்கு - குறிப்பாக நிலமற்ற விவசாயத் தொழிலாளர் பிரச்சனைக்கு - ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாயத் தொழிலாளர்களில் ''பெரும்பாலானோர் தீண்டத்தகாதவர்களாகவும், பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகவுமே உள்ளனர்'' என்பதைச் சுட்டிக்காட்டும் அறிக்கை, நிலச் சீர்திருத்தம், தரிசு நில மேம்பாடு, கூட்டுப் பண்ணைகள் அமைத்தல் போன்ற நடைமுறைச் சாத்தியமானதும் ஆக்கப்பூர்வமானதுமான ஆலோசனைகளை வழங்குகிறது. ''விவசாயிகளின் செழிப்பு, காடுகளைப் பராமரிப்பதில் இருக்கிறது. காடுகளின்றி தேவையான மழைக்கு உத்திரவாதமில்லை. இதனால், இந்தியாவில் விவசாயம் மழையை நம்பிய ஒரு சூதாட்டமாகவே இருந்து வந்திருக்கிறது. இனியும் இப்படியே இருக்கும். விவசாயத்திற்குப் பயன்படாத நிலங்களைக் காடுகளாக்க வேண்டும்'' என்னும் பகுதி, இந்தியாவில் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் தலைமைக்கும் இருந்திராத ஒரு தொலைநோக்குப் பார்வை, சுற்றுச் சூழல் பாதுகாப்புப் பார்வை அண்ணலிடம் இருந்திருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

**''விவசாயிகளின் செழிப்பு, காடுகளைப் பராமரிப்பதில் இருக்கிறது. காடுகளின்றி தேவையான மழைக்கு உத்திரவாதமில்லை. இதனால், இந்தியாவில் விவசாயம் மழையை நம்பிய ஒரு சூதாட்டமாகவே இருந்து வந்திருக்கிறது. இனியும் இப்படியே இருக்கும். விவசாயத்திற்குப் பயன்படாத நிலங்களைக் காடுகளாக்க வேண்டும்'' என்னும் பகுதி, இந்தியாவில் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் தலைமைக்கும் இருந்திராத ஒரு தொலைநோக்குப் பார்வை, சுற்றுச் சூழல் பாதுகாப்புப் பார்வை அண்ணலிடம் இருந்திருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்துகிறது.**

இந்தியாவின் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுக் கூறுகள் அனைத்தையும், இந்தியாவின் மொழி வேறுபாடுகள் அனைத்தையும் கருத்தில் கொண்டு எழுதப்பட்ட இந்த அறிக்கை, மொழிவழி மாநிலங்கள் குறித்த மிகச் செறிவான, அய்யத்திற்கு இடந்தராத கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளது.


- எஸ்.வி. ராஜதுரை, *கோத்தகிரி*



படிப்பகம்

www.padippakam.com

# அம்பேத்கரின் ஆசான் புத்தர்



மியான்மர் - பேகனில் உள்ள புத்தர் சிலை
புகைப்படம் : 'பிரண்ட்லைன்'

விடுதலை இயக்க வேர்களும் விழுதுகளும் - 36

> மனிதரை மனிதர் நேசிக்க வேண்டி இருப்பதால், அவரவரு டைய நன்மைக்காகவே மனிதர்கள் ஒழுக்கமாக நடந்தாக வேண்டும். இதுவே தம்மம். அதாவது ஒழுக் கம் ஆகும். சிலருக்கு சுதந்திரம் இருக்க, பலருக்கு அந்தச் சுதந் திரம் இல்லாமலிருக்கிறது. இதற்கு என்ன தீர்வு? சகோதரத் துவத்தை உலகளவில் பொதுத் தன்மையுடையதாக ஆக்குவது ஒன்றே தீர்வானதாகும். சகோ தரத்துவம் என்பது என்ன? மாந் தர்கள் அனைவருக்குள்ளும் சமத் துவம் என்பதன் மறு பெயரே அது. ஒழுக்கத்தின் மறுபெயரே தம்மம்.
>
> - டாக்டர் அம்பேத்கர்

■ ஏபி. வள்ளிநாயகம்

IV

இயற்கையில் ஓர் ஒழுங்கு உள்ளது. சமூகத்தில் அப்படிப்பட்ட ஓர் ஒழுங்கு உள்ளதா? என்ற கேள்வியை எழுப்பியவர் புத்தர். மனிதர்கள் செயல் களில் ஈடுபடுகிறார்கள். அவை நல்ல செயல்கள், கெட்ட செயல்கள் என ஆகி விடுகின்றன. இச்செயல்கள் சமூகத்தில் விளைவுகளை ஏற்படுத்துகின்றன. விளைவு களால்தான் சமூக ஒழுங்கு நிர்ணயிக்கப் படுகிறது. இச்சமூக ஒழுங்கின் நிர்ணயம் முழுக்க மனிதர்களாலேயே முடிவாகிறது. மனிதரைத் தவிர வேறு எவராலும், வேறு எதனாலும் சமூக ஒழுங்கு நிர்ணயமாவதில்லை. இந்த விவாதத் திற்கு இசைவாகத் தம் கருத்துகளோடு - காரியங்களோடு மானுட உலகிற்கு இயைந்து போனவரே புத்தர்.

புத்தர் பயன்பாட்டு வாதம் என்ற அணுகுமுறையின் மூலவர் ஆவார். அவ்வணுகுமுறையின் வாயிலாகத் தன்னை தீவிர நேர்காட்சிவாதியாக பாவித்துக் கொண்டார். புத்தரின் கருத்துகள் பயன் பாட்டு மதிப்புகளுக்கே சாய்மானம் கொண்டதாகும். புத்தர் உடனடிப் பயன் பாடு கொண்ட நேர்க்காட்சித் தளத்திலான பிரச்சனைகளையே பிரச்சனைகளென்று எடுத்துக்காட்டினார். மனிதர், அவரது உள்ளம் ஆகியவற்றை முதன்மைப்படுத் தினார். நுட்பமான உளவியல் பிரச்ச னைகளுக்கு முன்னுரிமை அளித்தார். மறு உலகம், முக்தி போன்ற கருத்து முதல் வாதங்களை நிராகரித்து, நடைமுறை வாழ் வில் உள்ள துன்பத்தை எவ்வாறு விரட்டு வது என்ற நோக்கிலேயே சிந்தித்தார்.

புத்தர், துன்பம் என்ற கருத்தை சமூக மயப்படுத்தினார். துன்பத்திற்குக் காரணம் பிறவி முதலாளித்துவ (பார்ப்பனிய) வர்க்க மோதல்கள் என்று அவர் கூறினார். துன்பத்தை விலக்குவதற்கு உளவியல்



படிப்பகம்

www.padippakam.com

ரீதியிலான வழிகளை முன்வைத்தார். சமூக முரண்பாட்டை மனித மனம் துன்பமாக உணர்கிறது என்பது புத்தரின் முடிவு. சமூக வர்க்கங்களுக்கிடையிலான மோதலை எப்படி அகற்றுவது என்று தொடர்ந்து சிந்திக்க முடிவு செய்ததன் விளைவே சித்தார்த்தரின் துறவு. அத்துறவின் நோக்கம், மனித வாழ்க்கையின் பிரச்சனைகளைக் கண்டறிவதற்காகவும், தீர்வுகளைத் தேடுவதற்காகவும்தான்.

துன்பமே உலகத்தின் எதார்த்தம் எனில் உலக வாழ்வை மறுத்து துறவு மேற்கொள்ளுவதைத் தவிர, சித்தார்த்தருக்கு வேறு வழியில்லாமல் இருந்தது. ஆனால், ஆரம்பத்தில் துன்பத்தையும் துறவையும் ஏற்கும் சித்தார்த்தர், புத்தராகும்போது துறவை மறுத்துவிடுவது குறிப்பிடத்தக்கது. மத்திய மார்க்கம் எனும் புதிய பாதையை உருவாக்குவது கவனத்திற்குரியது. இதுவே துன்பத்தை நீக்குவதற்குரிய புத்தரின் பாதையாகும். நம்பிக்கை வறட்சி இதன் நிலைப்பாடல்ல.

துறவு பயனற்றது. அது ஒரு தப்பித்தல். துறந்தவனும்கூட தப்பிக்க முடியாது. உலகைத் துறப்பதல்ல; உலகை மாற்றுவதே பவுத்த தம்மம். 'பரிநிர்வாணம்' என்பது முழுத்துறவு. பரிநிர்வாணம், நிர்வாணம் இவைகளை அம்பேத்கர் விளக்கும் போது, பரிநிர்வாணம் என்பது உடல், உணர்ச்சிகள், மனம், செயல்கள் ஆகிய அனைத்தையும் அடங்கச்செய்வது; நிர்வாணம் என்பது உணர்வுகளை அடக்கி சரியான வழியில் வாழ்வது என்றே வரையறை செய்கிறார். இது வாழ்வு நெறிதானே தவிர, துறவு நெறி அல்ல என்பது அவரது விளக்கம்.

கர்மக் கோட்பாடு, உலகம் பற்றிய ஓர் ஒட்டுமொத்தக் கோட்பாடே தவிர தனித்தனி மனிதர்கள் பிறப்பு, வாய்ப்புகள், வாய்ப்பின்மைகள் ஆகியவை குறித்தது அல்ல என்று குறிப்பிடும் அம்பேத்கர், கர்மக் கோட்பாட்டை சமூகம் குறித்த பொதுக் கோட்பாடு என விளக்கும் போது, பவுத்தத்தை சமூகவியல் கொள்கைகளுக்கு பொருத்தப்பாடாகவே நிறுவியுள்ளார். கடவுள் கருத்து பவுத்தத்தின் மையமல்ல; ஆன்ம விடுதலை பவுத்தத்தின் மய்யமல்ல; மனிதரும் அவர்களது அறவியல் வாழ்வுமே பவுத்தத்தின் மய்யம். உலகத்தின் தோற்றம், முடிவு ஆகியவற்றை விளக்குவது பவுத்தமல்ல; உலகை மாற்றுவதே பவுத்தமாகும்.

இதே போல தம்மம் என்பது கடவுள், ஆன்மா சம்பந்தப்பட்டது அல்ல. சாவுக்குப் பிறகான வாழ்வைக் குறிப்பதும் அல்ல. அது மனிதர்கள், உலகில் மனிதருக்கிடையிலான உறவுகள் ஆகியவற்றைக் குறித்தது ('புத்தரும் அவரது தம்மமும்', தொகுதி 2, பக்கம் : 121). தம்மம் என்பது மனிதர்களுக்கிடையிலான உறவுகளைப் பற்றியது. இங்கு கடவுளின் இடத்தில் அறம் அமைந்துள்ளது. அறமே தம்மமாகும் (பக்கம் : 322). பவுத்தம் விதிகளின் தொகுப்பல்ல. அது வாழ்க்கை முறைக்கான நெறிமட்டுமே ஆகும். விதி எனில் அதனை மீறவே முடியாது, கூடாது. ஆனால் பவுத்தம் வாழ்க்கை நெறியாகும் போது, அது மனிதர்களின் தேர்வுக்குரியதாகும். கடவுள் கொள்கை, இறைக்காட்சி, மறு உலகம், முக்திக் கோட்பாடு, சடங்குகள் ஆகியவற்றை பவுத்தம் ஏற்கவில்லை என்பதால், பவுத்தம் ஓர் உலகியல் சார்ந்த மார்க்கமேயாகும்.

புத்தர், பத்து நெறிமுறைகளைக் கைகொண்டு கடைப்பிடித்த பின்னரே அவர் மானுடம் போற்றும் புத்தரானார். மாசற்ற மனம் பெற்ற மகிழ்ச்சி, பிறரிடம் குறை காணா நற்குணம், அறிவுத் தீ பரவும் சூழ்நிலை, முதற்பொருள், சார்புப் பொருள் தொடர்பு தெரிதல், பொருள்களின் முழுமை புரிதல், அனைத்துஉயிரையும் நேசித்தல், சலனமிலா அசல்நிலை, சகலத்தையும் உணர்ந்த மதி, அறிவைப் போதிக்கும் உயர்ந்த நிலை ஆகிய இந்த ஞானங்களையெல்லாம் அவர் எய்தினார். இவ்வாறு தான் சித்தார்த்தர் உலகம் போற்றும் ஒப்பற்ற புத்தர் ஆனார். உலகில் அமைதி நிலவ புத்தர் போதித்த தம்மம்தான் சிறந்த மார்க்கம் என்பது, அம்பேத்கரின் முடிந்த முடிவாகும்.



தம்மம் என்றால் என்ன? தம்மம் என்பது பகுத்தாய்வும் அறிவையும், அர்த்தமுள்ள கருணையையும் தன்னுடைய அங்கங்களாகக் கொண்டுள்ளது.

**" உண்மையான பவுத்தர், ஆதிக்கக் குழு உணர்விலிருந்து விடுபட்டுத் தன்னை ஒட்டுமொத்த உலகத்தின் குடிமகள்/ குடிமகன் என்று உணர வேண்டும். இவ்வுணர்தலை புத்தர் 'மைத்ரி' என்கிறார். உண்மையான பவுத்தர்கள் உலகக் குடிமக்கள் ஆவர். "**

அறிவை 'உணர்வு' என்றும் அர்த்தமுள்ள கருணையை 'மைத்ரி' என்றும், புத்தர் வரையறுக்கிறார். 'உணர்வு' என்பது புரிந்து கொள்வதில் அடங்கியுள்ளது. மூடநம்பிக்கைக்கு எவ்விதத்திலும் இடம் தரக் கூடாது என்பதை புத்தர் தன்னுடைய தம்மத்தின் அடிப்படையாகக் கொண்டால், 'உணர்வு' மற்றும் 'மைத்ரி' தம்மத்தின் இரு எல்லைகளாகக் கருதப்படுகின்றன. 'மைத்ரி'யும் 'உணர்வு'ம் சேர்ந்த கலவையே தம்மம்.

போதப்பத்தர் என்ற மருத்துவருக்கும் புத்தருக்கும் நடந்த உரையாடலில் :

1. உலகம் அழிவற்றதா? 2. உலகம் முடிவுடையதா? 3. உலகம் முடிவற்றதா? 4. உடலும் ஆத்மாவும் ஒன்றா? 5. உடலும் ஆத்மாவும் வெவ்வேறு ஆனதா? 6. உடல் அழிந்த பிறகு ஆத்மா வாழுமா? என்ற கேள்விகளை போதப்பத்தர் புத்தர் முன் வைக்கிறார். இந்தக் கேள்விகளுக்கு புத்தர் தந்த பதில் மிகவும் கவனத்தில் கொள்ள வேண்டியதாகும். போதப்பத்தரிடம் புத்தர், உங்கள் கேள்விகளுக்கு நான் எந்தப் பதிலையும் சொல்ல விரும்பவில்லை என்றார்.

மனித வாழ்க்கைக்கும் சமூக உறவிற்கும் துளியும் பயன்படாதவற்றை நோக்கி

## தம்மமின்றி சமூகம் இயங்காது!

" தம்மம் என்பது அடிப்படையாகவும் சாராம்சத்திலும் சமூக வயப்பட்டது. தம்மம் என்பது ஒழுக்கம் - அதாவது வாழ்வில் எல்லா அம்சங்களிலும் மனிதர்களுக்கிடையே நிலவ வேண்டிய சரியான உறவை விளக்குவது. ஒருவருக்கொருவர் தொடர்புடன் இரு மனிதர்கள் வாழும் போது, அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தம்மத்திற்கு அவர்கள் வாழ்வில் இடம் தந்தாக வேண்டும். வேறு வகையில் சொல்வதானால், தம்மம் இல்லாமல் சமூகம் இயங்க முடியாது. "

- டாக்டர் அம்பேத்கர்



படிப்பகம்

www.padippakam.com

உங்களுடைய நேரத்தை செலவிடுவதையும், கற்பனையான கேள்விகளை எழுப்பி மனித சமூகத்தை எதார்த்த வாழ்விலிருந்து அப்புறப்படுத்துவதையும் நிறுத்துங்கள். மாறாக இந்த உலகில் 1. துன்பமிருக்கிறதா? 2. துன்பத்திற்கான காரணமென்ன? 3. துன்பத்திற்கு நிவாரணம் என்ன? 4. துன்பத்திற்கு நிவாரண வழிமுறை என்ன? என்ற நான்கு வினாக்களுக்கும் விடை தேடுங்கள் என்றார்.

புத்தர், மறுபிறவி என்ற பார்ப்பனியச் சொல்லாடலின் பொருளை மறுத்தார். மனிதரின் உயிர் 1. பிரத்வி (இயக்கம்) 2. சுப (வெப்பம்) 3. தேஜ் ( உணர்தல்) 4. வாயு (சுவாசக்காற்று) ஆகிய நான்கு மூலங்களால் ஆனது. மனிதரின் உயிர் மரித்தல் என்பது இந்த நான்கு மூலங்கள் சிதறுவதைக் குறிக்கிறது என்றார். மனிதர், தான் வாழும் காலத்தில் ஒவ்வொரு வினாடியும் கோடிக்கணக்கான உயிர்ச் செல்கள் மடிந்து மீண்டும் மறு உருவாக்கம் பெறுகிறது. இதன் வெளிப்பாடே மனித உடலில் ஏற்படும் இளமை மற்றும் முதுமை ஆகியவற்றுக்கான வளர்சிதை மாற்றமாகும். ஒவ்வொரு வினாடியும் ஏற்படும் இந்த வளர்சிதை மாற்றத்தை புத்தர், மறு உருவாக்கம் அல்லது மீள் உருவாக்கம் எனக் குறிப்பிடுகிறார்.

ஆற்றலை எப்படி அழிக்க முடியாதோ, அதைப் போலவே மனித உடலுக்குள் செல்களும் அழிக்க முடியாதவையாகும். ஒரு வகையான ஆற்றல் பிறிதொரு வகையிலான ஆற்றலாகத் திருப்பப்படுவதுபோல, மனித உடல் செல்கள் மாற்றம் பெற்று மனிதருக்குப் பல்வேறு பருவங்கள்/நிலைகளை தோற்றுவிக்கின்றன. இந்த மாற்றங்களை 'அட்டா' என்ற மீள் உருவாக்கமாக புத்தர் குறிப்பிடுகிறார். பார்ப்பனர்களால் கற்பிதம் செய்யப்படும் மறுபிறவியை புத்தர் எதிர்த்து நின்றார். உயிர், தன்னுடைய வெளிப்பாட்டை உடம்பில் வெளிப்படும் வெப்பத்தில் (சுப) வெளிப்படுகிறது. உயிர்களின் மரித்தல் என்பது வெப்பத்தின் மரித்தலாகும். இந்த வெப்பம்தான் உடலிலுள்ள உறுப்புகளுக்கு இயங்கு சக்தியாக விளங்குகிறது என்றார்.



தம்மத்தின் அறநெறி புரட்சிகரமானவை. அது கடவுள் கோட்பாட்டையும் சொர்க்கத்தையும் நரகத்தையும் புறந்தள்ளுகிறது. ஆத்மாவை ஒதுக்குகிறது. நல்வினை, தீவினை, வினைப்பயன், மறுபிறவி போன்றவற்றை மறுத்து நிற்கிறது. மானுட வாழ்வில் ஒரே தன்னலமற்ற பொதுநலக் கொள்கையையே, மானுடர் செயல்படுத்த ஏதுவாக உள்ளது. புத்தரின் தம்மம் தனி நபரிடமிருந்தோ, சமூகத்திலிருந்தோ பிரிக்க முடியாதது. எதுவும் புனிதமல்ல; அனைத்தும் பரிசீலனைக்கும் மறுபரிசீலனைக்கும் உட்பட்டது. புனிதம் - மறுபரிசீலனையை மறுத்து விடுகிறது. ஒருமுறை புனிதம் என்றால் எப்போதும் புனிதமே. இது அறிவியல் பார்வையைக் கொன்று விடுகிறது. பவுத்தம் ஆய்வையும் மறு ஆய்வையும் அங்கீகரிக்கின்றது. எனவே, பவுத்தத்தில் புனிதம் என்று எதுவுமில்லை.

ஆரியப் பார்ப்பன மதத்தில் கருணை வலியுறுத்தப்படுகிறது. இந்தக் கருணை, குழு ஒழுக்கமாக அமைக்கப்பட்டுள்ளது. ஆரியப் பார்ப்பன மதத்தின்படி, தனி மனிதர் மிகவும் கருணை உள்ளவர். அதே நேரத்தில் கண்டிப்பு உள்ளவரும்கூட. தன் கருணையை தன் குடும்பம், சுய சாதி மக்களிடம், சுய சாதி இயக்கத்திலும் வெளிப்படுத்துவர். ஆனால், பவுத்தமோ பொது ஒழுக்கமான மைத்ரியை, பகுத்தறிவு ரீதியான அன்பைப் போதிக்கிறது. 'மைத்ரி' பகுத்தறிவின்பாற்பட்ட அன்பு. அவ்வன்பு வாழ்வளிக்கும் அறிவின்பாற்பட்ட அன்பாகும்.

தனிமனிதர் தனக்கென்று சுயமான சாதி உணர்வோ - வர்ண உணர்வோ, ஆண் - பெண் பேத உணர்வோ, ஏழை - பணக்காரன் உணர்வோ, ஆதிக்கக் குழு சிந்தனைக்கு ஆட்பட்டு, தம்மம் இல்லாதவற்றை தனி மனிதர் எதன் பொருட்டும் செய்வதை பவுத்தம் வலிந்து தடை செய்கிறது. உண்மையான பவுத்தர், ஆதிக்கக் குழு உணர்விலிருந்து விடுபட்டுத் தன்னை ஒட்டுமொத்த உலகத்தின்குடிமகள்/குடிமகன்என்று உணர வேண்டும். இவ்வுணர்தலை புத்தர் 'மைத்ரி' என்கிறார். உண்மையான பவுத்தர்கள் உலகக் குடிமக்கள் ஆவர்.

**“எதுவும் புனிதமல்ல; அனைத்தும் பரிசீலனைக்கும் மறுபரிசீலனைக்கும் உட்பட்டது. புனிதம் மறுபரிசீலனையை மறுத்து விடுகிறது. ஒருமுறை புனிதம் என்றால், எப்போதும் புனிதமே. இது அறிவியல் பார்வையைக் கொன்று விடுகிறது. பவுத்தம் ஆய்வையும் மறு ஆய்வையும் அங்கீகரிக்கின்றது.”**

புத்தர், தன்னுடைய மார்க்கமான தம்மத்தை - மதத்திலிருந்து முற்றிலுமாக வேறுபடுத்துகிறார். மதம் தனி மனிதரின் உடைமை. பொது வாழ்க்கையில் ஒரு தனி மனிதரின் உடைமை. பொது வாழ்க்கையில் ஒரு தனி மனிதர் தன்னுடைய மதத்தை மற்றவர்களிடம் நிர்பந்திக்கவோ, பின்பற்றச் சொல்லவோ இயலாது. மாறாக, தம்மம் என்பது மக்களைச் சார்ந்ததாகும். மதமென்பது இறைவனைச் சார்ந்ததாகும். இறைவன் இல்லாமல் மனிதர் இருக்கலாம்; சமூகம் இருக்கலாம். ஆனால், சமூக அங்கமென விளங்கும் மனிதர் சமூக உறவின் ஒழுக்க விதிகளை அடிப்படையாகவும், தவிர்க்கவியலாததாகவும் தன் வாழ்வில் பின்பற்ற வேண்டிய அவசியம் உள்ளது.

தம்மம் அனைவருக்கும் பொருந்தும். தம்மம் இன்றி சமூகம் இயங்காது. சமூகத்தில் தம்மத்தைச்சுட்டிக் காக்கும் பொறுப்பை உண்மையான ஓர் அரசு ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும். அரசின் இயக்கும் கருவி தம்மமாக இருப்பின் நிச்சயம் ஒரு நற்சமூகம் விளையும். தம்மம் தவறிய ஆட்சி, வெகுமக்களுக்கு எதிரான ஆட்சியாகவே இருக்கும். ஓர் அரசு காவல் துறை, நீதித் துறை இவைகளை தம்மத்தின் கோட்பாட்டோடு இயக்கினால் அதைவிடச் சிறப்பான அரசு இருக்க முடியாது. •

- தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

# 'இந்து' ஜனநாயகம்



ஜனநாயக இருள் - 6

■ யாக்கன்

மிக நீண்டவரிசையில் கையில் அடையாள அட்டையுடன் காத்திருந்து வாக்களித்த 3.24 கோடி வாக்காளர்கள் - கோடிகோடியாய் பணத்தைக் கொட்டியவர்கள் முதல் தேர்தல் காப்புத் தொகைக்காக ஆடு மாடுகளையும், உழுது பிழைத்த காணி நிலத்தையும் விற்றவர்கள், ஓட்டிப் பிழைத்த ஆட்டோவையும் அடமானம் வைத்தவர்கள் வரை 2,586 வேட்பாளர்கள் - 51,534 வாக்குச் சாவடிகள் - லட்சக்கணக்கான தமிழகக் காவல் துறையினருடன் சேர்ந்து, இந்திய துணை நிலை ராணுவத்தின் 198 படைப் பிரிவுகள் கொடுத்த பாதுகாப்பு - கொடும் ஆயுதங்களாக மாறிவிட்ட ஊடகங்களின் பேரிரைச்சல் - ஓட்டுப் போடுவதற்கு சாதி வாரியாக, வீடுவீடாக விநியோகிக்கப் பட்ட கையூட்டுகள் - கள்ள ஓட்டுகள் - கலவரங்கள் - படுகொலைகள் - மிரட்டல்கள் - தற்கொலைகள் - என்று ஏகப் பெருகளமாக நடந்து முடிந்திருக்கிறது, தமிழக சட்டமன்றத் தேர்தல்.

தமிழகத்தோடு சட்டமன்ற பொதுத் தேர்தலைச் சந்தித்த மேற்கு வங்காளம், அசாம், கேரளா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களிலும் இதே நிலைதான். ஆனாலும் தேர்தல் நாளன்று மக்கள் திரண்டு சென்று வாக்களித்திருக்கிறார்கள். கேரளாவில் 72.3 சதவிகிதமும் தமிழகத்தில் 70.1 சதவிகிதமும் வாக்குகள் பதிவாகியுள்ளன.

ஏன் பெருந்திரளாகச் சென்று மக்கள் வாக்களிக்கிறார்கள்? அதற்குக் காரணம், ஜனநாயகத்தின் மீது தீவிரமான பற்றுடையவர்கள் இந்தியர்கள் என்று எவரேனும் கூறமுடியுமா? அரசியல், சட்டம், ஜனநாயகம் - இவை பற்றி எதுவும் அறியாத மக்களே தேர்தல்களில் அதிகமாக வாக்களிக்கிறார்கள். நடந்து கொண்டிருப்பது என்ன வகையான ஆட்சிமுறை என்பதைப் பற்றிக்கூட அறியாத மக்கள் அவர்கள். 2004 இல் நடந்த இந்திய நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் வாக்களித்தவர்களில் 74.2 சதவிகிதம் கல்வியறிவற்றவர்கள் என்று 'சமூக வளர்ச்சி பற்றிய ஆய்வு மய்யத்தின் ஆய்வறிக்கை - 2005' தெரிவிக்கிறது. அதில் 80 சதவிகிதத்தினர் ஒடுக்கப்பட்ட மக்களாவர்.

தலித் மக்களும், சிறுபான்மை சமூகத்தவர்களும் பெண்களும்தான் தேர்தலில் அதிக ஆர்வமுடனும், வேகத்துடனும் வாக்களிக்கிறார்கள். அதற்கு என்ன காரணம்? அந்த மக்களின் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு விட்டதா? அம்மக்களின் எதிர்காலம் நம்பிக்கைக்குரியதாக இருக்கிறதா? நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஜனநாயக ஆட்சி முறையே தங்களின் பிரச்சினைகளைத் தீர்க்க சரியான வழிமுறை என்று அவர்கள் நம்புகிறார்களா? இவற்றில் எதுவும் இல்லை என்றால், ஏன் அவர்கள் திரண்டு வந்து வாக்களிக்கிறார்கள்? வாக்குச் சாவடியை நோக்கி அம்மக்களை இழுத்து வருவது எது?

அரசின் பாதுகாப்பு, சமூக மதிப்பு, பொருளாதார வளம் ஆகியவற்றுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மேல்தட்டு வகுப்பினர் தேர்தலில் வாக்களிப்பதில்லை. நாட்டின் வளத்தை உறிஞ்சிக் கொழுத்துக் கொண்டிருக்கும் ஆதிக்கச்சாதியினரே அதிகாரத்தைக் கொண்டிருப்பவர்களாகவும், பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துபவர்களாகவும் இருக்கிறார்கள். அத்தகைய வகுப்பினருக்கு இந்திய ஜனநாயகம் முக்கியமானதாகப் படவில்லை. அதைப் பற்றிய உயர்வான மதிப்பீடும் அவர்களிடமில்லை. இந்த முரண்பாட்டைப் புரிந்து கொள்வதிலிருந்துதான் இந்திய ஜனநாயகம் சந்தித்துக் கொண்டிருக்கிற சிக்கல்களைப் பற்றி அறிந்து கொள்ள முடியும். அது யாருக்கு அதிக பாதுகாப்பானதாகவும், யாருக்கு தேவையானதாகவும் இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள முடியும்.

கடந்த அய்ம்பதாண்டு காலமாக இந்திய ஜனநாயகத்தின் மீதும், அதன் அரசமைப்புச்சட்டங்களின் மீதும் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு செயலாற்றி வருபவர்களில் பெரும்பாலானவர்கள் தலித் மக்கள்தான். தேர்தலில் தீவிரமாகப் பங்கேற்பதன் மூலம், இந்திய ஜனநாயகத்தின் பாதுகாவலர்களாக விளங்குகிறார்கள் தலித் மக்கள். எல்லா அரசியல் கட்சிகளுக்கும் தலித் மக்கள்தான் வாக்கு வங்கிகளாக உள்ளனர். ஆயினும் அம்மக்களின் அடிப்படைத் தேவைகள்கூட, இன்று வரையிலும் நிறைவு செய்யப்படவில்லை.

இந்து சாதியச் சமூகத்தின் ஒடுக்குமுறைக்கு ஆளாகும் தலித் மக்கள் நிரந்



படிப்பகம்

www.padippakam.com

தரமான கொடிய வறுமையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். குடிநீர், கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றிற்காக அம்மக்கள் மீது கடுமையான பாகுபாடு காட்டப்பட்டு வருகிறது. இருபத்தைந்து கோடி தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களை சமூக இழிவிலிருந்து மீட்கவும், அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யவும் இந்திய ஆட்சியாளர்கள் தவறிவிட்டனர். தலித் மக்களுக்கு வந்து சேரவேண்டிய நலன்களைத் தடுத்து நிறுத்துபவர்களாகவும் ஆட்சியாளர்கள் இருக்கிறார்கள். இது, சமூகத்தளத்தில் அம்மக்களை ஒடுக்கி அவர்களின் உழைப்பைச் சுரண்டி, வறுமையிலும் அறியாமையிலும் அவர்களை நிலை நிறுத்தி வைத்திருக்கும் ஆதிக்க சாதி ஆண்டைகளின் செயலுக்கு இணையானதாக இருக்கிறது. எனவேதான், எந்நாளும் ஆண்டைகளையும் அதிகாரிகளையும், ஆட்சியாளர்களையும் எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறார்கள் தலித்துகள். நல்வாய்ப்பாக அந்தப் போராட்டம் ஜனநாயக வழியில்தான் நடந்து கொண்டிருக்கிறது. எனவேதான், இந்திய ஜனநாயகம் எந்தவித சேதாரமுமின்றி தொடர்ந்து கொண்டிருக்கிறது.

ஒடுக்கப்பட்ட மக்கள்தங்களின் உரிமைகளை மீட்க, ஜனநாயக வழிப் போராட்டங்களைத்தான் விரும்புகிறார்கள் என்பதை உறுதி





களிக்க முனையும்போது தாக்கப்படுகிறார்கள். அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் பதவிகளில் அமரும்போது படுகொலை செய்யப்படுகிறார்கள். மதுரை மேலவளவில் அதுதான் நடந்தது.

இந்நிலை அண்மையில் நடந்து முடிந்த தமிழக சட்டமன்றத் தேர்தலிலும் அழுத்தமாக வெளிப்பட்டிருப்பதை தேர்தல் முடிவுகள் தெளிவுபடுத்துகின்றன. முன்னதாக தேர்தல் கூட்டணி அமைப்பதில் தலித் அமைப்புகள் மிக மோசமாகப் புறக்கணிக்கப்பட்டன. 'அழைப்பிற்காகக் காத்திருக்கிறோம்' என்று வெளிப்படையாகவே அறிவித்தும்கூட, அதற்குச் செவிமடுப்பாரில்லை. விடுதலைச்சிறுத்தைகள் இயக்கம் அ.தி.மு.க.வுடன் தேர்தல் கூட்டணி உடன்பாடு கண்டது. அதற்காகத் தன்னை 'அரசியல் கட்சி'யாக அறிவிக்க வேண்டிய நிலைக்கு ஆளானது. புதிய தமிழகம், பகுஜன்சமாஜ் கட்சியுடன் இணைந்து தனித்துப் போட்டியிட்டது. எதிர்பார்த்தது போலவே இரண்டு முன்னணி தலித் அமைப்புகளுமே இந்தத் தேர்தலில் பெரிதாக எதையும் சாதித்துவிடவில்லை.

அ.தி.மு.க.வுடன் கூட்டணி கொண்டபோதிலும் அக்கட்சியைச் சார்ந்த சாதி வெறியர்களால் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வேட்பாளர்கள் மிரட்டப்பட்டனர். அ.தி.மு.க.வைச் சார்ந்த சாதி இந்

**"இந்தியாவில் ஜனநாயகம் உருவாகாமல் போனதற்கு இந்து மதம்தான் காரணம். சகோதரத்துவம் என்பதன் எதிர்க் கொள்கையை மூலமாகக் கொண்டிருக்கிறது அது. சமத்துவமின்மையே இந்து மதத்தின் மூலக்கோட்பாடு. இந்து மதத்தின் சமத்துவமின்மை ஒழியும்வரை, எந்தத் தேர்தலாலும் ஜனநாயக ஆட்சியைத் தரமுடியாது என்கிறார் அம்பேத்கர்."**

செய்துகொள்வதற்கு நாம் அதிகம் சிரமப்படத் தேவையில்லை. ஏனெனில், நடைமுறை அரசையும் சமூக அமைப்பையும் உடைத்தெறியும் புரட்சிகர ஆயுதப் போராட்டங்களில், அம்மக்கள் இன்று வரை ஆர்வம் காட்டவில்லை. அதற்குக் காரணம், ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக, அரசியல் எழுச்சிக்கு வித்திட்ட புரட்சியாளர் அம்பேத்கர் அம்மக்களுக்குக் காட்டியது ஜனநாயகப் பாதைதான்.

இந்திய சாதியச் சமூகம் பலநூறாண்டுகளாக மறுத்து வந்த மனித உரிமைகளையும், காலனி ஆட்சிக் காலத்தில் மறுக்கப்பட்ட குடியுரிமை - வாக்குரிமை போன்ற அரசியல் உரிமைகளையும் இன்று தலித் மக்கள் பெற்றிருக்கிறார்கள். அதைப் பெற்றுத் தந்த ஜனநாயக மதிப்பீடுகளைப் பாதுகாக்க வேண்டிய கடமை அவர்களுக்கு இருக்கிறது. ஜனநாயகத்தைப் பாதுகாப்பதென்பது, அதில் பங்கேற்பதும் அதைப் பரவச் செய்வதுமாகும். அதைத்தான் தலித் மக்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், ஜனநாயகத்தில் பங்கேற்பதன் மூலம், தங்களுக்கு இணையானவர்களாக தலித் மக்கள் மாறுவதை சனாதனப் பற்றுக் கொண்ட சாதி ஆதிக்கவாதிகளால் சகித்துக் கொள்ள முடியவில்லை. ஜனநாயகத்திலும் தலித் மக்கள் அடிமைகளாகவே இருக்க வேண்டும் என்பது அவர்களின் எண்ணம். ஆட்சியாளர்கள், அதிகார வர்க்கம், சாதி இந்துக்கள் அனைவரின் சிந்தனையும் ஒரே நேர்கோட்டில் இணைந்து நின்று, தலித் மக்களை ஜனநாயகச் சுழற்சியிலிருந்து வெளியேற்றத் துடிக்கிறது. அதனால்தான் தேர்தலில் போட்டியிடும் தலித் வேட்பாளர்கள் மிரட்டப்படுகிறார்கள்; தங்கள் பிரதிநிதிக்கு வாக்

துக்கள் யாரும் விடுதலைச் சிறுத்தைகள் வேட்பாளர்களுக்கு வாக்களிக்கவில்லை. ஏனெனில், 2001 இல் சட்டமன்றத் தேர்தலில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி பெற்ற 1.29 சதவிகித வாக்குகள், இந்தத் தேர்தலில் அதிகரிக்கவில்லை. ''மங்களூர், காட்டுமன்னார் கோயில் ஆகிய இரண்டு தொகுதிகளிலும் நாங்கள் தனித்து நின்றிருந்தால்கூட, குறைந்த வாக்கு வித்தியாசத்திலாவது வெற்றி பெற்றிருப்போம் என்பதை மறுக்க முடியாது. கூட்டணி சேர்ந்தது மூலம் அ.தி.மு.க. மற்றும் ம.தி.மு.க. தொண்டர்களின் ஆதரவையும், ஒற்றுமையையும் பெற்றோம் என்றாலும்கூட, அவர்களின் வாக்கு வங்கி முழுமையும் விடுதலைச் சிறுத்தைகளுக்குக் கிடைக்கவில்லை என்பதை என்னால் உணர முடிகிறது'' என்று தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

புதிய தமிழகத்திற்கோ பாதகமான முடிவே ஏற்பட்டுள்ளது. தலித் மக்கள் அமைப்புகளை ஆதரிக்கும் சிந்தனை இன்றளவும் சாதி இந்துக்களிடம் உருவாகவில்லை. சாதி இந்து வாக்காளர்கள் தலித் வேட்பாளர்களுக்கு வாக்களிக்க, தொடர்ந்து மறுத்து வருவதற்கு என்ன காரணம்? ஜனநாயகத்தில் பங்கேற்று ஆட்சி அதிகாரத்தில் அமருகிற வாய்ப்பை தலித் மக்கள் பெற்றுவிடக் கூடாது என்ற ஒரே ஒரு முடிவுதான். எனவேதான், இந்து சாதியத்தின் அநீதியான சமூக அமைப்பிற்கு எதிராகப் போராடுவதைப் போலவே, அதே சக்திகளின் பிடியில் சிக்கியிருக்கும் ஜனநாயகத்திற்கு எதிராகவும் தாழ்த்தப்பட்ட மக்கள் போராட வேண்டியுள்ளது. அந்தப் போராட்டத்தைத்தான், இந்திய ஜனநாயகத்தைக் காக்கவும், சாதியவாதிகளிடமிருந்து அதை மீட்கவும் நடைபெறுகிற உண்மையான 'ஜனநாயகப் புரட்சி' என்றார் புரட்சியாளர் அம்பேத்கர்.




படிப்பகம்

www.padippakam.com

இரட்டைவாக்குரிமைக்கு மாற்றாக பூனா ஒப்பந்தத்தின் மூலம் பெற்ற தனித் தொகுதிகளை, 1937 க்குப் பிறகு நடந்த தேர்தல்களில் காங்கிரஸ் 'கபளீகரம்' செய்யத் தொடங்கிய போதே இந்திய ஜன நாயகத்தின் மய்ய இழை அறுபட்டுப் போனது. 1942 இல் பட்டியல் சாதியினர் கூட்டமைப்பை உருவாக்கிய டாக்டர் அம்பேத்கர் 1945, 1947 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்களில் களமிறங்கினார். ஆனாலும் பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு ஒரு தொகுதியில்கூட வெற்றி பெறவில்லை. அதிகபட்சமாக 9.9 சதவிகித வாக்குகளையே அது பெற்றது. 1952 இல் நேருவின் அமைச்சரவையிலிருந்து வெளியேறிய பின்னர், நடைபெற்ற தேர்தலில் 'தேசிய கட்சி' என்ற அங்கீகாரத்தைப் பெற்றிருப்பினும்கூட, ஒரு தொகுதியில்கூட பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு வெற்றி பெற முடியவில்லை - பாம்பே வடக்குத் தொகுதியில் போட்டியிட்ட டாக்டர் அம்பேத்கர் தோல்வி அடைந்தார்.

அதன்பிறகு, அவரது ஆதரவாளர்களால் தொடங்கப்பட்ட இந்திய குடியரசுக் கட்சி, 1962, 1967, 1969 தேர்தல்களில் போட்டியிட்டு 3.5 முதல் 4.1 சதவிகிதம் ஓட்டுகளையே பெறமுடிந்தது. எனவே, கடந்த நூற்றாண்டு காலம் நடந்த தேர்தல்களில் சாதி இந்துக்கள், தலித் இயக்கங்கள் தேர்தலில் போட்டியிடுகிறபோது, அதற்கு வாக்களிக்க தொடர்ந்து மறுத்து வருகிறார்கள் என்பதை உறுதியாகக் கூற முடியும். மேலும், தலித் இயக்கங்களுக்கு தலித் மக்கள் அனைவரும் வாக்களித்து விடாதபடி சாதி இந்துக்களால் தடுத்து நிறுத்தப்படுகிறார்கள். தேர்தலில் போட்டியிடும் அளவிற்கு வளர்ந்து வருகின்ற இயக்கங்களை திட்டமிட்டுச் சிதறடிக்கிறார்கள். எல்லா தடைகளையும் கடந்து வெற்றிபெற்றுவிடும் தலித் இயக்கப் பிரதிநிதிகள், சாதி இந்துக்களால் தொடர்ந்து அச்சுறுத்தப்பட்டு அல்லது ஆசை காட்டப்பட்டு விலைக்கு வாங்கப்படுகிறார்கள்.

இந்தியா முழுவதிலும் ஏராளமான முன்னுதாரணங்கள் இருக்கின்றன. குறிப்பாகத் தமிழகத்தில், தாழ்த்தப்பட்ட மக்கள் அமைப்புகளை தேர்தல் களத்தில், சாதி இந்துக்களின் கட்சிகளாகிய தி.மு.க., அ.தி.மு.க., போன்ற திராவிடக் கட்சிகள் முளையிலேயே கிள்ளி எறியத் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகின்றன. 1989 இல் நடந்த சட்டமன்ற பொதுத் தேர்தலில் தி.மு.க., அ.தி.மு.க., ஆகிய இரு பெரும் சாதி இந்துக் கட்சிகளை எதிர்த்து நின்று, காட்டுமன்னார்கோயில் தொகுதியில், எல். இளையபெருமாளின் மனித உரிமை இயக்கத்தின் வேட்பாளர் தங்கசாமி, சாதி இந்துக்களின் ஓட்டுகள் இல்லாமலேயே வெற்றி பெற்றார். அவரைத் தங்கள் பக்கம் இழுக்க தி.மு.க. மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி அடைந்தன. 1991 இல் நடந்த சட்டமன்ற பொதுத் தேர்தலில் அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்து காட்டுமன்னார்கோயில், வானூர் ஆகிய இரண்டு தொகுதிகளில் போட்டியிட்டது மனித உரிமை இயக்கம்; இரண்டு தொகுதிகளிலுமே இரட்டை இலைச் சின்னத்தில் போட்டியிட்டு இயக்கம் வெற்றி பெற்றது. ஓராண்டு முடியும் முன்னரே, மனித உரிமை இயக்கத்தின் சட்டமன்ற உறுப்பினர்களான சித்தாமூர் ஆறுமுகம் (வானூர் தொகுதி), ராஜேந்திரன் (காட்டுமன்னார்கோயில்) இருவரையும் அ.தி.மு.க. தனது கட்சியில் இணைத்துக் கொண்டது. அதன்பிறகு, மனித உரிமை இயக்கம் சிதையத் தொடங்கியது. இன்று அப்படியொரு வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றி பெற்ற மனித உரிமை இயக்கம் இல்லாமலேயே போய்விட்டது.


'கம்யூனலிசம் காம்பேட்'

எனவேதான், இந்தியாவில் நடைபெற்று வரும் ஜனநாயகம் ஒரு தலைப்பட்சமானது; அநீதியானது; முழுமையற்றது; மக்கள் விரோதமானது என்கிறோம். இந்தியாவில் ஜனநாயகம் உருவாகாமல் போனதற்கு புரட்சியாளர் அம்பேத்கர் தெளிவான பதிலைத் தருகிறார்: ''இந்தியாவில் ஜனநாயகம் உருவாகாமல் போனதற்கு இந்து மதம்தான் காரணம். சகோதரத்துவம் என்பதன் எதிர்க் கொள்கையை மூலமாகக் கொண்டிருக்கிறது அது. சமத்துவமின்மையே இந்து மதத்தின் மூலக் கோட்பாடு. இந்துமதத்தின் சமத்துவமின்மை ஒழியும்வரை எந்தத் தேர்தலாலும் ஜனநாயக ஆட்சியைத் தரமுடியாது'' என்கிறார். அத்தகைய இந்துமதம் வளர்த்தெடுத்த கருத்துகளே சாதி இந்துக்களை இயக்குகிறது.

எனவேதான், தலித் மக்கள் தேர்தலில் பங்கேற்று வெற்றி பெறுவதை சாதி இந்துக்கள் தடுக்க முனைகிறார்கள். ஜனநாயகத்திற்கு விரோதமான இந்து மதக் கோட்பாடுகள், இந்தியச் சமூகத்திலிருந்து ஒழிக்கப்படும் வரை இந்தியாவின் ஜனநாயகம், உயிரற்றதாகவே இருக்கும். அவ்வப்போது நடைபெறும் தேர்தல்கள், உயிரற்ற ஜனநாயகப் பிணத்தை மேலும் கீழும் புரட்டிப் பார்க்கும் செயலாகவே இருக்கும். ●

- இருள் விரியும்



## சுடர் ஆய்வுப் பரிசு

'அருவி' - தமிழ் ஆய்வு மய்யம், 'புதுவிசை' கலாச்சாரக் காலாண்டிதழ் இணைந்து - சுடர் ஆய்வுப் பரிசுக்கு பின்வரும் ஆய்வுத் துறைகளில் கட்டுரைகளை வரவேற்கிறது.

- இலக்கியத் திறனாய்வு
- தலித்தியம், பெண்ணியம்
- நாட்டுப்புறவியல்
- சமூகவியல், மானுடவியல்
- அறிவியல், சூழலியல்

தேர்ந்தெடுக்கப்படும் 5 கட்டுரைகளுக்குத் தலா ரூ. 2000 சுடர் ஆய்வுப் பரிசும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும். கட்டுரை புதிதாக எழுதப்பட்டதாக, இதுவரை எந்த நூலிலும் இடம் பெறாததாக இருக்க வேண்டும். கட்டுரை அளவு 12 முதல் 16 பக்கம் வரை. கட்டுரைகளை அனுப்ப கடைசி நாள் : 30.6.2006 ஒருவரே எத்தனை கட்டுரைகளையும் அனுப்பலாம்.

*கட்டுரைகளை அனுப்ப வேண்டிய முகவரி :*
'புதுவிசை', பி. 2, தொலைபேசி ஊழியர் குடியிருப்பு, ஓசூர் - 635 109



படிப்பகம்

www.padippakam.com

# மன உறுதியின் மறுவடிவமாய்

# இரோம் சர்மிளா



இரோம் சர்மிளா - 'காந்தி தேச'த்திற்கு எதிராக காந்தியின் ஆயுதத்தையே வலுவாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் ஒரு போராளி. இந்திய அரசின் அடக்குமுறைச் சட்டமான 'ஆயுதப் படை (சிறப்பு அதிகாரங்கள்) சட்டம் - 1958' நீக்கப்பட வேண்டும் என்று கடந்த அய்ந்து ஆண்டுகளுக்கும் மேலாக பட்டினிப் போராட்டம் நடத்தும் மணிப்பூர் பெண். அதற்காக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு, இன்று வரை குழாய் வழியாக வலிந்து உணவு செலுத்தப்பட்ட நிலையிலும் - தன் மன உறுதியை இழக்காது துணிவுடன் நிற்கும் களப்போராளி!

இரண்டு ஆண்டுகளுக்கு முன் மணிப்பூர் இம்பால் நகரில் உள்ள இந்திய ராணுவத்தின் அசாம் படையணியின் தலைமையகம் முன்பு, 12 மணிப்பூர் பெண்கள் ஆடையின்றி போராட்டம் நடத்தியதை யாரும் அத்தனை எளிதில் மறந்திருக்க முடியாது. அசாம் படையணியின் ராணுவ வீரர்கள் மணிப்பூரைச் சேர்ந்த மனோரமா எனும் பெண்ணை, பாலியல் வன்புணர்வு செய்து கொலை செய்ததை எதிர்த்து - 'மணிப்பூர் தாய்கள்' அமைப்பினைச் சேர்ந்த 12 பெண்கள் தங்கள் உடலில் சிறு ஆடையும் இன்றி 'இந்திய ராணுவமே எங்களையும் பாலியல் பலாத்காரம் செய்' என்ற பதாகைகளை ஏந்தியபடி இம்பால் தெருக்களில் நின்று போராட்டம் நடத்தினர்.

இப்போராட்டம் உலகெங்கிலும் ஓர் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அதுவரை மணிப்பூர் மற்றும் இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் நடந்து கொண்டிருக்கும் தன்னுரிமைக்கானப் போராட்டங்கள் குறித்தும், அதனை அடக்க நடக்கும் அரச பயங்கரவாதங்கள் குறித்தும் உலகின் கவனத்தை அப்போராட்டம் ஈர்த்தது. மணிப்பூர் பெண்களின் மன உறுதியையும் துணிவையும் அப்போராட்டம் வெளிப்படுத்தியது. அத்தகைய மன உறுதியும் துணிவும் தெளிவும் மிக்க மணிப்பூர் பெண்களில் ஒருவர்தான் இரோம் சர்மிளா. ஒரு கவிஞராகவும் செய்தியாளராகவும் அறியப்பட்ட இவர் - இன்று செய்திகளை, வரலாற்றை உருவாக்குபவராக வாழ்ந்து வருகிறார்.

**நான் மனதளவில் மிகவும் மென்மையானவள். என் மகளைப் பார்த்தால் நான் அழுதுவிடுவேன். அதன் மூலம் அவளுடைய மன உறுதியைக் குலைக்க நான் தயாராக இல்லை. அவளது போராட்டம் வெற்றி பெற்ற பிறகே அவளை நான் சந்திப்பேன் என்கிறார் அவரது தாய்.**

'ஆயுதப் படை (சிறப்பு அதிகாரங்கள்) சட்டம் - 1958'அய் இந்திய அரசு அமைதியற்ற பகுதியாக கருதும் எங்கும் நடைமுறைப்படுத்த தகுந்தது. அச்சட்டம், ராணுவத்தின் எந்தப் பொறுப்பில் இருப்பவருக்கும் அல்லது ராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் எந்த ஒரு இணைப்புக் குழுவுக்கும் எவரையும் கேள்வியின்றி சுடவோ, கைது செய்யவோ, தேடவோ அதிகாரத்தை வழங்குகிறது. மேலும், சட்ட ரீதியான மாற்றுக்கான வாய்ப்பு இதில் ஏறத்தாழ கிடையாது. 1980 முதல் மணிப்பூர் இச்சட்டத்தின் பிடியில்தான் உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

2000 ஆம் ஆண்டு நவம்பர் 2 அன்று, மணிப்பூரில் உள்ள மாலோம் எனும் இடத்திற்கு அருகில் அசாம் படையணியின் ஒரு குழுவை, எழுச்சியாளர்கள் படை, குண்டு வீசி அழித்தது. இது ராணுவத்தினரின் ஆத்திரத்தை கிளப்பிவிட்டது. பொது மக்கள் 10 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அந்தப் படுகொலையோ, அதனைத் தொடர்ந்த கொடூரமான தேடல் வேட்டையோ மணிப்பூர் மக்களுக்குப் புதியது அல்ல. இதைப் போன்ற பல கொடுமையான நிகழ்வுகளை மணிப்பூர் மக்கள் அன்றாடம் சந்திக்கின்றனர். ஆனால், சர்மிளாவை போராடத் தூண்டியதில் இந்நிகழ்வே பெரும் பங்கு வகித்தது. ஆயுதப் படையின் அத்துமீறல்களைத் தடுக்க எந்த வழியும் இல்லை என்கிறார் சர்மிளா. அன்று முதல் சர்மிளா தனது மன உறுதியை ஆயுதமாகக் கொண்டு, தனது உடலையே போர்க்களமாக மாற்றிக் கொண்டார்.

**பகுத்தறிவுள்ள மனிதர்களாக எங்கள் வாழ்வை நாங்களே நிர்ணயித்துக் கொள்ளும் உரிமை வேண்டும்.**

அவர் பட்டினிப் போராட்டத்தைத் தொடங்கிய சில நாட்களிலேயே, தற்கொலை முயற்சி என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார். பிணையை மறுத்த அவர், தனது போராட்டத்தைத் தொடர்ந்தார். அது முதல் கடந்த அய்ந்து ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் இருக்கும் அவருக்கு மூக்கின் வழியாக வலிந்து உணவு செலுத்தப்படுகிறது. அவ்வப்போது நீதிமன்றங்கள் அவரை விடுதலை செய்தபோதும், வெளியே வந்து தனது பட்டினிப் போராட்டத்தை அவர் தொடருவதால் மீண்டும் மீண்டும் கைது செய்யப்படுகிறார். அய்ந்து ஆண்டுகளாக உணவு உட்கொள்ளாததால், அவரது உடல்நிலை பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. தனது வயதான தாயை இந்த காலகட்டத்தில் அவர் சந்திக்கவேயில்லை. ''நான் மனதளவில் மிகவும் மென்மையானவள். என் மகளைப் பார்த்தால் நான் அழுதுவிடுவேன். அதன் மூலம் அவளுடைய மன உறுதியைக் குலைக்க நான் தயாராக இல்லை. அதனால் அவளது போராட்டம் வெற்றி பெற்ற பிறகே அவளை சந்திப்பேன்'' என்கிறார் அவரது தாய்.

'பெயரிடப்படாதது' : மணிப்பூர் பெண்களும் போராட்டங்களும் - 3 விவரணைகள் என்ற தலைப்பில் வெளிவந்திருக்கும் குறும்படக் குழுவினர், சர்மிளாவை நேர்காணல் செய்து வெளியிட்டிருக்கின்றனர். அதில் தனது நோக்கம் நிறைவேறும் வரை தனது போராட்டமும் தொடரும் என திட்டவட்டமாகக் கூறுகிறார் சர்மிளா. அந்நேர்காணலில் அவர் மேலும் கூறியிருப்பதாவது :

**ஏன் இந்தப் பட்டினிப் போராட்டத்தைத் தொடங்கினீர்கள்?**

என்னுடைய தாய் நாட்டிற்காக. 'ஆயுதப் படை (சிறப்பு அதிகாரங்கள்) சட்டம் - 1958'அய் நீக்கும் வரை நான் எனது போராட்டத்தைக் கைவிட மாட்டேன்.

**இந்தப் போராட்டத்தை நடத்தத் தூண்டிய நிகழ்வைப் பற்றி ஏதேனும் கூற இயலுமா?**

நான் ஒரு கூட்டத்தில் கலந்து கொள்ள மாலோம் சென்றிருந்தேன். சில நாட்களில் நடக்கவிருந்த ஓர் அமைதிப் பேரணி குறித்து திட்டமிட நடைபெற்ற கூட்டம் அது. நாளிதழ்களில் வெளிவந்த இறந்தவர்களின் படங்களைப் பார்த்து அதிர்ந்து போனேன். மரணத்தின் பிடியில் நிறுத்தும் இப்போராட்டத்தை மேற்கொள்ளும் துணிவை அந்நிகழ்வுதான் எனக்கு அளித்தது. ஏனெனில், ஒன்றுமறியாத மக்களுக்கு எதிராக ஆயுதப் படையினரின் அத்துமீறல்களைத் தடுக்க வேறு வழி எதுவும் இல்லை. ஓர் அமைதிப் பேரணி எந்த விதத்திலும் பயனளிக்காது என்று நான் கருதினேன். இந்தச் சூழலை மாற்ற நான் ஏதேனும் செய்தாக வேண்டும் என்று நினைத்தேன்.

**ஆனால், ஏன் இந்த வழிமுறை? ஏன் சாகும் வரையிலான பட்டினிப் போராட்டத்தைத் தேர்ந்தெடுத்தீர்கள்?**

இந்த ஒரு வழிமுறைதான் எனக்கு இருந்தது. ஏனெனில், பட்டினிப் போராட்டம் மன உறுதியை அடிப்படையாகக் கொண்டது.

**இந்தப் போராட்டம் உங்கள் மீது ஏற்படுத்தியிருக்கும் தாக்கம், உங்கள் உடல்நிலை?**

அது ஒரு பொருட்டல்ல. நாம் அனைவரும் அழியக்கூடியவர்கள் தாம்.

**உங்கள் உடல் மீது திணிக்கப்படும் இத்தகைய தண்டனை தான் சிறந்த வழி என்று உறுதியாக நம்புகிறீர்களா?**

இது திணிப்பு அல்ல. இது தண்டனையும் அல்ல. இது என்னுடைய இன்றியமையாத கடமை என நினைக்கிறேன்.

**தங்கள் குடும்பம் உங்கள் போராட்டத்தை எவ்வாறு எதிர்கொள்கிறார்கள்?**

எனது தாய் எனது முடிவு குறித்த அனைத்தையும் அறிவார். அவர் கல்வியறிவு இல்லாதவர் என்றபோதும், மிகவும் எளிமையானவர் என்றபோதும், எனது கடமையை நிறைவேற்ற அனுமதிப்பதற்கான துணிவு மிக்கவர்.




மணிப்பூர் மாவட்டம் இம்பாலில், 10.7.04 அன்று தங்ஜம் மனோரமா என்ற பழங்குடிப் பெண்ணை, அரசின் ஆயுதப் படைகள் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கி, துன்புறுத்தி, படுகொலை செய்ததைக் கண்டித்து, பழங்குடியினப் பெண்கள் ஆடையின்றி அசாம் ராணுவப் படைப் பிரிவு முன்பு 15.7.04 அன்று தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்



படிப்பகம்

www.padippakam.com

**தங்கள் தாயை எப்போது கடைசியாக சந்தித்தீர்கள்?**

ஏறத்தாழ அய்ந்து ஆண்டுகளுக்கு முன்பு. எங்களுக்குள் ஒரு புரிதல் இருக்கிறது. அதாவது நான் எனது நோக்கத்தை நிறைவேற்றிய பிறகு தான் அவர் என்னை சந்திப்பார்.

**இருவருக்கும் அது மிகவும் கடினமாக இருக்குமே...**

அவ்வளவு கடினம் அல்ல (சற்று அமைதி). ஏனெனில், அதை எப்படி விவரிப்பேன். நாம் அனைவரும் இங்கு ஏதேனும் ஒரு செயலைப் புரியவே வருகிறோம். அதோடு தனியாகவே வருகிறோம்.

**சரி. ஏன் நீங்கள் காவலில் வைக்கப்பட்டிருக்கிறீர்கள்? ஏதேனும் குறிப்பான காரணம் உண்டா?**

அது எனது விருப்பம் அல்ல. ஆனால், அரசு இந்தப் போராட்டம் சட்டத்திற்குப் புறம்பானது என்று சொல்கிறது.

**ஆனால், அரசு உங்கள் பட்டினிப் போராட்டம் ஒரு தற்கொலை முயற்சி என்றும், அது ஒரு குற்றம் என்றும் சொல்கிறதே?**



**நான் மருத்துவமனையில் கைதியாக இருக்கிறேன். அனுமதியின்றி என்னை யாரும் சந்திக்க முடியாது. மக்களைப் பிரிந்து இருப்பதை நான் மிகவும் வேதனையாகக் கருதுகிறேன்.**

அவர்கள் அப்படி நினைத்தாலும் நான் தற்கொலை செய்து கொள்ளும் மனநிலையில் இல்லை. அப்படி நான் தற்கொலை செய்து கொள்ளக்கூடியவளாக இருந்தால், நீங்களும் நானும் இவ்வாறு உரையாட முடியுமா? எனது பட்டினிப் போராட்டம் ஒரு வழிமுறை. எனக்கு வேறு எந்த வழிமுறையும் இல்லை.

**எவ்வளவு காலத்திற்கு இதைத் தொடர தயாராக இருக்கிறீர்கள்?**

எனக்கு நம்பிக்கை இருந்தபோதும், காலம் தெரியவில்லை. எனது நிலைப்பாடு உண்மையைச் சார்ந்தது. இறுதியில் உண்மை வெற்றிபெறும் என்று நம்புகிறேன். கடவுள் எனக்கு துணிவைத் தருகிறார். அதனால் இந்த செயற்கை வழிமுறைகளின் மூலமாகவும் நான் உயிருடன் இருக்கிறேன்.

**மருத்துவமனையில் பொழுதை எப்படி கழிக்கிறீர்கள்?**

பெரும்பாலான நேரம் யோகா பயிற்சியில் ஈடுபடுகிறேன். அது எனது உடலையும் மனதையும் ஆரோக்கியமாக வைத்திருக்கிறது. சூழல்களே எது இயற்கை என்பதை நிர்ணயிக்கின்றன. (தனது மூக்கில் சொருகப்பட்டிருக்கும் குழாயைக் காட்டி) இது செயற்கையானது என்றபோதும் எனக்கு இயற்கையானதாகி விட்டது.

**எதை மிகவும் இழந்ததாக நினைக்கிறீர்கள்?**

மக்களை...! நான் இங்கு (மருத்துவமனையில்) கைதியாக இருக்கிறேன். அனுமதியின்றி என்னை யாரும் சந்திக்க முடியாது. மக்களைப் பிரிந்து இருப்பதை நான் மிகவும் வேதனையாகக் கருதுகிறேன்.

**உங்களுடைய மேலான விருப்பம்...?**

எனது விருப்பம்? பகுத்தறிவுள்ள மனிதர்களாக எங்கள் வாழ்வை நாங்களே நிர்ணயித்துக் கொள்ளும் உரிமை வேண்டும்.

**ஆயுதப் படை (சிறப்பு அதிகாரங்கள்) சட்டம் நீக்கப்படும் என்று நினைக்கிறீர்களா? தாங்கள் எதற்காகப் போராடுகிறீர்களோ அது தங்களுக்கு கிடைக்குமா?**

எனது பணி கடுமையானது என்பதை உணர்கிறேன். ஆனால் நான் அதை மேற்கொள்ளத்தான் வேண்டும். நான் பொறுமையாக இருக்க வேண்டும். அந்த மகிழ்ச்சியான ஒருநாள் வந்தே தீரும். அதுவரை நான் உயிரோடு இருந்தால், அதுவரை பொறுமையாகத்தான் இருக்க வேண்டும். ●

*'தெகல்கா' ஏட்டில் வெளிவந்த பேட்டியின்*
*தமிழாக்கமும், குறிப்பும் : பூங்குழலி*


பாரதி அபிமானிகள் குறிப்பாக, கம்யூனிஸ்டுகள்,
முற்போக்காளர்கள், இலக்கியவாதிகள் படிக்க வேண்டிய நூல்கள்



நூல் : திராவிடர் இயக்கப் பார்வையில் பாரதியார்
ஆசிரியர் : வாலாசா வல்லவன்
வெளியீடு : தமிழ்க் குடியரசு பதிப்பகம்
14/12, மியான் முதல் தெரு
சேப்பாக்கம்
சென்னை - 600 005
பேசி : 94443 - 21902
பக்கங்கள் : 112 ■ விலை : ரூ. 40




நூல் : 'பாரதி' ய ஜனதா பார்ட்டி
ஆசிரியர் : வே. மதிமாறன்
வெளியீடு : 'அங்குசம்'
15, எழுத்துக்காரன் தெரு
காலடிப்பேட்டை
திருவொற்றியூர்
சென்னை - 600 019
பேசி : 2599 2853
பக்கங்கள் : 135 ■ விலை : ரூ. 50




படிப்பகம்

www.padippakam.com

# ''ஈன ஜாதி பறப்பயலுக்கு பஞ்சாயத்துத் தலைவர் பதவியா?''

## இனவெறி இந்தியாவின் 'அகிம்சை' முகம் - II




■ **அய். இளங்கோவன்**

''ஜாதி இந்துக்கள் எறும்புக்குக்கூட தீங்கிழைக்காதவர்கள்; தாங்கள் போடும் கோலங்கள்கூட எறும்புகளுக்குத் தீனியாக வேண்டும் என்று நினைப்பவர்கள்; தாங்கள் சாப்பிடுவதற்கு முன்னால் காகத்திற்கு சோறு ஊட்டிவிட்டே சாப்பிடுவார்கள்'' - 'இந்து இந்தியா'வின் புகழ் இவ்வாறு வெளியுலகில் பரவிக் கொண்டிருக்கும் நிலையில், 'காந்தி தேச'த்தில் தீண்டத்தகாத மக்களின் உண்மை நிலை என்ன என்பதற்கு ஒரு சான்றுதான் - மேலவளவு படுகொலை. ஆம், இனவெறி இந்தியாவின் 'அகிம்சை' முகம் இது!

படுகொலை செய்யப்பட்ட ஆறு பேரையும் எந்தளவுக்கு சாதி இந்துக்கள் மூர்க்கத் தனமாக வெட்டிக் கொன்றனர் என்பதை, இச்சமூகத்திற்கு உணர்த்துவதற்காகத்தான் - நீதிமன்றத் தீர்ப்புரைகளை (முருகேசன் வெட்டப்பட்டதை மட்டும்) அப்படியே இங்கு வெளியிடுகிறோம்.

இது இறந்தகால வரலாறு மட்டும் அல்ல; பாப்பாபட்டி, கீரிப்பட்டி போன்ற இடங்களில் தேர்தல் நடந்தாலும் இதே ஆபத்து தொடரும் என்று ஆட்சியாளர்களுக்கு உணர்த்தவும்; வெட்டப்பட்ட முருகேசனின் குருதியால் கட்டப்பட்ட தலித் அரசியல் எழுச்சி, நீர்த்துப் போய்விடாமல் தடுக்கவும்; இனி பத்தாண்டுகளானாலும் போராடி வழக்கைச் சந்தித்து, குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தந்தாக வேண்டும் என்ற உறுதியை களப்போராளிகளுக்கு வழங்கவுமே இதை வெளியிடுகிறோம்.

முருகேசன், மூக்கன், ராஜா, பூபதி, செல்லத்துரை, சேவகமூர்த்தி ஆகியோர் யாரால், எப்படி கொல்லப்பட்டனர்? (விசாரணை நீதிமன்றத் தீர்ப்புரையிலிருந்து)

*1. ''ஈனப்பயலான உனக்கு எதற்கு தலைவர் பதவி, எதற்கு நஷ்ட ஈடு?'' என்றபடி, தான் பதுக்கி வைத்திருந்த (அருவாள்) ஆயுதத்தால் அழகர்சாமி முருகேசனின் வலது தோளில் வெட்டினார். பேருந்திலிருந்த பயணிகள் அலறி அடித்து இறங்கி ஓடினார்கள். அழகர்சாமி முருகேசனின் தலையைத் துண்டித்து, துண்டித்த தலையோடு மேற்கு நோக்கி ஓடினார்'' (சாட்சி கிருஷ்ணன்).*

*2. ''மார்க்கண்டன் முருகேசனின் வயிற்றில் குத்தினார். அய்யாவு முருகேசனின் வலது உள்ளங்கையை வெட்டினார். அழகர்சாமியோ முருகேசனின் தலையைத் துண்டித்து, துண்டித்த தலையை எடுத்துக்கொண்டு வடமேற்கு திசை நோக்கி ஓடினார்'' (சாட்சி ஏகாதெசி).*



படிப்பகம்

www.padippakam.com

3. ''முருகேசனின் துண்டிக்கப்பட்ட தலை, பேருந்தின் படிக்கட்டில் வந்து விழுவதைப் பார்த்தேன். அழகர்சாமி அந்தத் தலையை எடுத்துக் கொண்டு போய்விட்டார்'' (சாட்சி மாயவர்).

4. ''சக்கரமூர்த்தி முருகேசனின் கைகளை அருவாளால் வெட்டினார். அழகு முருகேசனை சரமாரியாக வெட்டினார்'' (சாட்சி கல்யாணி).

5. ''அழகர்சாமி முருகேசனை அருவாளால் வெட்டினார். அழகு முருகேசனின் இடது கன்னத்தை வெட்டினார்; பாரதி தாசன் முருகேசனின் இடது கையை வெட்டினார்; நாகேஷ் முருகேசனின் இடது மணிக்கட்டை வெட்டினார். கதிர்வேல், தங்கமணி, கணேசன், மணி ஆகியோரும் முருகேசனின் வயிற்றுப் பகுதி மற்றும் மார்புப் பகுதியில் வெட்டினார்கள். அழகர்சாமி முருகேசனை வெட்டுவதைப் பார்த்தேன். முதல் வெட்டு முருகேசனின் வலது தோளில் விழுந்தது. பின்னர் முருகேசன் இழுக்கப்பட்டு மற்ற அம்பலக்காரர்களும் முருகேசனை வெட்டினார்கள், குத்தினார்கள்'' (சாட்சி பழனி).

6. ''அழகர்சாமி முருகேசனின் வலது தோளில் அருவாளால் வெட்டினார். பேருந்தில் இருந்தவர்கள் அலறி அடித்துக் கொண்டு இறங்கி ஓடினார்கள். அப்போது மேலும் சில அம்பலக்கார சாதியினர் அங்கு வந்து, ஆதிதிராவிடர்களைத் தாக்கினார்கள். இத்தாக்குதல்களினால் முருகேசன், மூக்கன், ராஜா, பூபதி, செல்லத்துரை, சேவகமூர்த்தி ஆகியோர் செத்துவிட்டனர். நான் பார்த்துக் கொண்டிருந்தபோது, முருகேசனின் தலையில்லா உடல் பேருந்திலிருந்து வெளியே வீசி எறியப்பட்டது'' (சாட்சி கணேசன்).

முருகேசனின் உடலில் இருந்த காயங்கள் பற்றி மருத்துவரின் சான்று :

துண்டிக்கப்பட்ட தலையில் காணப்பட்ட காயங்கள்

1. சுமார் 37 வயது மதிக்கத்தக்க, தனியாகத் துண்டிக்கப்பட்ட ஆணின் தலை தனியாகக் காணப்பட்டது. அதைப் பரிசோதித்து ஆய்வு செய்ததில் தலை 4ஆவது மற்றும் கழுத்து எலும்புகளுக்கு இடையே உள்ள குருத்து எலும்பை வெட்டியும் - அதைச் சுற்றியுள்ள தசைகள், ரத்த நாளங்கள், நரம்புகள், உணவுக்குழாய், மூச்சுக் குழாய் மற்றும் தண்டுவடம் ஆகியவற்றை வெட்டிய நிலையில் காணப்பட்டது.

2. வலது தாடையில் வலது கண் புருவத்திற்கு 15 செ.மீ. வெளிப்புறமாக 15 X 15 X எலும்பு அளவு ஆழம் வரை சென்றிருந்தது வெட்டுக்காயம். அந்தக் காயத்தை அறுத்து ஆய்வு செய்தபோது - அதன் கீழ் உள்ள தசைகள், ரத்தநாளங்கள், நரம்புகள் மற்றும் கீழ்த்தாடையும் புறப்பகுதியில் வெட்டிய நிலையில் காணப்பட்டது.



இறந்தும் எழுச்சியூட்டும் போராளி முருகேசன்

3. இடது கன்னத்தில் இடதுபுற புறப்பகுதிக்கு 5 செ.மீ. மேலே இடது கன்னத்தில் 4 X 1 செ.மீ. X தசை அளவு ஆழத்திற்கு ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. அந்தக் காயத்தில் அனைத்து வெட்டுக்காயங்களின் ஓரங்கள் சீராக காணப்பட்டன.

வெட்டப்பட்ட தலையில்லாத முண்டத்தில் காணப்பட்ட காயங்கள் :

பிரேதத்தின் உடல் முழுவதும் மரண விறைப்பு காணப்பட்டது.

1. தலை தனியாகத் துண்டிக்கப்பட்ட நிலையில் அந்த பிரேம் காணப்பட்டது. கழுத்து எலும்பில் 5ஆவது எலும்பு கழுத்து எலும்பு பகுதி துண்டிக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட பிரேதம் - கழுத்துப் பகுதியில் உள்ள தசைகள், ரத்த நாளங்கள், நரம்புகள், உணவுக்குழாய், மூச்சுக்குழாய் மற்றும் தண்டுவடம் ஆகியவற்றில் வெட்டிய நிலையில் காணப்பட்டது.

2. இடது மார்பின் மார்பு காம்புக்கு 5 செ.மீ. கீழே 5 X 15 செ.மீ. இடது மார்பு அறைக்கு 7ஆவது விலா இடைவெளி சென்றிருந்த படுக்கைவாட்டில் சாய்வாக செங்குத்துக்காயம். அந்தக் காயத்தை அறுத்து ஆய்வு செய்தபோது, காயம் அதன் அடியில் உள்ள தசைகள், ரத்தநாளங்கள், நரம்புகள் மற்றும் நுரையீரலின் கீழ் கதுப்பை 4 X 1 செ.மீ. அளவில் ரத்தமும் ரத்தக்கட்டிகளும் காணப்பட்டன. காயம் கீழ் நோக்கியும் பின் நோக்கியும் சென்று இருந்தது.

3. வயிற்றின் முன்பகுதியில் தொப்புளுக்கு மேலே 7 செ.மீ. தூரத்தில் மய்யப் பகுதியில் 5 X 15 செ.மீ. வயிற்று அறைக்குள் சென்றிருந்தது குத்துக்காயம். அந்தக் காயத்தின் வழியே குடல் வெளியேறிய நிலையில் காணப்பட்டன. அந்தக் காயத்தின் முன்முனை வளைவாகவும் வெளிமுனை கூர்மையாகவும் ஓரங்கள் சீராகவும் காணப்பட்டன. அந்தக்காயம் சாய்வாக மேல்நோக்கியும் பின்நோக்கியும் சென்று கல்லீரலில் 4 X 1 செ.மீ. அளவில் முழுமையாக துளைத்துச் சென்று இருந்தது.

4. வலதுபுற வயிற்றின் தொப்புளுக்கு 4 செ.மீ. கீழே வெளிப்புறத்தில் 5.5 செ.மீ. X 1.5 செ.மீ. வயிற்று அறைக்குச் சென்றிருந்த படுக்கை வாட்டில் சாய்வான குத்துக்காயம். அந்தக் காயத்தின் முன்முனை வளைவாகவும் வெளிமுனை கூர்மையாகவும் ஓரங்கள் சீராகவும் காணப்பட்டன. அந்தக் காயத்தை அறுத்து ஆய்வு செய்தபோது, காயம் சாய்வாகப் பின்நோக்கியும் கீழ்நோக்கியும் உள்நோக்கியும் சென்று சிறுகுடலின் நடுப்பகுதியின் முன்சிறுகுடலும், நடுசிறுகுடலும் சந்திக்கும் இடத்திலிருந்து 30 செ.மீ. 70 செ.மீ. இடைவெளியில் முறையே 2.5



படிப்பகம்

www.padippakam.com

செ.மீ. குடல் அறைக்குள்ளும் 2.5 X .5 செ.மீ குடல் அறைக்குள்ளும் சென்ற நிலையில் காணப்பட்டது.

5. இடுப்பு எலும்பு வலதுப்புற மூட்டிலிருந்து 5 செ.மீ. மேலே வயிற்றின் எல்லைப் பகுதியில் வயிற்று அறைக்குள் சென்றிருந்த குத்துக்காயம், அந்தக் காயத்தின் முன்முனை வளைவாகவும் வெளிமுனை கூர்மையாகவும் ஓரங்கள் சீராகவும் காணப்பட்டன. அந்தக் காயத்தை அறுத்து ஆய்வு செய்ததில் காயம் மய்யப் பகுதியை நோக்கிச் சென்று, சிறு குடலின் கடைசிப் பகுதியில் பெருங்குடலும் சிறுகுடலும் சந்திக்கும் இடத்திலிருந்து 20 X 180 செ.மீக்கு முன்புறத்தில் (முன்னதாக) முறையே 2 X 5 செ.மீ. குடல் அறைக்குள் 15 செ.மீ. X 5 செ.மீ. குடல் அறைக்குள் சென்றிருந்தது.



எறும்புக்குக்கூட தீங்கிழைக்காத ஜாதி இந்துக்கள் செய்த படுகொலை

6. வலது தோள்பட்டையின் மேல்பகுதியில் 17 X 8 செ.மீ. X எலும்பு அளவு ஆழத்திற்கு ஒரு பிளந்த வெட்டுக்காயம் காணப்பட்டது. அந்தக் காயத்தை அறுத்து ஆய்வு செய்தபோது - காயம் அதன் கீழ் உள்ள தசைகள், ரத்த நாளங்கள், நரம்புகள் மற்றும் மேல் கை எலும்பில் தலைப் பகுதி பகுதியாக வெட்டிய நிலையில் காணப்பட்டது.

7. இடது முழங்கையின் வெளிப்பகுதியில் 6 X 1.5 செ.மீ. X தசை அளவு ஆழத்திற்குப் படுக்கைவாட்டில் சாய்வான ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

8. காயம் எண் 7க்கு 2 செ.மீ. கீழே 3.5 X 1.5 செ.மீ. X எலும்பு ஆழத்திற்கு ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

9. இடதுபுற முழங்கையின் பின்பகுதியில் 4 X 1.5 செ.மீ. X எலும்பு ஆழத்திற்குப் படுக்கைவாட்டில் சாய்வான ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

10. இடது முன்கையில் முழங்கைக்கு 5 செ.மீ. கீழே 5 X 1 செ.மீ. X தசை அளவு ஆழத்திற்குப் படுக்கைவாட்டில் சாய்வான ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

11. இடது முன்கையின் உள்பகுதியில் மணிக்கட்டுக்கு 8 செ.மீ. மேலே 8 X 3.5 X தசை அளவு ஆழத்திற்குப் படுக்கை வாட்டில் சாய்வான வெட்டுக்காயம் தோல் மேல் நோக்கிய நிலையில் காணப்பட்டது.

12. இடது கையின் பின்பகுதியில் சிறுவிரல் மற்றும் மோதிர விரல் பகுதியில் படுக்கை வாட்டில் சாய்வான வெட்டுக்காயம் காணப்பட்டது.

13. வலது முன் கையில் வெளிப் பகுதியில் 3 X 2.5 செ.மீ. X எலும்பு அளவு ஆழத்திற்குப் படுக்கைவாட்டில் சாய்வான ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

14. வலது முன்கையின் பின்பகுதியில் 4.5 செ.மீ. X 1 செ.மீ. X எலும்பு ஆழத்திற்குப் படுக்கைவாட்டில் சாய்வான வெட்டுக்காயம். அதன் அடியில் உள்ள முன்கையில் உள் எலும்பை பகுதியாக வெட்டிய நிலையில் காணப்பட்டது.

15. முன் கையின் மணிக்கட்டிற்கு மேலே 8 செ.மீ. மேலே 4 X 1 செ.மீ. X தசை அளவு ஆழத்திற்குப் படுக்கை வாட்டில் சாய்வான ஒரு வெட்டுக்காயம்.

16. வலது முன் கையில் மணிக்கட்டிற்கு 4 செ.மீ. மேலே 3.5 X 1 செ.மீ. X தசை அளவு ஆழத்திற்குப் படுக்கைவாட்டில் சாய்வான ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

17. வலது முதல் விரலின் இடைவெளியில் 6 X 1.5 செ.மீ. X எலும்பு ஆழத்திற்குச் செங்குத்து வாக்கில் சாய்வான ஒரு வெட்டுக்காயம். அதன் கீழ் உள்ள தசைகள், ரத்தநாளங்கள், நரம்புகள், முதலாவது விரல் கடை எலும்புப் பகுதியாக வெட்டிய நிலையில் காணப்பட்டது.

18. வலது முழங்காலின் வெளிப்பகுதியில் 10 செ.மீ. X 2.5 செ.மீ. அளவில் எலும்பு அளவு ஆழத்திற்குப் படுக்கைவாட்டில் ஒரு சாய்வான வெட்டுக்காயம். அந்தக் காயத்தை அறுத்து ஆய்வு செய்தபோது, அந்தக் காயங்கள் அதன் அடியிலுள்ள தசைகள், ரத்தநாளங்கள் மற்றும் காலில் வலதுபுற, வெளிப்புற எலும்புப் பகுதியாக வெட்டிய நிலையில் காணப்பட்டது.

19. தொப்புளுக்கு 1 செ.மீ. வெளிப்புறமாக இடதுபுற வயிற்றில் 3 அறுவை காயங்கள். 1 செ.மீ. மற்றும் 1.5 செ.மீ. இடைவெளியில் முறையே 1.5 X 5 X தசை அளவு ஆழத்தில் 2 X .5 செ.மீ. X தசை அளவு ஆழத்தில் 1 X 5 செ.மீ. தசை அளவு ஆழத்தில் மூன்று அறுவைக் காயங்கள் காணப்பட்டன.

20. வயிற்றின் வலதுபுற உட்பகுதியில் தொப்புளுக்கு 8 செ.மீ. மேலே வெளிப்புறத்தில் படுக்கைவாட்டில் சாய்வான ஒரு அறுவை காயம் 3 X 5 செ.மீ. X தசை அளவு ஆழத்தில் காணப்பட்டது. அனைத்து அறுவைக் காயங்களின் ஓரங்கள் சீராகக் காணப்பட்டன.

முருகேசனின் துண்டான தலை மற்றும் துண்டிக்கப்பட்ட உடம்பில் மட்டும் 25 இடங்களில் 25 வகையான வெட்டு / குத்துக்கள் ●

- அடுத்த இதழிலும்

> சென்ற இதழில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளிவந்த நாள் 18.4.06 என்று தவறாக வெளிவந்திருக்கிறது.
>
> தீர்ப்பு வெளிவந்த நாள் : 19.4.2006, இத்தீர்ப்புரையை உயர் நீதிமன்ற நீதிபதிகள் பி. சதாசிவம் மற்றும் என். பால் வசந்தகுமார் ஆகியோர் வழங்கினர்.



படிப்பகம்

www.padippakam.com

# "முள்கிரீடமாய் மாற்றப்படும் அடையாளம்"



தமிழில் இந்து பார்ப்பன - வேளாள மரபிலக்கியக் கட்டு டைப்பில், தலித் கலை இலக்கியப் பதிவுகள் ஆற்றிவரும் பங்கு அளப்பரியது. மடை உடைத்த வெள்ளமெனத் திரண்டோடிய தலித் இலக்கியப் படைப்பாக்கத்திற்கு, தனது தேர்ந்த மொழி ஆளுமையால் செழுமை சேர்த்தவர் தோழர் அழகிய பெரியவன். தமிழ் மரபின் தரம், அழகியல், செய்நேர்த்தி போன்ற இலக்கிய மதிப்பீடுகளுக்கு தலித்திய நோக்கில் உண்மையான அர்த்தத்தை அவரது படைப்புகள் அளித்தன.

வாழ்வுக்கும் மரணத்திற்குமிடையிலான நுண்ணிய இடைவெளியில் காலம் தள்ளும் மக்களின் வேதனைகளை, வெற்றிகளை உயிரோட்டமாகப் பதிவு செய்திருக்கின்றன அழகிய பெரியவனின் படைப்புகள்.

எண்பதுகளின் இறுதியில் இவர் தனது இலக்கியப் பயணத்தைத் தொடங்கினார். இவரது 'தீட்டு' சிறுகதைத் தொகுப்பு, தமிழ் தலித் இலக்கிய ஆற்றாமையைத் தீர்த்து வைத்தது. புதைந்து போன ஒடுக்கப்பட்ட மக்களின் மண்ணுரிமை வரலாற்றைப் பதிவு செய்த 'தகப்பன் கொடி' தமிழக அரசின் விருதைப் பெற்றது பெரிதல்ல; மறைக்கப்பட்ட வரலாற்றை அது மீட்டுருவாக்கம் செய்தது.

கவிதைகளிலும், கட்டுரைகளிலும், சிறுகதைகளிலும் அவர் நிகழ்த்திக் கொண்டிருக்கும் காத்திரமான பங்களிப்பு, உடைந்த மனிதர்களின் உரிமைக் குரலாகவே இருந்து வருகிறது. எளிமையும் உக்கிரமுமாய் கிளம்பும் கவிதை வரிகளில் அழகிய பெரியவனின் ஊனும் உயிரும் மணப்பதை எவரும் உணர முடியும். மண்ணோடும் மக்களோடும் இணைந்து வாழ்ந்து கொண்டிருப்பதாலேயே அவரது எழுத்து, ஆற்றலோடும் தர்க்க பலத்தோடும் வெளிப்படுகிறது.

கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை என்று பன்முக எழுத்துப் பரிமாணத்துடன் இயங்கிவரும் இவர், தமிழகத்தின் இலக்கியம் மற்றும் சமூக, அரசியல் அரங்குகளில் தொடர்ந்து உரையாடல் நிகழ்த்தி வருபவர். இதுவரை இவருடைய ஏழு நூல்கள் வெளியாகியுள்ளன.

சமூக அவலங்களை எதிர்க்கவும், மனித உரிமைகளுக்காகப் போராடவும் அவர் எங்கிருந்து பாடம் கற்றார்? பலம் பெற்றார்?

'மாத்தியமம்' மலையாள இதழுக்கு (சனவரி, 2006) அவர் அளித்த நேர்காணலின் மறுபதிப்பில் இதற்கான பதிலைக் காணலாம்.

நேர்காணல் : டி.டி. ராமகிருஷ்ணன்
புகைப்படங்கள் : புதுவை இளவேனில்



படிப்பகம்

www.padippakam.com

**தங்களின் இளமைக் காலம் பற்றி சொல்லுங்கள்...**

என் இளமைக் காலம் - பேரணாம்பட்டிலும், ஆம்பூரிலுமாகக் கழிந்தன. இந்த இரண்டு ஊர்களும் தமிழகத்தின் வட மாவட்டங்களில் ஒன்றான வேலூர் மாவட்டத்தில் இருப்பவை. அப்பா சின்னதுரை கடும் உழைப்பாளி. அவர் சின்ன வயதில் ஆண்டையிடம் வேலை செய்திருக்கிறார். மாடுகளை மேய்ப்பதற்கும், வயல் வேலைகளைப் பார்ப்பதற்கும் தினமும் அவர் அதிகாலமே போய்விட வேண்டும். இல்லையென்றால் ஆண்டையும், அவருடைய ஆட்களும் வந்து என் அப்பாவை அடித்து இழுத்துப் போவார்களாம். அம்மா சொல்லக் கேட்டிருக்கிறேன். அப்பா இதுபற்றிப் பேசியதில்லை.

அவர் இளைஞரான பின்பு ஆண்டை வேலைக்குப் போவதை விட்டுவிட்டு, பீடி சுற்றும் வேலையைக் கற்றுக் கொண்டிருக்கிறார். பிறகு தோல் பதனிடும் வேலை. இடுப்பில் சணல் துண்டைக் கட்டிக் கொண்டு, வெற்றுடம்போடு, தோல் ஊற வைக்கப்பட்டத் தொட்டிகளில் இறங்கி அவைகளை அலசி எடுத்துப் போட வேண்டும். சுற்றுச் சூழலைக் காரணம் காட்டி, தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மூடப்பட்டபோது - அந்த வேலையும் அவருக்குப் போனது. இப்போது மறுபடியும் பீடி சுற்றுதல். சளைக்காமல் இன்றும்கூட பீடிகளைச் சுற்றிக் கொண்டிருக்கிறார்.

அம்மா கிரேஸ் கமலமும் அப்பாவைப் போலவேதான். வீட்டு வேலைகளையெல்லாம் பார்த்துக் கொண்டு, பீடி இலைகளை வெட்டுவார்கள். பீடி இலை வெட்டுவது என்பது, ஒரு நச்சு பிடித்த வேலை. அறுந்து வராமல் மாலை வரைக்கும் இருந்து கொண்டே இருக்கும். ஒரே இடத்தில் உட்கார்ந்து பல மணி நேரங்கள் அந்த வேலையைச் செய்ய வேண்டும். இந்தச் சூழலில் நான் இருந்தால் படிக்க மாட்டேன், நாலெழுத்து படிக்கக் கற்றுக் கொண்டால், அரசாங்க வேலைக்குப் போகலாம் என்றெல்லாம் அம்மா நினைத்துக்கொண்டு ஆம்பூரில் உள்ள பாட்டி வீட்டில் என்னை விட்டுவிட்டார்கள். வயசான பாட்டியோடு, மாமாக்களின் வீடுகளில் வளர்ந்தேன். எங்கள் ஊரின் பாலாற்றங்கரையில் பாட்டிக்கு கொஞ்சம் நிலம் இருந்தது. அதில் பாட்டி கீரைகளைப் பயிர் செய்வாள். ஊரிலிருந்தெல்லாம் ஓடிவந்து ஆற்றில் விழும் சாக்கடையைத்தான் கீரைகளுக்குப் பாய்ச்சுவோம். அந்தக் கீரைகளை விற்றுதான் எனக்குச் சோறு போட்டாள் பாட்டி.

> **சாதியையும் அதன் கொடுமைகளையும் விமர்சித்து எழுதப்படும் படைப்புகள் - முகச் சுளிப்புக்கும், ஒதுக்குதலுக்கும் உள்ளாக்கப் படுகின்றன. அவை மீது திறந்த மனதுடனான, விரிவான விமர்சனங்கள் எதுவும் முன்வைக்கப் படுவதில்லை.**

பெருங்குடிகாராக இருந்த ஒரு மாமாவின் வீட்டில் சில ஆண்டுகள் இருந்தபோது - கிண்டலுக்கும், கேலிக்கும், வேறு சில கொடுமைகளுக்கும் நான் உள்ளானேன். இது, கடும் மன உளைச்சலை எனக்குத் தந்தது. பன்னிரெண்டாம் வகுப்பு வருவதற்குள் மூன்று பள்ளிகள் மாறினேன். பள்ளிப் படிப்பின்போது இரண்டு ஆண்டுகள் ஒரு கிறித்துவ விடுதியிலும், கல்லூரிப் படிப்பின்போது மூன்று ஆண்டுகளை ஆதிதிராவிடர் நல விடுதியிலும் கழித்தேன். இளைமைக் காலம் முழுக்க வறுமை தொடர்ந்து வந்தது. சிறு வயதில் வீட்டைப் பிரிந்த ஏக்கம் என்னிடம் அதிகமாய் இருந்தது. கல்லூரி முடித்து திரும்பியபோது, ஊர் எனக்கு அன்னியமாய்த் தெரிந்தது. உறவினர்களும், ஊராரும் வேற்றாள்களாய்த் தெரிந்தனர். இந்த உனர்வு மறைந்து இயல்பு நிலைக்கு வர பல காலம் ஆனது.

**இலக்கியத்தின்பால் தாங்கள் ஈர்க்கப்படக் காரணம் என்ன?**

என் குடும்ப மரபும், எனக்கு அமைந்த சூழலும்தான் என்னை இலக்கியத்தில் ஆர்வம் கொள்ளச் செய்திருக்கும் என்று நினைக்கிறேன். என் இரண்டு தாத்தாக்களில் ஒருவர் பாடகர் என்றும், ஒருவர் கூத்துக்காரர் என்றும் பெயரெடுத்தவர்கள். அப்பாவைப் பெற்ற தாத்தா நிறைய கூத்து பற்றிய நூல்களை வைத்து படித்துக் கொண்டிருப்பார். அவரை எல்லோரும் 'வாத்தியார்' என்றுதான் அழைப்பார்கள். கூத்து நாடகங்களையும், வீர விளையாட்டுகளையும் கற்றுத் தருகின்ற ஒருவரைத்தான் எங்கள் ஊரில் அப்படி அழைப்பார்கள். இன்னொரு தாத்தா தனிப்பாடல்களையும், சித்தர் பாடல்களையும், சிற்றிலக்கியப் பாடல்களையும் பாடுவதில் வல்லவர். ஆதிக்க சாதிக்கார வாத்தியார் ஒருவரிடம் போட்டியிட்டு பாடி - வென்றதோடு, அய்ந்து ரூபாயை பரிசாகப் பெற்றிருக்கிறார். இது என் மரபு எனில் நான் வளர்ந்த சூழலும்கூட, புத்தகங்கள், இலக்கியம் என்றே அமைந்துவிட்டது.

பாட்டி வீட்டில் ஒரு மாமாவின் சேகரிப்பில் நிறைய புத்தகங்கள் இருந்தன. அவர் அறுபதுகளின் இடைப்பகுதியில் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் எம்.ஏ. தத்துவம் படித்தவர். மரபுக் கவிதைகளையும், சிறு கதைகளையும், கிறித்துவப் பாடல்களையும் அவர் எழுதியிருக்கிறார். அவருடைய நூல்களைப் பராமரிப்பது என் விருப்பமான வேலையாகும். அப்போது நூல்களைப் படிப்பது, பயன்படுத்துவது என்ற பழக்கம் உருவானது.

ஆம்பூர் தேவலாபுரம் பள்ளியில் ஆறாம் வகுப்பு படிக்கும் போதிருந்தே 'காமிக்ஸ்' படிக்கின்ற ஆர்வம் இருந்தது. வீர தீர சாகசக் கதைகளையும், மந்திரத் தந்திரக் கதைகளையும் அப்போது வெறியுடன் படித்தேன். ஏசுதாஸ் என்கிற நண்பன்தான் அப்போது அதுபோன்ற புத்தகங்களை நிறைய வாங்கிக் கொண்டு வந்து கொடுப்பான். பள்ளியிலே பாடம் நடக்காத நேரங்கள், விளையாட அனுமதிக்கிற நேரங்கள் எல்லாவற்றிலும் இந்தக் கதைகளைப் படிப்பதுதான் ஒரே வேலை. தாழ்வுணர்ச்சியும், கூச்சமும் நிரம்பியிருந்ததால் விளையாட்டுகள் மீது ஆர்வம் போனதில்லை. பள்ளியில் தமிழ் ஆசிரியராக இருந்த சுப்பிரமணி அய்யா, விடுமுறைக் காலங்களில் எந்த நூல்களைப் படித்தீர்கள் என்று கேட்பார். அவருக்குப் பதில் சொல்லிப் பாராட்டுப் பெற வேண்டும் என்பதற்காகப் படிப்பேன். இப்படிதான் வாசிப்பதில் ஆர்வம் உண்டானது. சிறு வயதிலேயே கதைகளை எழுதிப் பார்க்க வேண்டுமென நினைப்பேன். எழுத்தாளனாக வேண்டும் என்ற ஆசை எனக்கு அப்போதே இருந்தது.

**நீங்கள் எப்போது எழுதத் தொடங்கினீர்கள்?**

தேவநேயப் பாவாணர் அவர்கள் சிறிது காலம் பணியாற்றிய ஆம்பூர் கன்கார்டியா பள்ளியில், மேல்நிலை வகுப்பில் படித்த போது என் முதல் சிறுகதையை எழுதினேன். அப்போதெல்லாம் பத்திரிகைகளுக்கு கதைகளை இன்று அனுப்பினால், நாளையே போட்டுவிடுவார்கள் என்ற நினைப்பு எனக்கு இருந்தது! அந்தக் கதையை 'குமுதம்' இதழுக்கு அனுப்பியிருந்தேன். அது பிரசுரமாகவில்லை. கல்லூரி முடிப்பதற்குள் ஒன்றிரண்டு சிறுகதைகளை



படிப்பகம்

www.padippakam.com

எழுதியிருந்தேன். அவை எதுவும் பிரசுரமாகவில்லை. கவிதைகளையும் அதே காலங்களில்தான் எழுதினேன். வேலூர் ஊரிசு கல்லூரி ஆண்டு மலரில் என் கட்டுரை ஒன்று முதன் முதலாகப் பிரசுரமானது. மூன்றாம் ஆண்டு இறுதியில், கல்லூரி முத் தமிழ் மன்றம் நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றேன். மிகுந்த தயக்கங்களும், தாழ்வுணர்ச்சியும் கொண்டிருந்த எனக்கு நான் பரிசு வாங்கிய நிகழ்வு நம்பிக்கையை அளித்தது. கல்லூரி முடித்த மறு ஆண்டே (1989) என் முதல் சிறுகதை மாவட்ட அளவில் வெளிவந்த ஒரு பத்திரிகையிலும், முதல் கவிதை 'அரும்பு' இதழிலும் வெளியானது.

**தமிழ்ச் சூழலில் ஒரு தலித் எழுத்தாளர் எத்தகைய சவால்களை சந்திக்க வேண்டியிருக்கிறது?**

தமிழ்ச் சமூகத்தில் ஒரு தலித் எழுத்தாளன் முதலில் எதிர்கொள்வது அடையாளச் சிக்கலைத்தான். விடுதலையை விரும்பும் கலக மனோபாவத்துடன் அவர்கள் பூணும் தலித் என்ற அடையாள மொழி, ஒரு முள்கிரீடமாக அவர்கள் மீதே இருத்தப்படுகிறது. சமூகத்தின் பொதுப் புத்தியிலும், ஆழ்மனங்களிலும் புரையோடி இருக்கும் சாதியத்தை - தலித் எழுத்தாளர்கள் தம் எழுத்தின் வழியே வெளிக்கொணர்கையில் வெறுப்பையும், எதிர்ப்பையும் எதிர்கொள்கிறார்கள். சில நேரங்களில் தலித்துகளிடமிருந்தேகூட இவ்வகையான எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. தம் அடையாளத்தை மறைத்துக் கொண்டு, நிலவும் சாதிய சமூகத்துக்கு ஏற்றபடி நெகிழ்ச்சியான வாழ்வை மேற்கொள்ளத் தொடங்கும் தலித்துகள், ''எதுக்கு இதையெல்லாம் எழுதறீங்க? நாமே நம்மைப் பத்தி இப்படி எழுதிக்கிறது அசிங்கம்'' என்கிறார்கள்.

**"தமிழ் இலக்கியத்தின் முழுமையில், தனித்த கூறுகளுடன், ஓர் அங்கமாகத்தான் தலித் இலக்கியம் விளங்குகிறது. இந்த அம்சம் இங்கு மறுக்கப்படுகிறது."**

தலித் அல்லாதார் பெரும்பாலும், தலித் பிரதிகளை ஒரு துவேஷமாகப் புரிந்து கொள்கிறார்கள். இதன் காரணமாகவே நான் வசிக்கும் பகுதியில் இருக்கும் தலித் அல்லாத என் நண்பர்கள் யாரும் என் படைப்புகள் குறித்துப் பேச முன்வருவதில்லை. அவர்களிடம் எப்போதும் ஒரு மவுனம் இருக்கும். இது, பெரும்பாலும் பல கட்டங்களிலும் தலித்துகளுக்கு எதிராகக் கடைப்பிடிக்கப்படும் மவுனம்தான். ''இந்த சாதி அம்சத்தை மட்டும் எழுதாம விட்டுட்டீங்கன்னா நல்லா வருவீங்க'' என்று எனக்கு புத்தி சொல்பவர்கள், அவர்களில் நிறைய இருக்கிறார்கள். தானும், தன் சமூகமும் பட்ட அவமானங்களை எழுத்தில் முன்வைக்க தலித் எழுத்தாளர்களுக்கு அதிக துணிச்சல் வேண்டியிருக்கிறது.



சாதியையும் அதன் கொடுமைகளையும் விமர்சித்து எழுதப்படும் படைப்புகள் - முகச்சுளிப்புக்கும், ஒதுக்குதலுக்கும் உள்ளாக்கப்படுகின்றன. அவை மீது திறந்த மனதுடனான, விரிவான விமர்சனங்கள் எதுவும் முன்வைக்கப்படுவதில்லை. ஆதிக்க சாதிக்காரர்கள் எழுதுவது; உயர்ந்த அம்சங்களைப் பற்றி எழுதுவதுதான் இலக்கியம் என்ற மனோபாவம் தொடர்வதே இதற்குக் காரணம். 'சாதிய ஆதிக்க மரபுகளை எழுதுவதுதான் இலக்கியம்; எதிர் மரபுகளை எழுத்தில் கொண்டு வருவது இலக்கியமாகாது. அவை வெறும் குப்பைகள்' என்ற மரபு வழிப்பட்ட ஆதிக்கச் சிந்தனை, தமிழ் இலக்கிய உலகில் இன்றும் நிறைந்திருக்கிறது. இதன் காரணமாக, தலித் படைப்புகள் மறைமுகமான ஒதுக்குதலுக்கு உள்ளாக்கப்படுகின்றன.

தலித் எழுத்தாளர்களுக்கு எழுத்தில் உள்ள மற்றொரு சவால், தமது எழுத்தின் தன்மையை கவனத்தில் கொள்வது. சாதியக் கொடுமைகளைத் தமது படைப்புகளில் லகுவாகவும், நேர்த்தியுடனும், எழுத்துக்குரிய அம்சங்களோடும் சொல்ல வேண்டியிருக்கிறது. இல்லையேல் பிரச்சார தொனியில் இருக்கிறது என்ற குற்றச்சாட்டுடன் அவர்களின் படைப்புகள் ஒதுக்கப்பட்டு விடுகின்றன. தலித் படைப்புகளுக்கே உரிய தனி அழகியலை இங்கு யாரும் புரிந்து கொள்ளவோ, கணக்கில் கொள்ளவோ தயாரில்லை. எனவே, ஏற்கனவே நிலவும் இலக்கியப் பார்வையை - தலித் படைப்புகளின் மீது பொருத்தி மதிப்பீடுகளை செய்கின்றனர்.

இப்போது இன்னொரு வகையான வசதியும் ஏற்பட்டுவிட்டது. தலித் படைப்புகளை ஒரு ஒதுக்கீட்டுக்குள் அடைத்து விடுகிறார்கள். தலித் எழுத்தாளர்களில் பலரும் தமது தரமான படைப்புகளின் ஊடேதான் படைப்பாளிகளாக நிற்கிறார்கள். தமிழ் இலக்கியத்தின் முழுமையில், தனித்த கூறுகளுடன், ஓர் அங்கமாகத்தான் தலித் இலக்கியம் விளங்குகிறது. இந்த அம்சம் இங்கு மறுக்கப்படுகிறது.

நவீன கவிதை, நவீன கதை என்கிற ஒன்று சாதியச் சிக்கலையோ, மண் சார்ந்த அடையாளத்தையோ, பெண்ணியச் சிக்கலையோ பேசாத ஒன்றாகத்தான் இருக்கும் என்ற இலக்கியப் பொதுப்புத்தி இங்கே நிலவுகிறது. இதனால் வெளிப்படையான அடையாளத்தைப் பூண்டு வரும் படைப்புகளின் 'வெளி' சுருக்கப்படுகிறது. அவைகளுக்கான உரிய கவனிப்பும், அங்கீகாரமும் கிடைக்காமல் போய்விடுகின்றன. வெகுசன இதழ்களிலும், ஊடகங்களிலும் தலித் எழுத்தாளர்களுக்கான இடம் மிக மிகக் குறைவுதான். வெளிப்படையான சாதி ஆதிக்க அடையாளத்துடன் பிற எழுத்தாளர்கள் பேசினாலோ, எழுதினாலோ அதை வெளியிட அவை தயங்குவதில்லை. ஆனால், ஒரு தலித் எழுத்தாளரின் படைப்பு என்று வருகிறபோது மட்டும் சாதி அடையாளம் அவர்களுக்கு ஒரு தடையாகப்படுகிறது.

தலித் எழுத்தாளருக்கு இங்கு இருக்கும் மற்றொரு சவால், தமது எழுத்துகளை நூலாக்குவது. நூல்கள் பதிப்பிக்கப்படுவது பெருகியிருந்தாலும், இன்னும் பல தலித் எழுத்தாளர்களுக்குப் பதிப்பு வாய்ப்புகள் போதுமானதாக இல்லை என்பதே உண்மை.

- பேட்டி தொடரும்



படிப்பகம்

www.padippakam.com



# தகுதி, திறமை என்று கூச்சல் போடுவது அயோக்கியத்தனம்


நான் சாதாரணமான ஆள்தான். என் கூட்டத்தில் வந்து கூடியிருக்கிறீர்கள். சாதாரணமான ஆள்தான் என்றாலும் எப்படிப்பட்டவன் என்று உங்களுக்குத் தெரியும். நீங்கள் கும்பிடுகிற சாமிகளான ராமனையும், பிள்ளையாரையும் உடைத்து தூள்தூளாக ஆக்கினவன். பெரும்பாலோர் மதிக்கிற ராமனையும் - அவன் ஒரு அயோக்கியன். அவன் மனைவி சீதை ஒரு ஒண்ணா நம்பர் விபச்சாரி; 'அவள் சினையானதே' ராவணனால்; அதுவும் இலங்கையில் என்பதை ராமாயணத்திலிருந்தே எடுத்துக்காட்டி வருகிறவன். 20, 30 வருஷத்திற்கு முன்பாகவே நான் சாஸ்திரத்தை, மநுதர்ம சாஸ்திரத்தை நெருப்பிலே போட்டு எரித்தவன். இந்த ராமாயணத்தை எரிக்கணும் என்று சொன்னவன். எல்லோரும் ஜனநாயகம் (மக்களாட்சி) என்று சொல்வதை - நான் முழுப் பித்தலாட்டம், மக்களைப் பிடித்த பேய் என்று சொல்லுகிறவன்.

சாதி ஒழியணும் என்பதுதான் எங்களுடைய முதலாவது கொள்கை. பார்ப்பானும் இருக்கக்கூடாது; பறையனும் இருக்கக்கூடாது; மனிதன் தான் இருக்கணும் என்று சொல்லுகிறோம். ஜனநாயக அரசாங்கம் என்று சொல்லுகிறான். சாதி காப்பாற்றப்படும் என்பது, மூலாதார உரிமை என்று அரசமைப்புச் சட்டத்திலே எழுதி வைத்துக் கொள்கிறான். அதில் நாம் சூத்திரன் - நாலாஞ்சாதி மக்கள் - பார்ப்பானுடைய வைப்பாட்டி மக்கள்! இதுக்குப் பேர் ஜனநாயகமா? நாம் 100க்கு 97 பேர். அவன்கள் 100க்கு 3 பேர். அவனிடம் ஆட்சி இருக்கிறது. அவன் சாதியைக் காப்பாற்ற சட்டம் செய்து வைத்துக் கொண்டிருக்கிறான். இந்த நாட்டிலே இருக்கிற மற்றக் கட்சிக்காரனெல்லாம் அவன் போடுகிற எலும்புத் துண்டைக் கடித்துக் கொண்டு, அந்தச் சட்டத்தின் மீது சத்தியம் பண்ணிக் கொடுத்துவிட்டு அவனுடைய சட்டசபையில் உட்காருகிறான். அவனுக்கு சாதி ஒழிய வேண்டும் என்ற எண்ணம் இருக்க முடியுமா? சட்டத்தை மாற்ற வேண்டும் என்றால், கிளர்ச்சி தவிர வேறு ஏதாவது வழி நமக்கு இருக்கிறதா?

20 கோடி ரூபாய் இந்த வருஷத்து கல்விக்கு செலவாகிறதே! இவையெல்லாம் யாருடைய பணம்? நம் பணம்தான்; ஆனால் இதனால் படிக்கிறவன் நூற்றுக்கு நூறு பார்ப்பான் தானே? நாம் வரி கொடுத்துத்தானே இப்படிப் பணம் செலவிட முடிகிறது? நம்மிடத்தில் வரி வாங்கணும் என்றால், அவன் தேவையை உத்தேசித்து அல்ல. நம்மைப் 'பாப்பராக' (பணம் இழந்தவன்) ஆக்கவேணும்; பிச்சையெடுக்கும்படிச் செய்ய வேண்டும் என்பதைத் தவிர வேறு என்ன? ஏன் நமக்குப் படிப்பு வராதா? நம் வாயிலே மாத்திரம் படிப்பு நுழையாதா?

இவற்றையெல்லாம் மீறி நம் பையன்கள் இப்போது படித்து விடுகிறார்கள். அதைத் தடுக்கவும் சூத்திரனைப் படிக்க விடக்கூடாது என்பதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ, அத்தனையும் பார்ப்பான் செய்கிறான். வெளிப்படையாகச் சொல்லவில்லை. வேறுவிதமாக அதையே சொல்லுகிறான். பள்ளிக்கூடத்திலே தகுதி, திறமை அடிப்படையில் இனிமேல் சேர்க்கணும்; ஜாதி அடிப்படையில் பின்தங்கியவர்கள் இவர்கள் என்பதைப் பார்த்து, எந்தவிதச் சலுகையும் கூடாது என்பதாக ஓர் உத்தரவு போடணும் என்கிறான். இன்னும் நூற்றுக்கு 70 - 80 மார்க் வாங்கினவனைத்தான் சேர்க்கணும் என்கிறான்.

பார்ப்பானைத் தவிர மற்றவரைச் சேர்க்கணும் என்றால் திறமை இல்லையே என்று சொல்லி விடுகிறான். நம் பையன்கள் டாக்டருக்குப் படிக்கணும்; எஞ்சினியருக்குப் படிக்கணும் என்றால் நூற்றுக்கு 60 மார்க்கு வாங்கணும் என்கிறான். நம் பையன்கள் 35 மார்க் வாங்குவதே மிகவும் கடினம்; இவனை 60 மார்க் வாங்கு என்றால் அது எப்படி முடியும்? சாதாரணமாகப் பாஸ் பண்ணுவது எதற்கு? யோசிக்க வேண்டாமா? இன்றைக்குப் போத்தனூரிலே ஒரு வீட்டிலே தங்கியிருந்தேன். 70,000 பெறுமான மதிப்புள்ள பெரிய வீடு; கட்டி 30 வருஷமாயிற்று; இன்றும் நன்றாகத்தான் இருக்கிறது; இதை என்ன படிச்சு 60 மார்க் வாங்கிய தகுதி, திறமை உள்ள எஞ்சினியர்தான் கட்டினாரா?



டாக்டர், எஞ்சினியர் என்று ஆயிரம் இரண்டாயிரம் கொள்ளையடிக்கிற உத்தியோகம் எல்லாம் நமக்குக் கிடைக்காதபடி என்னென்ன செய்ய வேண்டுமோ, அத்தனையும் செய்து அவனே படிக்கும்படியான அளவுக்கு வசதி செய்து கொண்டான். வேறு ஒரு நாடாக இருந்தால், இந்த மாதிரி அக்கிரமம் செய்கிற பார்ப்பானைச் சுட்டுத் தள்ளியே இருப்பார்களே! சாதாரணமாக நாட்டு வைத்தியம் பண்ணணும் என்றால், தனியாகப் பிராக்டீஸ் (தொழில்) செய்கிறவர்கள் ஒரு சர்டிபிகேட் இருந்தால் போதுமானது. ஓமியோபதி டாக்டர் என்கிறான். ஆனால், அலோபதி ஆங்கில மருத்துவர் டாக்டர் படிப்பு படிக்கணும் என்றால் 60 மார்க் வாங்கணும் என்றால் என்ன அர்த்தம்?

3 பேர் வேலைக்கு வரணும் என்றால் 30 வருடமாக நாம் முட்டிக் கொள்ள வேணும். பார்ப்பான் தகுதி போச்சு, திறமை போச்சு என்று கூச்சல் போடுகிறான் என்றால் - இது எவ்வளவு அயோக்கியத்தனம்? இந்த அயோக்கியத்தனத்திற்குக் கேள்வி கேட்பாரே இல்லையே! ஒரு பயலும் இதை எடுத்துக்காட்டி இதற்குப் பரிகாரம் தேடணும் என்று வருவதே கிடையாதே! நம்முடைய நிலைமை அப்படி இருக்கிறது.

*சேலம் - பொட்டி ரெட்டிப்பட்டியில் 25.3.1959 அன்று ஆற்றிய உரை*

**"தகுதியும், திறமையும் தான் முக்கியமா? அதை அளப்பதற்கு தர்மா மீட்டர் பார்ப்பான்தானா? நம்மவன் படித்தால் என்ன, இவன் அப்பன் வீட்டு முதல் குறைந்து போகிறது? முதலிலே 'இண்டர்மீடியெட்' படித்தால் போதும் என்றான். இப்போது என்ன என்றால், நீ அது பாஸ் பண்ணியிருந்தாலும் 60 மார்க் வாங்கணும் என்றால் என்ன போக்கிரித்தனம்! மாடு மேய்க்கிறவனெல்லாம் மந்திரியாகி விடுகிறான்! அவன்தான் பெரிய பெரிய எஞ்சினியரை எல்லாம் நிர்ணயிக்கிறான். சீப் எக்சிகியூடிவ் எஞ்சினியர் போன்ற பலவித உத்தியோகஸ்தர்களையும் நியமிக்கிறான் என்றால் - அதற்கு மாத்திரம் தகுதி, திறமை வேண்டாமா?"**



படிப்பகம்

www.padippakam.com

Dalith Murasu, Tamil Monthly Regd. No. TN/CH(C)/43/04-06 Posted at Patrika Channel Egmore RMS/1 Periodicals. Registered with the Registrar of News Papers for India Under No. TNTAM/2003/11948. Licensed to Post without Prepayment Licence No. 32

# அம்பேத்கர் கல்வி

**தமிழ் நாடு இறையியல் கல்லூரி**
(Affiliated to Madurai Kamaraj University)
**32-சி, பாரதிதாசன் சாலை, அரசரடி, மதுரை - 625 016**
**தொலைபேசி : 0452 - 2602352, 2302199**
**தொலை நகல் : 0452 - 2601424**
**மின் அஞ்சல் :** principal_tts@touchtelindia.net
drc_mdu@sify.com

மதுரை காமராசர் பல்கலைக் கழக அங்கீகாரத்துடன் தமிழ் நாடு இறையியல் கல்லூரியின் தலித் ஆதார மய்யம், கடந்த 2004 - 2005 ஆம் ஆண்டிலிருந்து பாபாசாகேப் அண்ணல் அம்பேத்கரின் சிந்தனைகளைப் பாரெங்கும் பரப்பும் வகையில், அம்பேத்கர் கல்வியை நடத்தி வருகிறது. இக்கல்வித் திட்டத்தின் கீழ் பட்டயப்படிப்பு மற்றும் சான்றிதழ் படிப்பு சிறப்பாக நடந்தேறி வருகிறது என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த ஆண்டு 2006 - 2007 அம்பேத்கர் கல்வியைப் பயில விரும்புவோருக்கான விண்ணப் பங்கள், சூன் 1 முதல் வழங்கப்படுகின்றன. எனவே, விண்ணப்பங்கள் பெற விரும்புவோர் ரூ. 50/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். அஞ்சலில் பெற விரும்புவோர் ரூ. 50/-அய் பண அஞ்சலாகவோ (Money Order) வரைவோலையாகவோ (D.D.) 'தலித் ஆதார மய்யம்' என்ற பெயரில் எடுத்து, இயக்குநர், தலித் ஆதார மய்யம், 32-சி, பாரதிதாசன் சாலை, அரசரடி, மதுரை - 16 என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

**சூலை 31 வரை விண்ணப்பங்கள் வழங்கப்படுகின்றன.**
**விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 31.08.2006**

**நடைபெறும் வகுப்புகள் :**

**1. அம்பேத்கர் கல்வி - பட்டயப் படிப்பு - 1 ஆண்டு**
(Diploma Course in Ambedkar Studies)
கல்வித் தகுதி : இளங்கலை பட்டப்படிப்பு
கல்விக் கட்டணம் : ரூ. 1000/- மட்டும்
பயிற்று மொழி : தமிழ்

**2. அம்பேத்கர் கல்வி - சான்றிதழ் படிப்பு - 1 ஆண்டு**
(Certificate Course in Ambedkar Studies)
கல்வித் தகுதி : +2 (பன்னிரெண்டாம் வகுப்பில் தேர்ச்சி)
கல்விக் கட்டணம் : ரூ. 700/- மட்டும்
பயிற்று மொழி : தமிழ்

குறிப்பு :

- இருபாலரும் இணைந்து கற்கலாம்
- அஞ்சல் வழி கல்வி கிடையாது
- மாதம் இருமுறை வகுப்பு நடைபெறும்

**முனைவர் பா. மோகன் லார்பீர்**
முதல்வர்

**தொடர்பு முகவரி :**

**தலித் ஆதார மய்யம், 32-சி, பாரதிதாசன் சாலை, அரசரடி, மதுரை - 16**
**பேசி : 0452 - 2302199**

என் மக்கள் பயணிக்கும் இந்த ஊர்தியை மிகவும் சிரமப்பட்டே, இப்போதிருக்கும் இடத்திற்கு கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறேன். மாண்புடனும் சுயமரியாதையுடனும் என் மக்கள் வாழ நினைத்தால், அவர்கள் கிளர்ந்தெழ வேண்டும். என் மக்களும் என் இயக்கத்தினரும் அந்த ஊர்தியை இழுத்துச் செல்ல முடியாமல் போனால், அது இப்போது எங்கே நிற்கிறதோ அங்கேயே விட்டு விடட்டும். ஆனால், எந்தச் சூழலிலும் அந்த ஊர்தியை பின்னோக்கித் தள்ளிவிட வேண்டாம். இதுவே என் செய்தி.

- டாக்டர் அம்பேத்கர்

படிப்பகம்